கலைக்கதிர்

நவம்பர்... '64

நேரு மலர்

DPF பம்புகள்

உணவு உற்பத்தியில்
முன்னணியில் நிற்பவை



பால்பேரிங்குகள் பொருத்தப்பட்ட
'DPF' பம்புகள் 2" முதல் 8" வரை
எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிட்.,
பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்-1.

போன்: 2419 — தபால் பெட்டி: 278 — தந்தி: ''மோட்டார்பம்பு''

தந்தி: "குமரன்" டெலிபோன்: { மில் : 3296
ஆபீஸ் : 2933 }

தி குமரன் மில்ஸ் லிமிடெட்,

பீளமேடு P. O., கோயமுத்தூர்-4.

*

இயங்கும் கதிர்கள் 24,924

*

நாங்கள் தயாரிப்பவை:-

Nf . 34 (40.2^s) இந்தியன்
Nf . 38 (44.9^s) ,,
Nf . 42 (49.6^s) ,,
Nf . 50 (59.1^s) ,,
Nf . 52 (61.4^s) எல்பாசோ

ஷை நூல்கள் கோன்களிலும் கிடைக்கும்

*

MANAGING AGENTS :

Messrs. P. S. G. VENKATASWAMY NAIDU & Co.

Sri Ranga Vilas Ginning & Oil Mills,

POST BOX No. 151

Grams: "OILMILL" **COIMBATORE** Phone: 4151

*

MANUFACTURERS OF:

GROUNDNUT OIL & CAKE

COTTON & COTTON SEEDS

COTTON SEED OIL AND COTTON SEED CAKE

*

SUPPLIERS:

IN INDIA AND ABROAD

EDIBLE QUALITY GROUNDNUT MEAL IS OUR SPECIALITY.

Note:- *One of the Plants donated by "UNICEF" for the Production of Edible Groundnut Meal is now in Production.*



திரு. நேரு இந்திய மக்களுக்கு வானொலியில் பேசும் காட்சி



திரு. ராதாகிருஷ்ணன், திரு. லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருடன் திரு. நேரு.

கலைக் கதிர்

ஆசிரியர்: ஜி. ஆர். தாமோதரன்

மலர் 16 நவம்பர் - 1964 இதழ் 11

தனிப்பெரும் தலைவர் — — 2

அமைதிப்பணியில் நேரு — — 8
— முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம்

அறிவியல் துறையில் நேரு — — 12
— திரு. ஜி. ஆர். தாமோதரன்

நேரு ஓர் எழுத்தாளர் — — 17
— திரு. தெ. பொ. மீனட்சிசுந்தரனர்

புதிய இந்தியாவை உருவாக்கிய சிற்பி — — 22
— பி. ஸ்ரீ.

நேரு ஒரு வரலாற்றுசிரியர் — — 30
— திரு. கி. ர. அநுமந்த்

நேருவுக்கு நம் அன்பளிப்பு — — 37
— திருமதி. சௌந்திரம் ராமச்சந்திரன்

நேரு உலகத்தின் பொதுச்சொத்து — — 38
— திரு. நாஞ்சில். கி. மனேகரன்

மொழியும் நேருஜியும் — — 40
— திரு. பி. ஜி. கருத்திருமன்

நேரு இல்லா உலகு — — 47
— 'கமல்'

எழிற் பூ! — — 49
— 'தமிழன்பன்'

சிற்பியின் செல்வி — — 50
— திரு. நா. கோவிந்தராசுலு

நேரு ஒரு விஞ்ஞானி — — 59
— திரு. ஆர். இராமசாமி

நேருவும் குழந்தைகளும் — — 64
— திருமதி. சகுந்தலா கணேசன்

நேரு ஒரு சிறந்த மனிதர் — — 67
— திரு. ம. பொ. சிவஞானம்

நேருவின் இறுதி விருப்பம் — — 70

நேருவின் அயல் நாட்டுக் கொள்கை — — 71
— திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி

இது செய்தி — — 80

கலைக்கதிர் இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துக்கட்கு, அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

தனிப்பெருந் தலைவர்

ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாறு இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறும், விடுதலை இந்தியாவின் வரலாறுமாகும். அவர் வாழ்க்கை முழுமையும் நம் உள்ளம் கவரும் நிகழ்ச்சிகள் நிறைந்தவை. தற்போது நம் நாடு உயரிய முறையில் உருவாகி உலக நாடுகள் பலவற்றின் பெரு மதிப்பைப் பெற்றிருப்பது நேரு அவர்கள் நம் நாட்டுக்கு ஆற்றிய செயற்கரும் செயல்களாலேயேயாம் என்பதை யாவரும் அறிவர்.

ஜவகர்லால் 1889-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று பிறந்தார். பதினொரு ஆண்டுகளாக அவர் தம் பெற்றோருக்கு ஒரே குழந்தையாக வளர்ந்தார். அவருடைய குழந்தைப் பருவத்தில் தந்தை மோதிலால் நேருவின் பணியாளர் மொபரக் அலி என்பவர் ஜவகருக்கு அரேபிய இரவுக் கதைகளையும் 1857-ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தியக் கலக நிகழ்ச்சிகளையும் சொல்லுவார். ஜவகரின் தாயாரும் அத்தையாரும் இராமாயண, மகாபாரதக் கதைகளை அவருக்குக் கூறுவதுண்டு. அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த எப். டி. புருக்ஸ் என்பவர் அவருக்கு வீட்டிலேயே கல்வி கற்பித்தார். அக்காலத்தில் ஜவகர் பல நூல்களைப் படிப்பதற்குப் பேரார்வம் கொண்டு டிக்கன்ஸ், தேக்கரே, வெல்ஸ், மார்க் ட்வெய்ன், முதலிய பேரறிஞர்களுடைய நூல்களைப் படித்தார்.

1905-இல் மோதிலால் நேரு தம் குடும்பத்தோடு இங்கிலாந்துக்குக் கப்பலில் பயணமானார். ஜவகரை ஹாரோவிலுள்ள பொதுப் பள்ளியில் சேர்ப்பதற்கென்றே அப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அப் பள்ளியில் ஜவகர் இரண்டாண்டுகள் கல்வி பயின்றார். அச் சிறுவயதிலேயே ஜவகர் பிரிட்டிஷ் அரசியலை நன்கு அறிந்திருந்தார். அதோடு இந்தியாவில் நிகழ்ந்த லோகமான்ய திலகரின் சுதேசி இயக்கம், லாலா லஜபதி ராய், அஜித் சிங் ஆகியோர் நாடு கடத்தப்பட்ட செய்தியின் விவரங்கள் முதலியவைகளைத் தெளிவாக அறிந்திருந்தார். அடுத்து ஜவகர் கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிட்டி கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றார். முதலில் விஞ்ஞானக் கல்வியும் அடுத்துச் சட்டக் கல்வியும் பயின்று தேர்ச்சி பெற்றார்.

ஏழு ஆண்டுகள் இங்கிலாந்தில் கல்வி பயின்ற

பிறகு 1912-இல் இந்தியாவுக்குத் திரும்பினார். அதே ஆண்டில் அவர் இந்திய தேசீய காங்கிரஸோடு முதன் முதலாகத் தொடர்பு கொண்டார்.

பெசன்ட் அம்மையார் சுய ஆட்சி இயக்கத்தைத் (Home Rule League) தொடங்கினார். அதற்காக அவ்வம்மையார் சிறை சென்றார். அவரோடு மோதிலால் நேருவும் பல தலைவர்களும் சிறை சென்றனர். இதனால் இந்திய மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதுவரை காந்தியடிகள் இந்திய அரசியலில் தொடர்பு கொள்ளவில்லை. இப்போது அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். அவர் தம் படுக்கையிலிருந்து இராஜப் பிரதிநிதி அவர்களுக்குக் கொடிய சட்டங்களுக்கு அனுமதி தருதல் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தார். அவர் வேண்டுகோள் ஏற்கப்படாததால் அவர் சத்தியாகிரக சபையைத் துவக்கினார். கொடிய சட்டங்களை மீறும் பொருட்டு இச்சபை துவக்கப்பட்டது. ஆனால் அப்போது அவர் சத்தியாகிரக முயற்சி நிறைவேறவில்லை. டில்லியில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பஞ்சாபில் அடக்குமுறைச் சட்டம் தலைவிரித்தாடியது. அமிர்தசரசிலுள்ள ஜாலியன்வாலாபாக் என்னும் பூங்காவில் பலர் கொன்று குவிக்கப்பட்டனர். அப்பூங்காவில் ஏப்ரல் 13-ஆம் நாள் 20,000 மக்கள் சட்டத்தை மீறிக் கூடியிருந்தார்கள். அப்பூங்காவுக்கு ஒரே ஒரு சிறிய வழி தான் உண்டு. திடீரென ஆங்கிலப் போர் வீரர்கள் தளபதி டயர் என்பவர் தலைமையில் அவ்விடத்திற்கு வந்து குண்டுமாரி பொழிந்தனர். 379 பேர் இறந்தனர். 1200க்கு மேற்பட்ட மக்கள் காயமடைந்தனர்.

அடக்குமுறைச் சட்டம் நீங்கிய பிறகு படுகொலை பற்றி நன்கு விசாரித்தறிய மோதிலால் நேரு, சித்தரஞ்சன்தாஸ் ஆகியோர் தலைமையில் ஒரு குழு சென்றது. சித்தரஞ்சன்தாஸ் அவர்களுக்குத் துணையாக ஜவகர்லால் நேரு சென்றார்.

இந்தச் சமயத்தில் தான் ஜவகர்லால் காந்தியடிகளோடு முதன் முதலில் தொடர்பு கொண்டார். அப்போது காந்தியடிகள் சத்தியாகிரக இயக்கத்திற்கும் தொண்டர்கள் விரும்பிச் சிறை செல்வதற்குமான திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தார். இத்திட்டங்கள் ஜவகர்லால் நேருவை மிகவும் கவர்ந்தன. ஆனால் அவைகள் அப்போது செயலுக்குக் கொண்டு வரப்படாமல் போயின.

1919-இல் அமிர்தசரஸ் காங்கிரசுக்கு மோதிலால் நேரு தலைமை வகித்தார். அக் காங்கிரசில் தான் காந்தியடிகள் முதன் முதல் இந்திய மக்களின் தலைமைப் பதவி ஏற்றார். முஸ்லீம்களும் இத் தேசிய இயக்கத்தில் திரளாகச் சேர்ந்தனர்.

1920-இல் ஜவகர்லால் முசோரி என்னுமிடத்தில் தம் குடும்பத்தோடு தங்கியிருந்தபோது அவர் ஆப்கானியத் தூதுக் குழுவினரோடு தொடர்பு கொண்டிருப்பதாக அவர் மீது குற்றம் சாட்டி முசோரிக்குள் நுழையக் கூடாது என அவருக்குப் பிரிட்டிஷ் அரசியலார் தடையுத்தரவு விதித்தனர். எனவே அவர் முசோரியில்

தம் குடும்பத்தை விடுத்து அலகாபாத்துக்குத் திரும்பினார். அப்போது கிராமங்களிலிருந்து விவசாயிகள் தம் குறையைத் தெரிவிக்க அலகாபாத்துக்கு நடந்து வந்தனர். அவ் விவசாயிகளோடு ஜவகர்லால் கிராமங்களுக்குச் சென்று அங்குக் குடிகொண்டிருந்த வறுமை நிலையையும் ஜமீன்தார்களால் கிராம மக்கள் படும் துன்பங்களையும் நேரில் கண்டார். அப்போதுதான் ஜவகர்லால் இந்தியாவின் உண்மை நிலையை உணர்ந்தார்.

1921-இல் காந்தியடிகள் அகிம்சையின் அடிப்படையில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். அப்போது வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். நாடு முழுவதும் அவர் வருகையைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்தது. சுமார் 30,000 மக்கள் சிறை சென்றனர். ஜவகர்லாலுக்கு 6 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதுதான் அவர் முதல் முறையாகச் சிறை சென்றது. ஒத்துழையாமை இயக்கம் மிகத் தீவிரமாக நிகழ்ந்து கொண்டிருந்தபோது காந்தியடிகள் திடீரென அவ்வியக்கத்தை நிறுத்தினார். சௌரிசாரா என்னும் கிராமத்திலுள்ள மக்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டு ஒரு போலீசு நிலையத்திற்குத் தீ வைத்துக் கொளுத்தியதன் காரணமாக காந்தியடிகள் வருந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.

மூன்று மாதம் முடிந்ததும் ஜவகர்லால் நேரு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். ஆனால் ஆறுவாரத்திற்குள் மீண்டும் அவர் ஓராண்டு ஒன்பது மாதச் சிறைத் தண்டனை பெற்றார். வெளிநாட்டுத் துணித் தடுப்புக் கிளர்ச்சியின் காரணமாகவே அவர் இப்போது தண்டிக்கப்பட்டார்.

1927-இல் சென்னையில் நடந்த காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் இந்தியாவுக்கு முழு விடுதலை வேண்டும் என்ற தீர்மானத்தை ஜவகர்லால் நேரு கொண்டு வந்தார். இந்தியாவின் அரசியல் அமைப்பில் மாறுதல்களை ஏற்படுத்தும் பொருட்டு வரும் சைமன் குழுவினைக் கண்டனம் செய்ய வேண்டும் என்பதும் அந்தக் காங்கிரஸ் பேரவையில் சிந்திக்கப்பட்டது. ஏனென்றால் அந்தக் குழுவில் ஓர் இந்திய உறுப்பினர் கூட இடம்பெறவில்லை.

நாடு முழுவதும் சைமன் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது போலீசாருக்கு மிகவும் சீற்றத்தை உண்டாக்கியது. லாலா லஜபதி ராய் போன்ற மதிப்பிற்குரிய பெரும் தலைவர்கள் போலீசாரால் அடிக்கப்பட்டனர். லக்னோ நகரில் ஜவகர்லால் நேரு தொடர்ந்து இரண்டு நாட்கள் போலீசாரால் அடிபட்டார். அப்போது அவருடனிருந்த பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்களையும் போலீசார் அடித்தனர். அந்த அடியினால்தான் அவருக்கு வாழ்நாள் முழுதும் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டது.

காந்தியடிகளின் விருப்பத்திற்கிணங்க 1929-இல் லாகூரில் நடந்த காங்கிரஸ் பேரவைக்கு ஜவகர்லால் நேரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது நாற்பது. அப் பேரவையில் இந்தியா முழு விடுதலைபெற வேண்டுமென

இன்னும் வன்மையாக வற்புறுத்தப்பட்டது.

1930-இல் காந்தியடிகள் குஜராத்தில் உப்புச் சட்டங்களை மீறும் பொருட்டுத் தண்டிக்கு நடந்து சென்றார். நாடு முழுவதும் உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டது. ஜவகர்லாலுக்கு 1930 ஏப்ரல் 14-ஆம் நாள் ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. காங்கிரசின் தலைமைப் பொறுப்பை மகனிட மிருந்து தந்தை மோதிலால் நேரு ஏற்று இயக்கத்தை நெறிப்படுத்தினார். விரைவில் அவருக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தில் ஜவகர்லால் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் எட்டு நாட்களுக்குள் அவர் மீண்டும் சிறை செய்யப்பட்டார். இம்முறை அவருக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இப்போது அவர் தண்டிக்கப்பட்டது ஐந்தாவது முறையாகும். 1931-இல் அவருடைய மனைவியார் கமலா நேருவும் சிறைக்குச் சென்றார்.

ஜனவரி 26-இல் ஜவகர்லால் தம் தந்தையார் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அதே நாளில் காந்தியடிகள் உட்படப் பலர் விடுதலை செய்யப்பட்டனர். மோதிலால் 1932 பிப்ரவரி ஆறும் நாளன்று காலமானார். நம் இந்திய நாடு தன் அரும் பெரும் தலைவரை இழந்தது.

காங்கிரசின் தனிப் பிரதிநிதியாகக் காந்திஜி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்குச் சென்றார். அங்கு முஸ்லீம் வகுப்புவாதிகள் பெரும் முட்டுக் கட்டையாக இருந்ததால் அம் மாநாட்டில் காந்தியடிகளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. காந்தியடிகள் இந்தியாவுக்குத் திரும்புதற்கு முன்பே நிலவரிப் பிரச்னையில் ஈடுபட்டிருந்த நேரு, தாண்டன் ஷெர்வானீ முதலிய தலைவர்களும், கபார்கான், கான் சாகிப் முதலியவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். இப்போது நேருவுக்கு இரண்டரை யாண்டுகள் சிறைத்தண்டனை கிடைத்தது. காந்தியடிகள் இந்தியாவுக்குத் திரும்பியதும் 1932 ஜனவரி 4-ஆம் தேதியன்று சிறைக்கனுப்பப்பட்டார். 1933 ஆகஸ்டு 30-இல் நேரு தம் தாயார் உடல்நிலை மோசமாயிருந்ததால் சிறையிலிருந்து விடுதலை செய்யப் பட்டார். சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு அவர் கல்கத்தாவில் ஆற்றிய சொற்பொழிவுக்காக அவர் மீண்டும் சிறையிலடைக்கப் பட்டார். 1935-இல் ஜெர்மனியில் சிகிச்சை பெற்று வந்த அவருடைய மனைவியார் உடல் கவலைக் கிடமாயிருந்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவர் உடனே தம் மனைவியைப் பார்க்க ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். 1936-இல் பிப்ரவரி 28-இல் கமலா நேரு காலமானார். இதற்கிடையில் ஜவகர்லால் நேரு காங்கிரஸ் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேரு வருத்தம் நிறைந்த உள்ளத்தோடு இந்தியாவுக்குத் திரும்பினார்.

புதிய அரசியல் அமைப்பின்படி மாகாணங்களில் பதவியேற்

கும் பொருட்டுக் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது. நேரு பல ஊர்களுக்குச் சென்று தேர்தல் கூட்டங்களில் பேசினார். நான்கு மாதங்களில் 50,000 மைல்கள் அவர் பயணம் செய்து தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டார். பல மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற்றனர். காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன.

1939-இல் இரண்டாவது உலகப்போர் தொடங்கியது. காந்தியடிகள் மக்கள் தனித்தனியாகச் சத்தியாகிரகம் செய்ய வேண்டுமென்ற இயக்கத்தைத் தொடங்கினார். நேருவுக்கு நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இடையில் அவர் விடுதலை செய்யப்பட்டார். 1942 பிப்ரவரி மாதம் சர் ஸ்ட்ராபோர்ட் கிரிப்ஸ் என்பவர் பிரிட்டிஷ் மந்திரி சபை சார்பில் இந்தியாவுக்கு வந்து நம் நாட்டிற்குக் குடியரசு நிலை (Dominion Status) வழங்குவதாகக் கூறினார். காந்தியடிகள் அதை ஏற்க மறுத்தார். அதன் விளைவாக அவர்களால் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் இயக்கம் தொடங்கப் பெற்றது. இவ்வியக்கப் போராட்டத்தில் 1,000க்கு மேற்பட்ட இந்திய மக்கள் உயிரிழந்தனர். சுமார் 3,200 பேர் காயமடைந்தனர். 1,00,000 பேர் சிறைக்குச் சென்றனர்.

நேருவும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் ஆமத் நகர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

லார்ட் வேவல் என்பவர் இந்தியாவின் புதிய அரசப் பிரதிநிதியாக வந்ததும் தேசீயத் தலைவர்களை விடுதலை செய்து புதிய அமைச்சரவை ஏற்படுவதைப் பற்றிச் சிம்லாவில் பேச்சு நடத்தினார். முஸ்லீக் லீக் கட்சியினர் ஒத்துவராததால் அப் பேச்சு முறிந்தது. இதற்கிடையில் பிரிட்டனில் தொழிற் கட்சியினர் பதவிக்கு வந்தனர். அவர்கள் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடத்தும்படி அனுமதி கொடுத்தனர். மத்திய அரசிலும் மாகாணங்களிலும் காங்கிரசுக் கட்சியே பெருவாரியாக வெற்றி பெற்றது. 11 மாகாணங்களுள், காங்கிரஸ் கட்சியினர் 8 மாகாணங்களில் மந்திரி சபை அமைத்தனர்.

காந்தி அடிகளின் விருப்பப்படி நேரு மூன்றும் முறையாகக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேருவை முதலமைச்சராகக் கொண்டு இந்திய நடுவரசு அமைக்கப்பட்டது. அரசியல் அமைப்புச் சபை ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கு முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னு ஆதரவு தரவில்லை. முடிவாக 1948 ஜூன் திங்களில் இந்தியாவுக்கு முழு விடுதலை அளிப்பதாகப் பிரிட்டிஷ் முதலமைச்சர் அட்லி உறுதியளித்தார். பல இடங்களில் இந்து முஸ்லீம் கலவரம் அதிகமாயிற்று. இந்தியாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று முஸ்லீம் லீக் கட்சியினர் கிளர்ச்சி செய்தனர்.

1947, ஆகஸ்டு 15-ஆம் நாள் அன்று இந்தியாவுக்கு விடுதலை அளிக்கப்பட்டது. இந்திய பாகிஸ்தான் எல்லையை ஒட்டிப் பெருங்

கலகம் நடந்தது. நேரு மிகத் திறமையாகக் கலகங்களை அடக்கி நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர். இதோடு பாகிஸ்தான் காஷ்மீர் மீது எடுத்த படையெடுப்பையும் தடுக்க வேண்டியிருந்தது. அடுத்து இந்தியத் தந்தை காந்தி அடிகள் ஒரு சமய வெறியனுல் கொலே செய்யப்பட்டார். சுதேச மன்னர்களின் 600 இராச்சியங்கள் இந்தியாவோடு இணைக்கப்பட்டன.

இந்திய அரசியலமைப்பு முடிவாக உருவாகியது. 1950 ஜனவரி 26-இல் இந்தியக் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. 1950-இல் சர்தார் பட்டேல் இறந்த பிறகு, காங்கிரஸ் தலைமையை நேரு ஏற்கவேண்டியதாயிற்று. முதல் இந்தியப் பொதுத் தேர்தல் 1952-இல் மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியது. இது நேருவின் தனி வெற்றியாகும். அடுத்து 1957-லும் 1962-லும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல் ஒவ்வொன்றுக்கும் உயிர் நாடியாக விளங்கியவர் நேரு அவர்களே.

இந்திய இராச்சியங்களின் எல்லேகளேத் திருத்தி அமைக்கும் பொறுப்பையும், நேரு நிறைவேற்றினர். நாட்டில் ஜமீன்தாரி முறையை அவர் ஒழித்தார். நிலச் சீர்திருத்தங்களேக் கொண்டு வந்தார். நாட்டில் அறவே வறுமையை ஒழிக்க வேண்டும் என்று உறுதி கொண்டு அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களே வகுத்தார். இந்தியாவைத் தொழில் மயமாக்கி வளம் பெருகும்படிச் செய்ய அவர் அயராது உழைத்தார்.

1962-நவம்பரில் நண்பர்களாய் இருந்த சீனர்கள் இந்தியாவைத் திடீரெனத் தாக்கியது நேருவுக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. அவர் நாட்டிற்கு அறிவுறுத்திய உணர்ச்சி மிக்க மொழிகள் இந்திய மக்கள் அனேவரையும் ஒன்றுபடுத்தி, சீனர்களேயே திகைக்க வைத்துவிட்டது.

இந்திய மக்கள் அனேவரும் தம் வேற்றுமைகளே மறந்து ஒன்றுபட்டு வளம்பெருகி வாழவும் உலக நாடுகளிடையே அமைதி ஏற்படுத்தவும் அவர் செய்த முயற்சிகள் அளவிறந்தன. தம் நாட்டுக்காகவும் உலகுக்காகவும் அவரைப்போல உழைத்தவர்கள் யாருமே இல்லே எனலாம். இத்தகைய மாபெரும் வீரரையும் தலேவரையும் நாம் இவ்வாண்டு மே திங்கள் 27 ஆம் நாள் அன்று இழந்தோம். அவருடைய பிறந்த நாள், குழந்தைகள் நாளாக நம் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. சென்ற ஆண்டு நேரு நம்முடன் இருந்து குழந்தைகள் நாளேக் கொண்டாடினர். இந்த ஆண்டு அப் பெருமான், நம்முடன் இல்லே.

அவரை இழந்து நிற்கும் நம் நாடும் உலகும் இனி என்னுகுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. எனினும் அவர் நமக்கறிவுறுத்திய ஜனநாயக சோசலிச நெறியைப் பின்பற்றினுல் நம் நாடு உயரும்; அவரது பஞ்சசீலக் கொள்கையை உலகம் பின்பற்றி ஒழுகினுல் அது ஓங்கும். இதுவே உலகப் பேரொளியாம் திரு நேருவுக்கு நாம் செய்யும் வழிபாடு ஆகும்.

அமைதிப் பணியில் நேரு

முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம்.

பண்டித நேரு உலகத்துக்கு ஒரு சமாதானச் சூரியனாக விளங்கினார். நாடுகளிடையே எங்கெங்குப் போரும் பூசலும் மூண்டனவோ அங்கெல்லாம் நேருஜியின் குரல் ஒலித்தது. அவர் நீதிக்காகப் பேசினார். நியாயத்துக்குப் பக்கபலமாக நின்றார். தர்ம நியாயத்தைக் கருதும் அனைவரும் அவர் பேச்சுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர்.

நேருஜி ஒரு தத்துவ ஞானி போல இருந்து நீதி உபதேசம் செய்யவில்லை. அவர் சரித்திரத்தை ஏற்படுத்திய மாவீரர்; காந்தியடிகள் தலைமையில் தன்னிகரில்லாத விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர்; வீழ்ந்து கிடந்த ஒரு தேசம் எழுச்சி பெற்று நிமிர்ந்து நிற்கும்படிச் செய்த ஆட்சித் தலைவர்; பெருவாழ்வு பெறும் பாதையிலே தேசத்தை நடத்தி வந்தவர்; பன்னெடுங் காலமாகவே உலகெங்கும் மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கும் உரிமை உணர்ச்சிக்கும் ஆதரவு தந்தவர்; காங்கிரஸ் மூலமாக ஆதரவும் அனுதாபமும் அளித்தவர். எனவே உலக அமைதிக்காக அவர் குரல் ஒலித்தபோது பல்வேறு நாடுகளும் அதில் விசேஷ அர்த்தம் கண்டன. பெருவாரியான உலக மக்களும் தலைவர்களும் அவரை நம்பினார்கள்.

இந்தியாவின் பாரம்பர்யம் சமாதானத்தையே ஜீவனாகக் கொண்டது. இந்த நாடு என்றுமே மற்ற நாடுகள் மீது ஆக்கிரமிப்புப் போரில் இறங்கியதில்லை.



நேரு காந்தியடிகளுடன் ஆழ்ந்து ஆலோசிக்கிறார்



தம் அன்பு மகளுடனும் பேரன்களுடனும் நேரு

மன்னன் மகனாக இருந்து துறவு பூண்ட மகான் புத்தரும், மாமன்னராக இருந்தும் போர்த் தொழிலை வெறுத்து ஒதுக்கிய அசோகனும் வளர்த்த அஹிம்சா தர்மம் காந்தியடிகளின் சத்திய சோதனையில் புத்துயிர் பெற்றது. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துத் தேச விடுதலைக்குப் போராடுவதில்கூட, வன்முறையை ஒதுக்கி இந்தியா சத்தியப் போரே நடத்தியது. இந்த வரலாற்றுப் பாரம்பர்யம் இந்தியாவின் சமாதான நாட்டத்துக்கு உரம் தந்தது. இந்தப் பின்னணியில் நேருஜியின் சர்வதேசக் கண்ணோட்டமும் இணைந்தது. மேல் நாடுகளின் கல்வி முறையில் வளர்ந்தவர் நேருஜி; பலமுறை பல்வேறு நாடுகளுக்கும் சென்றவர். துன்பம் எங்கு நேர்ந்தாலும் அதைக் கண்டு உருகும் அளப்பரிய கருணை உள்ளமும், சமநீதிக்காகப் போராடுவதில் ஒரு வீரனுக்குரிய மனத்திண்மையும் அவரை உலக அரங்கிலே ஒரு தர்ம வீரராகக் கொண்டு வந்து நிறுத்தின.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் வீறு கொண்ட தளபதியாக இருந்த நேருஜி 1927 - லிருந்தே காங்கிரசில் சர்வதேசக் கண்ணோட்டத்தை வளர்த்து வந்தார்; போர் அபாயம் பற்றி அப்போதிருந்தே தக்க சமயங்களில் எச்சரித்து வந்தார்; சர்வாதிகாரத்தையும், பாஸிஸத்தையும் உறுதியோடு எதிர்த்தார்; ஸ்பெயின் மக்களின் அல்லல் கண்டு உருகினார்; இத்தாலியின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்த அபிசீனியாவுக்கு ஆதரவு காட்டினார். எதையும் குறுகிய நோக்கில் பார்க்காமல் சர்வதேசக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பழக்கத்தை அவர் காங்கிரசில் வளர்த்தார்.

இந்தியா உலக உணர்வு பெறுவது மட்டும் போதாது. உலகம் இந்தியாவையும் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தையும் உணரும்படி அவர் செய்தார். உலகெங்கும் உள்ள மக்களுக்கு அவர் காங்கிரசின் குரலாக விளங்கிஞர். மேற்கு நாடுகள் எதைப் புரிந்துகொள்ள முடியும், எதை எளிதாகப் பின்பற்ற முடியும் என்பதை உணர்ந்த ஒரே தலைவர் என்று நேருஜி அன்றே போற்றப் பட்டார்.

காலனிப் பிடிப்பில் கட்டுண்டிருந்த நாடுகளின் விடுதலையை வலியுறுத்திய நேருஜி சமத்துவ, சமதர்ம வீரராகவும் திகழ்ந்தார்; நிறவெறிக் கொடுமைகளை உறுதியோடு எதிர்த்தார்; விடுதலை உணர்வோடு சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கான உணர்வுகளை வளர்த்தார்; பொருளாதாரத்தில் சோஷலிச முறைக்குப் புதுவேகம் ஏற்படுத்திஞர். உலகில் நிலையான சமாதானம் நிலவ இத்தகைய அடித்தளமும் கட்டுக்கோப்பும் அவசியம் என்று கண்டார்.

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கைக்கு வடிவம் கொடுத்து அதற்கு ஜீவனுகவும் விளங்கிஞர் ஜவகர். கொள்கை என்பது பாரம்பர்யத்துக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். லட்சியத்தோடும், பிரத்யட்ச நோக்குடனும் இருக்க வேண்டும். லட்சியம் இல்லையேல் சந்தர்ப்ப வாதம் ஆகிவிடும். பிரத்யட்ச நோக்கு இல்லையேல் பயன்தராமல் போய்விடும்.

அணுக்குண்டு சகாப்தத்தில் யுத்தத்திஞல் யாருக்கும் கோரிய பலன் கிடைக்கப் போவதில்லை. யுத்தம் எங்கு ஏற்பட்டாலும், அதனுல் இந்தியாவின் அபிவிருத்தி வேலைகளுக்குத் தீமையே ஏற்படும். எனவே, போர் வழி ஒழிப்புப் பாதையில் நேருஜி முனைந்து செயல்பட்டார். சர்வதேச அரங்கில் இந்தியா சுதந்திரமாகச் செயல்படுவதற்கு வசதியாக, எந்த வல்லரசு கோஷ்டியிலும் சேருவதில்லை என்ற நிலையை மேற்கொண்டார். இதன் மூலம் இந்தியா நீதிக்காகப் பாடுபட முடிந்தது. சமாதான மண்டலத்தைப் பரவலாக்க முடிந்தது. அத்துடன், பரிபூர்ணமான சுதந்திரத்தோடு செயலாற்ற முடிந்தது. காமன்வெல்த் உறவானது, இந்தியா, சர்வதேச அரங்கில் பலமான பங்கெடுக்க உதவியது. இந்திய அயல்நாட்டுக் கொள்கை மூலம், நேருஜி ஆசியாவின் அரசியல் விழிப்பின் சின்னமாஞர். அரசியல் பொருளாதாரத் தத்துவார்த்தங்கள் மோதி நின்ற உலகில், நடுவாந்திரமான ஒரு முறைக்கு வழிகாட்டியாஞர்; நட்பு நாடு என்றாலும் தவறு நேர்ந்தபோது அதைக் கண்டித்தார். அரசியல் வாதிகளுக்குச் சில சமயங்களில் நேருஜியின் கொள்கைகள் பிடிக்காமல் இருந்ததுண்டு. ஆனுல் உலகம் முழுவதிலும் உள்ள மக்கள், மனித குலம் உய்ய நேருஜியின் கொள்கைதான் ஏற்ற வழி என்பதைக் கண்டனர்.

வல்லரசு கோஷ்டியில் பிணைத்துக் கொள்ளாமல், சுதந்திரமான கொள்கையை அனுசரித்தது மூலம் இந்தியா தன் அளவிலும் நல்ல பயன் அடைந்தது. சீனு,

இந்தியாவை அக்கிரமமாகத் தாக்கியபொழுது உலகெங்கும் இருந்து கிளம்பிய கண்டனங்களே அதற்குச் சான்று. இந்தப் பரந்த உலகில் சீனுவுக்கு ஆதரவாக உள்ள நாடுகள் மூன்றே மூன்று தான். அல்பேனியா, வியட்நாம் ஜனநாயகக் குடியரசு, வடகொரியா ஆகிய மூன்றும் தான் அவை. சீனுவை ஆதரித்ததற்கு முக்கியக் காரணம் நிலப் பரப்பையொட்டி அவைசீனுவுக்கு மிகமிக அருகாமையில் இருப்பதாகும்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் 60 அல்லது 65 நாடுகள் தங்களது ஆதரவைப் பல வழிகளிலும் பல நிலைகளிலும் தெரிவித்துள்ளன. இந்தியா மீது சீனு படையெடுத்ததை இந்த நாடுகள் பல வழிகளிலும் எதிர்த்துள்ளன. சில நாடுகள் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தன. சில நாடுகள் கடுமையான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்தன. சில நாடுகள் உடனடியாகத் தங்கள் எதிர்ப்பைக் காட்டின. உலகத்தின் செம்பாகம் இந்தியாவுக்குப் பரிபூர்ணமான தார்மிக ஆதரவு அளித்தது.

நேருஜி தலைமையில் இந்தியா யாருடனும் விரோதத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. எதிரிகளைப் பெருக்கிக்கொள்ளவில்லை. எல்லா நாடுகளுடனும் நட்பை வளர்க்க முயன்றது. நாட்டைப் பாதுகாக்கவும், சமாதானத்தை வளர்க்கவும் இது உற்ற முறையாகும்.

சுதந்திர நாடாக வெற்றிகரமாக இயங்க வேண்டுமானுல்

உண்மைக் குடியாட்சி

பகைமை உணர்ச்சியும் பலாத்காரப் போக்குந்தான் நம்மை பலவீனப் படுத்திவிடுகின்றன.

பலாத்கார நெறியைப் பின்பற்றுபவர்களுக்குக் குடியாட்சியில் நம்பிக்கை கிடையாது.

—நேரு.

நமது நாடு வலிமை மிகுந்த நாடாகவும் ஆக வேண்டும். ஜனநாயக அமைப்பில் இருந்தாலொழிய, ஒரு நாடு முறையான வலிமை மிகுந்த நாடாக ஆக முடியாது. ஜனநாயக முறை இருந்தால்தான் மக்கள் ஒவ்வொருவரும் நாட்டைத் தங்களுக்குச் சொந்தமானதெனக கருதுவார்கள். அவ்வாறு மக்கள் உணர்ந்தும் வருகின்றனர். சமூக நீதியை ஏற்படுத்தி, சமதர்மத்தைக் காக்கும் ஒரு சமுதாயம்தான் ஜனநாயகத்தை நன்கு காப்பாற்ற முடியும். எனவேதான் இந்தியாவை வலிமை மிக்க நாடாக்க, இந்தியாவின் சமாதானப் பணி வெற்றிகரமாக நடைபெறும்படிச் செய்ய ஜனநாயக சோஷலிச லட்சியத்துக்கு நாட்டைத் திருப்பினுர் நேருஜி. நவ இந்தியாவின் சிற்பியாக விளங்கிய நேருஜி, உலக சமாதானத்துக்குரிய பாதையைச் செப்பனிட்டு வைத்திருக்கிறுர். இதன் மூலம், உலகில் இந்தியா என்றென்றும் பெருமை பெற வழி வகுத்திருக்கிறுர். உலகம் அப் பாதையில் சென்று நலம் பெறும் என்று நம்புவோமாக!

அறிவியல் துறையில் நேரு

திரு. ஜி. ஆர். தாமோதரன்.

கலங்கரை விளக்கம் :

நேரு ஒப்புயர்வற்ற வழக்கறிஞர்; எழுத்தாளர்; வரலாற்றாசிரியர்; அரசியல் மேதை; சமூகச் சிற்பி; இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஓர் அறிவியல் அறிஞர். மருத்துவ விடுதியில் தெய்வம் போல் நடமாடிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேலின் அன்பும் பரிவும் எத்தனையோ நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ளன. நெப்போலியனின் ஒவ்வொரு சொல்லும் வீரத்தின் விளைகலனாக இருந்து விழுந்துபட்ட வீரர்களுக்கெல்லாம் வியத்தகு ஆற்றலைக் கொடுத்தது. அதே போன்று அறிவியல், பொறியியல் போன்ற துறைகளின் வளர்ச்சியில் நேரு காட்டிய ஆர்வமும் அக்கறையும் அத்துறைகளில் ஆய்வுகள் நடத்திய விஞ்ஞானிகளுக்கும் பொறியியல் வல்லுநர்களுக்கும் கலங்கரை விளக்கமாக அமைந்து அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டின. நேரு, கேம்பிரிட்ஜிலுள்ள ட்ரினிட்டி கல்லூரியில் அறிவியல் பட்டம் பெற்றவர். இந்தியாவின் எந்த மூலையில் அறிவியல் கழகக் கூட்டம் நடந்தாலும் அங்கு அவர் செல்லத் தவறியதில்லை. இந்தியாவின் எந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலை தோன்றினாலும் அதற்கு நேருவின் வாழ்த்துச் செய்தி கிட்டாமற் போனதில்லை. தாம் கலந்துகொண்ட ஒவ்வொரு அறிவியல் கழகக் கூட்டத்திலும் பயனுள்ள புதிய புதிய கருத்துக்களை அவர் வெளியிடத் தவறியதில்லை. தற்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் இந்திய மாணவர்களிடையே காணப்படும் அறிவியல் ஆர்வத்திற்கும் நேருவே காரணம் ஆவார்.

உணவு உற்பத்தியில் தன்நிறைவு :

அறிவியலும், பொறியியலும் முன்னேற்றம் அடையாமல் ஒரு நாடு முன்னேறவே முடியாது என்பது நேருவின் கொள்கை. ''அமெரிக்காவில் பத்துசதவீதம் மக்களே பயிர்த்தொழில் செய்கின்றனர். அவர்களால் நாடு முழுதுக்கும் உணவளிக்க முடிகிறது. அதோடு ஏராளமான

உணவுதானியம் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் விவசாயத்தில் நவீன முறைகளைப் பின்பற்றுவதேயாகும். விதை விதைப்பதிலிருந்து பயிர் அறுவடை செய்யும்வரை எல்லா வேலைகளுக்கும் அவர்கள் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். தொழில் நுட்பத் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளுக்குத்தான் இம்முறை சாத்தியமாகும். மேலும், பயிர்கள் செழித்து வளரப் பலவகை இரசாயன உரங்களும், பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்கப் பூச்சிக் கொல்லிகளும் அங்கு மலிவாகக் கிடைக்கின்றன. இத்தகைய இரசாயனப் பொருள்களெல்லாம் இரசாயனத் தொழிற்சாலைகள் மலிந்துகிடக்கும் நாடுகளில்தான் மலிவாகக் கிடைக்கும். இதிலிருந்து ஒருநாடு உணவு உற்பத்தியில் தன்நிறைவு பெற வேண்டுமானால் அந்நாட்டில் அறிவியலும், தொழில்நுட்ப இயலும் வளர்ந்து சிறந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது'' என்று ஒரு நாட்டில் அறிவியல் வளர்ச்சியின் இன்றியமையாமையை நேரு எடுத்துக்காட்டுடன் விளக்கியிருக்கிறார்.

இரு துறைப் பொறுப்பு:

நாடெங்கும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வுக் கூடங்கள் உருவாக வேண்டும் என்னும் நோக்கத்தின் அடிப்படையில் அமைந்தது தான் ''அறிவியல் மற்றும் தொழில்துறை ஆய்வுக் கழகம்'' (Council of Scientific and Industrial Research). நேரு இக்கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அறிவியல் வளர்ச்சிக்கு ஊக்கம் குன்றாது உழைத்தார். அதன் பின்பு, அணுச்சக்தித் துறை (Atomic energy Department), 1954 - இல் நிறுவப்பட்ட பொழுது மந்திரி சபையில் அதற்கென ஒரு தனி இலாகா அமைத்து அதன் முழுப் பொறுப்பையும் அவர் ஏற்றுக் கொண்டார். இவ்விரு துறைகளின் வளர்ச்சியிலும் அவர் குன்றாத ஊக்கம் காட்டித் தம் கடைசி நாள் வரை ஓயாது உழைத்தார். அணுச்சக்தி இந்தியாவில் பெருமளவில் உற்பத்தியாக வேண்டும்; அச்சக்தி இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமட்டுமே பயன்பட வேண்டும்; மனித இனத்தை அழிக்கும் நாச வேலைக்கு ஒருநாளும் உதவக் கூடாது என்பது நேருவின் கொள்கையாக இருந்தது. சீனர்கள் இந்தியாவின்மீது படையெடுத்த சூழ்நிலையிலும் கூட அணுச்சக்தியை அழிவு வேலைக்குப் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழவேயில்லை. அஹிம்சை வழியைப் பின்பற்றிச் செயற்கரிய செய்து உலகை வியப்புக் கடலில் ஆழ்த்திய காந்தியடிகள் நேருவைத் தன் வாரிசு என்று சொன்னது எவ்வளவு பொருத்தம்!

அறிவியல் முறை:

அறிவியல் என்றால் என்ன? அறிவியல் என்பது உண்மையை ஆய்ந்தறிவதாகும். அதாவது, சிறந்த ஆய்வுகள் நடத்தி அவைகளின் மூலம் எது உண்மை என்பதைப் பகுத்தறிவதே அறிவியல். அறிவியலில், ஒரு தத்துவத்தை

முதலில் பரிசோதனைக்கு உட்படுத்தி அதைப் பற்றிய எல்லா உண்மைகளையும் ஐயம் திரிபறத் தெரிந்துகொள்கிறோம். அதன் பின்பு அத் தத்துவத்தைத் தொழில்துறையில் புகுத்தி மக்களுடைய வாழ்க்கை நலன்களுக்குப் பயன்படுத்துகிறோம். இதே முறை சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற ஏனைய துறைகளுக்கும் பொருந்தும். அதாவது, நாம் கடைப்பிடிக்க நினைக்கும் ஒரு கொள்கையை முதலில் சிறு அளவில் பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் விளைவுகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னர் அக் கொள்கையை முழு அளவில் செயல்படுத்தத் துணியவேண்டும். இம்முறை எல்லாத் துறைகளிலும் சிறந்த பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. அதனால் ஒவ்வொரு துறையிலும் இம்முறை கவனமாகக் கையாளப் படவேண்டியது அவசியம் என்று நேரு வற்புறுத்தி வந்துள்ளார்.

அணுச் சக்தி :

அணுக்குண்டுகளின் அபாயத்திலிருந்து உலகத்தைக் காப்பாற்ற வேண்டும்; உலகின் எந்த மூலையிலும் அணு ஆயுதச் சோதனைகள் நடத்த அனுமதிக்கக்கூடாது, என்னும் கருத்துக்களை முதன் முதலில் வலியுறுத்தியவர் நேரு. 1955-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் ஓர் ஆய்வுக் குழுவை அமைத்து, அது அணுக்குண்டுச் சோதனைகளால் மனித இனத்திற்கு ஏற்படக் கூடும் அபாயங்களைக் கண்டறிய வேண்டும் என்று பணித்தது. இத்தகைய பணிகளில் முதன் முதலில் அக்கறை காட்டத்தொடங்கியது இந்தியநாடே. உலகின் எதிர்காலச் சந்ததிகளின் நல்வாழ்விற்காக நேரு செய்த ஒவ்வொரு செயலும் உலக மக்களின் உள்ளத்தைத் தொட்டது. நேரு உலகத் தலைவர்களில் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். வல்லரசுகள் அணுக்குண்டுச் சோதனைகளைப் போட்டி போட்டுக் கொண்டு நடத்திய காலத்தில் நேரு இந்தியப் பாராளுமன்றத்தில் ''அணுக்குண்டால் விளையக்கூடிய அபாயங்களை உலகம் அறியும், அதனால் ஒவ்வொரு நாட்டிலும் பீதியும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய தெளிவற்ற சூழ்நிலையில் இருந்து கொண்டு எந்த நாடும் ஆக்க வழியில் சிந்தித்துச் சிறப்பாகச் செயல் ஆற்ற முடியாது. அதனால் உலக நாடுகளின் முன்னேற்றம் தடைப்படும். போர்க் காலங்களில் அணுக்குண்டுகளை வெடிப்பதால் ஏற்படும் விளைவுகளை ஹிரோசீமா, நாகசாகி நகரங்கள் பறைசாற்றுகின்றன. சமாதானக் காலங்களில் அணுக்குண்டுச் சோதனைகள் நடத்தப்படும் பொழுது வளிமண்டலத்தில், நச்சுக் கதிர்கள் பரவி மனித இனத்தின் ஆரோக்கியம் பல வழிகளிலும் பாதிக்கப் படுகின்றது. அதனால், எதிர்காலச் சந்ததிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு மனித இனமே அழிவுப் பாதையை நோக்கிச் செல்லத் தொடங்குகிறது. இவைகளைக் கருத்தில் கொண்டு, அணுச்சக்தியை ஆக்க வேலைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்; அழிவு வேலைக்குப் பயன்படுத்தக்கூடாது; என்னும் சட்டத்தின் கீழ் உலக நாடுகள் கொண்டுவரப் படவேண்டும்.

தற்போதைய நிலை நீடிக்குமானல் உலகின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று எவரும் சொல்லமுடியாது. ஆனல், நான் எனது தற்கால அரசாங்கத்தின் சார்பிலும், எதிர்கால அரசாங்கத்தின் சார்பிலும், இந்தியா எந்த நிலையிலும் அணுச் சக்தியை அழிவு வேலைக்குப் பயன்படுத்தாது என்னும் ஓர் நிபந்தனையற்ற உறுதியைக் கொடுக்க முடியும்'' என்று பேசியிருக்கிறார். அவருடைய அறைகூவல் உலக நாடுகளின் காதுகளில் விழாமல் போகவில்லை. 1963-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் இரஷ்யாவிற்கும் இடையில் சில நிபந்தனைகளோடு கூடிய அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் ஏற்பட்டது.

மருத்துவத் துறை :

''ஏராளமான மருத்துவ விடுதிகளைக் கட்டிவிடுவதால் மட்டும் நாம் நம் கடமையைச் சரிவரச் செய்தவர்களாகமாட்டோம். பலவகையான நோய்களையும் குணப்படுத்தக் கூடிய சிகிச்சை முறைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் அத்தகைய நோய்கள் தோன்றுவதற்கான சூழ்நிலைகளை அடியோடு ஒழிப்பதில் கவனம் செலுத்துவதே அறிவுடைமையாகும். பழையன என்று எல்லா ஆயுர்வேத மருந்துகளையும் தள்ளிவிடக் கூடாது; அதே போன்று, புதியன என்று எல்லா நவீன மருந்துகளையும் ஏற்றுக் கொள்ளவும் கூடாது. அவைகளைப் பற்றி ஆழ்ந்த ஆய்வுகள் நடத்தி, சிறந்த மருந்துகள் எவையெனக் கண்டு அவற்றைத் தடையின்றிப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். டாக்டர்கள் நகர வாழ்க்கையில் சுகம் காணும் எண்ணத்தைக் கைவிட வேண்டும். பிணியால் வருந்தும் நாட்டுப்புற மக்களின் பரிதாப நிலைக்கு அவர்கள் இரங்கவேண்டும். அவர்களை மகிழ்வித்துத் தாங்களும் மகிழும் ஓர் உன்னத நிலையை அவர்கள் அடைய வேண்டும். இத்தகைய பணிகளால் டாக்டர்கள், சமூக நலத்திற்கு உதவுவதோடு நாட்டின் முன்னேற்றத்திற்கும் உதவுகிறார்கள்'' என்று மருத்துவத் துறையினர்க்கு நேரு விளக்கியிருக்கிறார்.

இயந்திரப் புரட்சி :

''இயந்திரப் புரட்சி உலக வரலாற்றில் பெருத்த மாற்றத்தைப் புகுத்தியுள்ளது. அது மனித வாழ்க்கையில் துரிதமான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. வாழ்க்கைப் பாதையின் பல கோணங்களிலும் ஏற்பட்டுவரும் அன்றாட மாற்றங்கள் வாழ்க்கையோடு இணைந்துவிட்டன. அத்தகைய மாற்றங்கள் இல்லாத வாழ்க்கை வெறிச்சோடித் தோன்றுகிறது. ஒரு நாடு தொழில் நுட்பத் துறையிலும், ஆற்றல் உற்பத்தித் துறையிலும், முன்னேறியிருந்தாலொழிய அந்நாடு உலகில் முழுச் சுதந்திரத்துடன் வாழமுடியாது. தான் சுதந்திரத்துடன் வாழ முடியாததோடு, பலதுறைகளிலும் முன்னேறியிருக்கும் நாடுகளிடையே பிளவுகள் ஏற்படவும், போர் ஏற்படவும் வழி செய்துவிடும். அதனல் ஒவ்வொரு நாட்டிலும் இயந்திரப் புரட்சி வரவேற்கப்படவேண்டும். அவ்வப்போது பழையன கழிந்து

புதியன புகுத்தப்பட வேண்டும். இயந்திரம் மனிதனுக்கு விரோதி என்னும் வரட்டு வேதாந்தம் பொருளற்றது என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். இயந்திர வசதிகள் பெருகும்பொழுது இயற்கையாகவே வேலையின் அளவும் பெருகிக் கொண்டே போவதால் இயந்திரப் புரட்சியால் மனிதன் ஒருக்காலும் ஒதுக்கித் தள்ளப்பட்டு விடமாட்டான்'' என்று இயந்திரப் புரட்சியின் தேவையை நேரு வலியுறுத்துகிறார்.

இயற்கையின் வஞ்சம் :

இந்தியச் சுதந்திரப் போரில் நேருவின் பங்கு மகத்தானது. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவை நவீன மயமாக்குவதில் நேரு முழுமூச்சோடு ஈடுபட்டார். ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பல நகரங்களையும், அணைக்கட்டுகளையும், பல்கலைக் கழகங்களையும், அறிவியல் ஆய்வுக் கூடங்களையும், இரும்பு, உருக்கு ஆலைகளையும் நிறுவிப் புரையோடியிருந்த இந்தியாவிற்குப் புத்துயிர் ஊட்டினார். இந்தியாவில் வறுமையை அகற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஓயாது உழைத்தார். தம் வாழ்நாளிலேயே இந்தியாவைப் பல துறைகளிலும் உயர்த்தி உலக நாடுகளின் முன்னால் தலை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் அறிவியல் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்ந்து அறிவியல் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தினார். அறிவியல் மற்றும் பொறியியல் சாதனைகளையெல்லாம் கண்ணுற்றபோது மகிழ்ச்சிப் பெருக்கில் தன்னை மறந்து நின்றார். இளம் விஞ்ஞானிகள்தான் நவ இந்தியாச் சிற்பிகள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு எல்லா வழிகளிலும் ஊக்கமூட்டினார். விஞ்ஞானத் துறையில் தலை சிறந்து விளங்கும் வெளி நாடுகளிலிருந்து விஞ்ஞானிகளை அழைத்து அவர்களுடைய ஒத்துழைப்பு இந்திய விஞ்ஞானிகளுக்குக் கிடைக்குமாறு செய்தார். தன் இடையறாத அரசியல் வேலைகளுக்கிடையிலும் அவ்வப்போது அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கழகங்களின் கடமையைச் சுட்டிக்காட்டிச் சென்றார். அவர் காட்டிய வழியில் இந்தியா சுபிட்சத்தை நோக்கிப் பீடு நடைபோட்டுச் சென்றது. ஆனால், அந்தோ! மனிதகுல மாணிக்கம் இந்திய மண்ணில் உலவி வருவது இயற்கைக்குப் பிடிக்கவில்லை போலும்! இந்திய நாட்டைத் தாயற்ற பிள்ளையாய்த் தவிக்க விட்டு அம்மேதையைத் தன்னுள் ஆட்கொண்டுவிட்டது! இந்திய மக்களின் வாழ்க்கையில் அவர் ஒட்டி உறவாடிய இடம் வெற்றிடமாகிவிட்டது. அவ்வப்போது இந்தியாவைத் தொட்டுச் சென்ற அசோகர், புத்தர், காந்தியடிகள் முதலியோர் சென்றவழியில் நேருவும் சென்று விட்டார்!



ஒரு வயது

அன்னை சொரூபராணி
தேவியோடு குழந்தை
ஜவகர். (1891)

மூன்று வயது
(1892)

(1892)

நான்கு வயது
(1893)

ஐந்து வயது
(1894)

ஏழு வயது
(1896)

ஜவகரும் தம் தங்கை
விஜயலட்சுமியும்

நேரு ஓர் எழுத்தாளர்

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

காந்தியும் நேரும்

''நேரு மக்களுள் மாணிக்கம்'' என்று காந்தியடிகள் புகழ்ந்துள்ளார். இவர் மறைந்தபோது உலகமே கண்ணீர் விட்டுப் புலம்பியது. காந்தியடிகள் சொல்லியது உண்மையென்பதை எல்லோரும் அப்போது நன்கு உணர்ந்தார்கள். எவ்வாறு இவர் மாணிக்கமானார்? இதனை எப்படி அறிவது? மகாத்மா காந்தியடிகளும் நேருவும் இன்றைய இந்தியாவைப் படைத்தவர்கள். இந்தியாவை—புதிய இந்தியாவைப் படைக்கும் வகையில் புதிய உலகையும் படைக்க முந்தியவர்கள். இவர்கள் இருவரும் முதலில் மாறிப் பிறந்தார்கள். பின் தம்மைத்தாமே படைத்துக்கொண்ட வகையில்தான் புதிய இந்தியாவையும் படைத்தார்கள். தம்மைத் தாம் படைத்துக் கொண்ட முறையில்தான் இவர்கள் மக்களுள் மாணிக்கமானார்கள். அவ்வாறு தம்மைத்தாம் படைத்துக் கொண்ட முறையை எல்லாம் இச் சிந்தனைச் செல்வர் பல நோக்கினின்றும் ஆராய்ந்தார்கள்; சோதனை செய்து தவறுகளை நீக்கி உய்ந்தார்கள். இந்தச் சிந்தனை அகநிலைச் சிந்தனையாக மட்டும் அமைந்துவிடாமல் புற உலகத்தோடு பேசுகின்ற பேச்சாகவும் அமைந்தது. அவர்களுடைய எழுத்துக்கள் இத்தகைய சிந்தனைப் பேச்சுக்களாக இருப்பதை நாம் காண்கிறோம்.

ஒற்றுமை

இருவரும் மேனாடு சென்று மேனாட்டுப் பண்பாட்டில் பழகியவர்கள். மேனாட்டுப் பண்பாட்டிலுள்ள உயர்நிலைகளை அறிந்தவர்கள். உயர்ந்தவற்றை மேற்கொண்டு அவற்றின்படி ஒழுகியவர்கள். இந்திய நாட்டைப் பற்றி முதலில் அவர்களுக்கு நன்கு தெரியாது. ரஸ்கினையும், டால்ஸ்டாயையும் உணர்ந்த அளவு முதலில் காந்தியடிகள் கீதையையும் கூட அவ்வளவு உணர்ந்ததில்லை. நேருவும் பின்னேதான் இந்தியாவைப் புதுமையாகக் கண்டுபிடித்தது போலக் கூறுகிறார். இதிலே ஒரு நன்மை உண்டு. மேனாட்டு முன்னேற்றப் போக்கில் இந்தியப் பண்பாட்டை ஆராயமுடிந்தது. இந்தியாவில் பிறந்ததாலேயே இந்தியாவைப் புகழ்கின்ற வெறும் வாய்ப்பேச்சாளர்களில் சேர்ந்தவர்கள் அல்லர் இவர்கள். வெறும் ஏட்டுச் சுரைக்காய் அளவிலும் இவர்கள் நின்றுவிடவில்லை. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் பழைய காலத்து அடியார்களைப் போல

ஒவ்வொரு ஊராய்ச் சென்ருர்கள்; உயர்வு தாழ்வு இன்றிப் பொதுமக்களோடு பழகினுர்கள். அம்மக்களின் இன்ப துன்பங்களையெல்லாம் உணர்ந்தார்கள். பின்னர் மனம் மாறினுர்கள். இந்தியாவும் தாங்களும் ஒன்றேயாகி விட்டார்கள். அதன் பயனுக உழைக்க வந்தார்கள். அந்த வகையில் இன்னும் உயிரோடுள்ள இந்தியப் பண்பாட்டின் உயர் நிலையை உணர்ந்து அந்த உண்மையை நிலைநாட்டப் பாடுபட்டார்கள். அந்த உண்மை விளங்க வேண்டுமானுல் ''இந்தியா உரிமை பெறவேண்டும்; மக்கள் மக்களாக வாழ வழி செய்ய வேண்டும்'' என்று உணர்ந்து தெளிந்து அதற்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணம் செய்தார்கள்.

வேற்றுமை

ஆனுல், காந்தியடிகள் இந்தியச் சூழ்நிலையில், வாழ்ந்த பின்னரே இங்கிலாந்து சென்ருர். ஆனுல், நேரு அவர்களோ இந்தியச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் மேல்நாட்டு நாகரிகத்திலேயே அவர் குடும்பம் பழகியது. போலி இந்திய நாகரிகத்தை எள்ளி நகையாடிய குடும்பம் அது. ஆங்கில நாட்டிலேயே அவருடைய கல்வி பெரும்பாலும் முழுக்க முழுக்க நிறைவேறியது. காந்தியடிகள் கடவுள் என்ற பெயரை நினைக்கும்போதே உள்ளம் உருகி நைந்து நிற்பார். ஆனுல், அவர் கூறுகின்ற கடவுள் என்னவோ உண்மை ஒன்றுதான். நேரு அவர்கள் இளமைப் பழக்கத்தால் போலி மதங்களின் ஏமாற்றத்தையே நினைத்துக்கொண்டு கடவுள் என்று சொல்லவும் கடைசி வரை வாய்கூசி நின்ருர். ஆனுலும் இவர் அப்பாலுக்கப்பாலான பொருளில் நம்பிக்கை கொண்டவர். இவர் வாழ்வெல்லாம் வெறும் ஜடநிலைதான் என்ற நம்பிக்கை கொண்டவரல்லர். புருஷார்த்தங்களிலும், உயர்ந்த நோக்கங்களிலும் அசையாத நம்பிக்கை கொண்டவராதலின் இந் நோக்கங்களாக மாறி நிற்கும் ஆன்மீக வாழ்வை நம்பியவரே இவர். அந்த உயரிய குறிக்கோளுக்காகவே இவர் வாழ்ந்தார். காந்தியடிகள் கீதைக்கு உரை எழுதியது போல இவர் எழுதவில்லை. கீதை வாழ்வை இன்றைய கண்ணேட்டத்தில் ஒரு வகையால் வாழ்ந்து காட்டியவர் இவர் எனலாம்.

அகம்புறமாதல்

நேரு இளமையில் அவரை ஒத்த வயதுடையவர்களோடு விளையாடும் வாய்ப்பினையே பெறவில்லை. தமக்குள்தாமே பேசிக் கொண்டிருப்பாரோ என்னவோ? ஆகவே உள்முகமாகத் திரும்பினுர். இவ்வாறு இளமையிலிருந்து முதியவர்களோடு பழகியதால் பிஞ்சிற் பழுத்தவரும் ஆனுர். உள்முகமாகத் திரும்பினுலும், தமக்குள் தாமே எல்லாவற்றையும் சிந்தித்தாலும், இளமையில் இருந்தே பிறரோடு கூடிக் குலாவவேண்டும் என்ற எண்ணங் கொண்டவராக விளங்கினுர். எவ்வளவுக் கெவ்வளவு கூட்டத்தைப் பார்க்கமுடியுமோ அவ்வளவுக் கவ்வளவு அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டவர். அவர்களோடு பேசுவதில் நேருவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவருடைய ஆன்மாவையே உலகச்

சூழ்நிலையோடு வைத்து ஆராய்வது போன்று எழுந்த சிந்தனைகளே அவருடைய நூல்கள். ஆனுலும் தனிமையை அஞ்சிப் பிறரோடு கூடிக்குலாவ நினைத்த அவருடைய மனம் இச் சிந்தனைகளை உரக்கப் பேசும் பேச்சுக்களாக்கி அவற்றையே நூலாக எழுதி வெளியிடச் செய்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம் அக அனுபவத்தைப் புற அனுபவத்தோடு ஒன்ருக்கிப் பொதுமக்களை நோக்கித் தாம் சோதனை செய்து கண்ட அனுபவ உண்மையைப் பாட்டாகப் பாடியது போல காந்தியடிகளும் நேருவும் நூலாக எழுதி வெளியிட்டார்கள். காந்தியடிகளோ கூட்டத்தை விரும்பினுலும் தன்னில் தானே தனி நின்று உண்மை கண்டு அந்த உண்மையை உலகிற்கு உரைக்க முன்வந்தவர். நேருவோ முதலிலிருந்தே உலகத்தோடு தம்மை ஒன்ருக வைத்து உலக உண்மையை எவ்வளவுக்கெவ்வளவு ஆழ ஆழ உணர்ந்து வந்தரோ அவ்வளவுக்கவ்வளவு அவரும் உயர்ந்து கொண்டே வந்தார். எனவே இவருடைய நூல்கள் இவர் உலகமாய் விரிந்த வரலாற்றையே கூறுகின்ற அனுபவ சாத்திரமாகும்.

வரலாறே ஞானம்

இவருடைய நூல்கள் சிறையிலே எழுந்தவை. அங்கே தனித்திருந்தபொழுது பிறரை நாடுகின்ற நாட்டம் பெரிதாக விரிந்திருக்கும். அதனுல் மனத்திலேனும் உலகத்தோடு ஒருங்கிருந்து எண்ணி வந்தார். அந்த நிலையில் எழுந்தவை இவர் நூல்கள். இவர் வாழ்வும் உலக வாழ்வும் பிணைந்திருக்கின்ற நிலை அந் நூல்களில் தோன்றும். வரலாறே உண்மை ஞானம் என்று காலிங்வுட் (Colingwood) வற்புறுத்துகிருர். அதன் உண்மையை அறிய நேருவினை அறிய வேண்டும். நேருவின் ஞானம் உலகவரலாற்றைத் தன்னெடுபடுத்தி உணர்ந்து உயர்ந்தது. அதனை நேருவினுடைய நூல்களைப் படிக்கும் போதுதான் நாம் அறிந்து கொள்ளமுடியும். வரலாறு இவ்வாறு ஒரு ஞானமார்க்கமாவதை இங்கே காணலாம்.

தவம்

இப்படி நேரு அவர்கள் நம் காதில் எல்லாம் விழும்படியாக உரக்க எண்ணியது எப்போது? இவர் சிறையில் அடைபட்டுக் கிடக்கும்போதுதான். இவர் வெளியுலகத்தில் வாழும்போது அவருக்கு எழுதப் பொழுது ஏது? இவர் புத்தகப் பூச்சி என்ருலும் நூல்களோடு ஒன்ருகி அவற்றை ஆராய்ந்துணர்வதில் ஈடுபட்டவர். அந்த ஏட்டுச் சுரைக்காயை எல்லாம் வீட்டுச் சுரைக்காயாகச் சமைக்க வல்லவர். நூல்வகையாலன்றி வரலாற்றை எப்படி உணர்வது? இவர் கற்றதையெல்லாம் சிந்திக்கும் நேரம் சிறையில்தான் கிடைத்தது. கேட்டல் வெளியே நிகழ்ந்தாலும் சிந்தித்தலும், தெளிதலும் சிறையில் தான் நிகழ்ந்தன. அந்தத் தெளிவின் பயனுக இவருடைய ஞானவாழ்வு முதிர்ந்து கொண்டு வந்தது. பொதுவாக மற்றவர்கள் குற்றம் செய்து சிறை செல்வார்கள். சிறையில் அவர்கள், தாம் செய்த குற்றத்துக்காக

வருந்துகின்ற நிலையிலேயே இருப்பர். ஆனால் உரிமைப் போரில் சிறைசென்றவர்க்கு இத்தகைய வருத்தம் இல்லை. தீமையை எதிர்த்த வீரமே அங்கும் பொங்கி வழியும். ஆனால் சிறைக் கோட்டம் இவருடைய தவக்கோட்டம் ஆயிற்று. கடமையைச் செய்தோம் என்ற மகிழ்ச்சியிலே உள்முகமாக எண்ணிப்பார்க்கும் தவந்தான் இவருடைய சிறைச்சாலை அனுபவம். தவத்திற் பழுத்த இன்பக் கனிகள்தான் இவருடைய நூல்கள்.

நூல்கள்

முதலாவதாக ''உலக வரலாற்றுக் காட்சிகள்'' என்ற நூல் சிறையில்தான் தோன்றியது. தம்முடைய அருமை மகள் இந்திராவிற்கு எழுதிய கடிதங்கள் என்ற வடிவில் அவற்றை எழுதினார். உலக வரலாற்றின் உண்மையைத் தம்முடைய உண்மை ஞானமாகக் கண்டு தெளிய அதில் இரண்டாவது நூல் அவருடைய சுயசரிதம். இந் நூலில் உலகில் தாம் பிறந்தது முதல் பலசூழ்நிலைகளில் தொடர்பு கொண்டதைத் தம்மொடு உலகை ஒன்றுபடுத்திக் கண்டு தெளிந்ததைக் கூறிப் போகின்றார். இயற்கையும், தாமுமாய் எழுந்த போராட்டத்தில் ஞானம் வளர்ந்துகொண்டே வருகிறது. உலக வரலாற்றை முன்னர்ப் பழங்காலந் தொட்டு ஆராய்ந்து இக்காலத்து வாழ்கின்றவர்களின் நிலையை-உண்மையில் தன்னிலையை - உணரவே முயன்றார். தம் சுய சரிதையில் பழங்காலத்திலிருந்து வந்த இந்த உலகம் இக்காலத்தில் மனிதர் நிலையில் எவ்வாறு விளங்குகிறது எனத் தன்னோடுபடுத்தி அறிய முற்பட்டு மேலே செல்கின்றார். ''இந்தியாவைக் கண்டுபிடித்தல்'' என்பது அவருடைய மூன்றாவது நூல். இந்திய வரலாறு இந்தியப் பண்பாட்டோடு ஒருங்கியைந்து இயற்கையின் சூழலாலும் வரலாற்று நிகழ்ச்சிகளாலும் எவ்வாறு ஒரு தனிக்கோலம் கொண்டு விளங்கிவருகிறது என்பதனை இங்கும் தம்மொடுபடுத்தியே கண்டு தெளிந்து இந்தியாவோடு ஒற்றுமைப்பட்டு நின்று அங்கு ஓர் தெளிந்த ஞானம் பெற்று மேலேறுகிறார். மேலும் வளர்ந்த நிலைகளை அவருடைய பேச்சுக்களில் காணவேண்டும்.

வாழ்வு

வரலாற்றாராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சி முதலியன எல்லாம் ஆராய்ச்சி நிலையிலேயே நின்றுவிடுவது மேனாட்டில் வழக்கம். ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளை வாழ்வது என்பது அங்கில்லை. இந்திய நாட்டிலோ தத்துவங்களை ஆராய்வது அவ்வாறு ஆராய்ந்த முடிவின்படி வாழ்வதேயாகும். இன்று இந்தியாவில் தத்துவ ஆராய்ச்சி செய்வோர்களும் இதனை மறந்துவிடுகிறார்கள். அதனாலேயே அரவிந்தரும், இராதாகிருஷ்ணரும் வாழ்கின்ற காலத்திலேயே தத்துவத்தையோ, வரலாற்றையோ அறிய வருகின்ற மாணவர்களின் தொகை சுருங்கிக்கொண்டே வருகிறது. ஆனால் காந்தியும், நேருவும் பண்டைய தரிசனங்களைக் கண்டு அதன்படி வாழ்ந்து காட்டிய வள்ளுவர், புத்தர் போன்ற ஞானியர் பரம்பரையில் வந்தவர்கள். அவர்களுடைய கொள்கை

கள், அவர்களுடைய ஆராய்ச்சிகள்-இவைகள் எல்லாம் இவர் வாழ்வைத் திருத்தியமைத்ததனைக் காணலாம். இவருடைய அகவாழ்வையும், புறவாழ்வையும் அறியவேண்டுமானல் இவருடைய நூல்களை அறியவேண்டும். இவருடைய நூல்கள் இவருடைய ஞானத்தின் வளர்ச்சியைக் காட்டும். மேலே கூறிய மூன்று நூல்களையும் கடந்தும் போயுள்ளார். இருந்தாலும் இவருடைய வாழ்வினைத் திறந்துகாட்டும் சாவி இந்நூல்கள்தாம்.

முடிவு

எனவே, இவருடைய நூல்கள் இவருடைய தவத்தில் எழுந்தவை; அனுபவத்திற் கனிந்தவை; உலகத்தோடு ஒன்றுபட்ட நிலையில் ஞானம் வளர்வதைக் காட்டுபவை. எனவே, இவை அனுபவச் சிந்தனைகள். இங்கே மறைப்போ, ஒளிவோ இல்லாமல் எல்லாம் விளங்கக் காணலாம். இவருடைய உண்மையான குரலை இங்கே கேட்கலாம். அந்த வகையில் அவை சிறந்த இலக்கியங்கள். ஆங்கில நாட்டிலேயே கல்வி முழுவதையும் பெற்றதால் ஆங்கிலம் இவருக்குத் தாய் மொழி போல் ஆகிவிட்டது. அதன் தனி அழகை இங்கே கூறிக்கொண்டிருக்க வேண்டுவதில்லை. இவருடைய கருத்துக்கள் உள்ளிருந்து உண்மையாய் வெளிவரும்போது அவை அப்படியே ஆங்கிலமாக உருக்கொண்டு வெளிவந்தன. ஞானத்திற்கேற்ற சிந்தனை, சிந்தனைக்கேற்ற கருத்துத் தெளிவு தெளிவுக்கேற்ற நடை - இப்படி அமைகின்றன இவருடைய நூல்கள் என அவற்றின் சிறப்பைக் கூறிமுடிக்கலாம்.

இலக்கியச் செல்வர்

ஜவாகர்லால் நேருவின் கவர்ச்சி, மதிநுட்பம், பெருந்தகைமை, பொறுமை ஆகிய பண்புகளை மறப்பதற்கில்லை. நம்முடைய காலம் மட்டும் அமைதியாக இருந்திருக்குமேயானல், அவர் மாபெரும் எழுத்தாளராகத் திகழ்ந்திருப்பார் என்பதை நான் அறிவேன். அவரது நடை தனிப்புட்டது; அவருடைய கற்பனையில் உயிரோட்டமும் துடிப்பும் உண்டு. நமது தாய் நாட்டின் அரசியல் வாழ்வில் அவர் தமது திறமையைச் செலவழித்திருக்காவிட்டால் அவர் எத்தனைப் புத்தகங்களை எழுதியிருக்க முடியும்! அந்த வகையில் எனக்கு வருத்தந்தான். ஆயினும் அவர் எழுதியுள்ள ஒரு சில சிறந்த நூல்கள் எனக்கு ஆறுதல் அளிக்கின்றன. புத்தகங்களைக் காட்டிலும் உயிரோட்டமான தலைமையே இந்தியாவுக்குத் தேவையாக இருந்தது என்று நான் கருதுகிறேன். ஜவஹர் அதை அளித்துள்ளார்.

— பேர்ல்பக்

புதிய இந்தியாவை உருவாக்கிய சிற்பி

பி. ஸ்ரீ.

''கொழுத்த சம்பளம் எனக்கு வேண்டாம்'' என்று தம் சம்பளத்தை ரூ. 5,500 ஆகக் குறைத்துக்கொண்டார் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல். அந்தத் தியாகத்தை வேறு எந்த இந்திய கவர்னர் ஜெனரலையும் பாராட்டியறியாத ஜவாகர்லால் நேருவும் நெஞ்சார வாயாரப் பாராட்டினார். 'டில்லீசுவர பீடத் தலைவரின் மாத ஊதியம் முதல் அமைச்சரின் ஊதியத்திற்குக் குறைந்திருக்கலாகாதே!' என்று கவலைப்பட்டார்.

ராஷ்டிரபதி இல்லாமல் ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த காலம் அது. நேருதான் அப்போதும் முதல் அமைச்சர். அச் சமயத்தில் நேருவுக்குத் தம் மாதச் சம்பளம் இவ்வளவு என்பது கூட நினைவிற்கு வரவில்லை. 'சர்தார் படேல்! எனக்கு எவ்வளவு சம்பளம்?' என்று கேட்க வேண்டியதாயிற்று. ஏன், கேட்டும் தெரிந்துகொள்ள இயலவில்லை. உதவி அமைச்சராக இருந்த படேலுக்கும் முதல்வரின் சம்பளம் நினைவிற்கு வராததால், எல்லாருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

தம்மை மறந்த சிற்பி

தம்மையும் மறந்து புதிய இந்தியாவை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார் நேரு. அப்போது வயது அறுபது. எவ்வளவோ பெரிய அரசியற் சுமையைச் சுமப்பதற்காகத் தம் சம்பளத்தை மறந்திருந்ததுபோல், தமக்கு வயது முதிர்ந்து வருகிறது என்பதையும் அவர் ஒருவாறு மறந்தே தொடர்ந்து தொண்டாற்றி வந்திருக்கிறார்; வயது முதிர்ச்சியை 'இளமையின் முதிர்ச்சி' என்றே கருதி வந்தது போல் வாழ்ந்து வந்திருக்கிறார்.

'இன்று நான் அறுபதாண்டு இளைஞன்!' என்ற உணர்ச்சியுடன், அன்பர்கள் நினைவூட்டிய அந்த அறுபதாம் ஆண்டுப் பிறந்த நாள் விழாவை நேரு கொண்டாடியபோது, ராஜாஜி ஒரு பூச்செண்டைப் பரிசாக அனுப்பியிருந்தார். நேருவின் இளமையுணர்ச்சியும், உவகை உள்ளமும், தேசப்பணி ஆர்வமும் நீண்டகாலம் வாடாத பூச்செண்டாகப் பரிமளிக்க வேண்டும் என்பதற்கு அறிகுறி ராஜாஜியின் பரிசு. (அந்நாளில் இந்த அன்பர்களுக்கிடையே கருத்து வேற்றுமை இல்லை.)

ராஜாஜி பூச்செண்டு அளித்த அதே சமயம் சீக்கியர்கள் ஒரு கத்தியைப் பரிசாக அளித்தனர். இது நேருவின் வீரத்திற்கு அறிகுறி — தன்னலப்பற்றையும் வகுப்பு வெறியையும் வேறு சிறுமைகளையும் வெட்டி வீழ்த்தும் வீரத்திற்கு அறிகுறி. நேருவின் ஜனநாயகப் பண்பிலும் உயர்ந்த மனிதப் பண்பிலும், பூச்செண்டின் மென்மையையும் பொலிவையும் மணத்தையும் காண்பதுடன், கத்தியின் வன்மையையும் கூர்மையையும் நேர்மையையும் ஒரு • சேரக் கண்டிருக்கிறோம்.

நேருவின் புன்னகையிலும் முகமலர்ச்சியிலும் ரோஜா மலர்ச் செண்டு ஒன்றன் பொலிவையும் ஒளியையும் காண்பது போலத் தோன்றும். அப்போது 'இவர் உலகத்திலேயே அழகானவர்களில் ஒருவர்' என்ற எண்ணமும் தோன்றும். நேருவின் சீற்றத்திலும் படபடப்பிலும் கத்தி வீச்சின் மின்னொளியைக் காணலாம். மின்வெட்டி மறைவது போன்ற அந்தக் கோபாவேசமும் தருமாவேசத்தின் பகுதிதானே!

'ஷெர்வானி' யில் சிவப்பு ரோஜா ஒன்று அணிந்திருப்பார்; பழுப்புநிறச் சொக்காயின் பொத்தான் துளையில் வெள்ளை ரோஜா அணிவதும் உண்டு. பெருங்கூட்டங்களிலும், மகிழ்ச்சி பொங்கும் குழந்தைகளுக்கிடையிலும் இவருடைய ஆர்வத்துடிப்புள்ள முகப் பொலிவையும் கவர்ச்சி மிக்க இளநகையையும் கண்டிருப்பவர்கள், 'எத்தகைய சுகபோகத்தை எப்படித் துறந்து எளிய வாழ்க்கை மேற்கொண்டிருக்கிறார்!' என்று வியப்பதுண்டு.

தேச பக்தியை வாடா மணி விளக்காக இதயத்தில் ஏற்றிப் போற்றி வந்ததால், தூய தாயன்புடன் தியாகம் புரிவது இவருக்கு எளிதாயிற்று. குழந்தைகளிடம் பரிவு கொண்டவர் முதியோர்களிடம் பணிவு தோன்ற நடந்து கொள்வார். சிறிதும் வெறுப்போ, பகைமையோ இல்லாத நகைச் சுவையுடன் உரையாடுவார். இப்பேர்ப்பட்ட தனிப் பெருந் தலைவரிடம் சினமோ சீற்றமோ நிலைக்க முடியுமா? இவருள்ளமும் குழந்தை உள்ளம்; சிரிப்பும் குழந்தைச் சிரிப்பு. எதிரியை இகழ வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலே சுடச்சுட விடை கூறித் தாமும் சிரித்துப் பிறரையும் கொல்லென்று சிரிக்க வைத்து விடுவார்.

சுதந்திர இந்தியா என்ற பெரிய மாளிகையை உருவாக்குவதில் இவருக்கு இந்த நகைச் சுவையும் குணதிசயமும் இன்றியமையாதவை ஆகி விட்டன. சென்ற அரை நூற்றாண்டாகக் காங்கிரசிலும் நாட்டிலும் நேரு முக்கியமானவராகத் திகழ்ந்தார். காந்தி அடிகளின் மறைவுக்குப் பின் நேருவே காங்கிரசாகவும் இந்தியாவாகவும் இருந்தார். மக்கள் முழுவாழ்வு வாழ வாய்ப்பளிக்கும் சுதந்திர-சுபிட்ச இந்தியா என்ற குறிக்கோளைக் காங்கிரசுக்கும் நாட்டுக்கும் நன்குணர்த்தினர்.

இதைச் சாதிக்க மக்களுக்கு வழிகாட்டும் நண்பராகவும், தெம்பு ஊட்டி அழைத்துச் செல்லும் தலைவராகவும் நேரு விளங்கினர்; பன்னெடுங்காலச் சோர்வு

மனப்பான்மையிலிருந்து இந்திய சமூகத்தைத் தட்டி யெழுப்பினர்; முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்த முட்டுக்கட்டைகளை விலக்கிச் சமூக அமைப்பில் புரட்சிகரமான புதுமையைப் புகுத்த விரும்பினர்.

அறிவுக் கூர்மைபோல் நேர்மையும் வாய்ந்தவராய் அனுபவமும் நெடு நோக்குங்கொண்ட இந்த அரசியல்வாதி பெரிய மனிதர் மட்டும் அல்லர், நல்ல மனிதரும் கூட; ஒப்பற்ற மேதையும் ஒப்பற்ற இதயமும் கொண்டவர். உணர்ச்சித் துடிப்புள்ள ஆர்வம் மிக்க உள்ளத்திலே களங்கமற்ற சிந்தனைகள் அலைஅலையாக எழுந்தன. இவரிடம் மேற்றிசையின் விஞ்ஞான மனப்பான்மையும் கிழக்குத் திசையின் பண்பாட்டுச் சிறப்பும் இசைந்திருந்தன. இவர் பண்பாடு, இணக்கமும் நல்லுணர்வும் கொண்டு இடையருது வளர்ந்தோங்கியது.

நேரு ஒரு பகுத்தறிவுவாதி; தம் குருவைப் போல் சமய நம்பிக்கையுள்ளவர் அல்லர். எனினும் நன்னெறியில் நடக்க வேண்டும் என்பதிலும் அதற்கு அடிப்படையான மெய்யுணர்வு வேண்டும் என்பதிலும் கூட நம்பிக்கையுள்ளவர். சீடரும் குருவும் இணையற்ற இரட்டையர். காந்தியடிகளுடன் இவர் கருத்தொருமித்துக் கட்டி நிறுத்திய செல்வ நெடுமாடம்தான் சுதந்திர இந்தியா.

. இந்தியா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, நேரு காந்தியடிகளின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அரணுகக்கொண்டு, வீரம் மிக்க ஒப்பற்ற தலைமை தாங்கி மக்களின் இதயங்களில் சிறப்புமிக்கதோர் இடம் பிடித்துக் கொண்டார். அன்னிய ஆதிக்கம் இவரைப் பன்முறை கைதியாக்கிச் சிறையிலே அடைத்து வைத்தது. ஏறத்தாழப் பத்தாண்டுகள் சிறையிலே கழிந்தன. இப்படி இவரும் இவர் குருவும் தேச மக்களும் தவம் கிடந்ததன் பயனுகப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு இந்திய அரசியல் ஒரு புதிய அருணோதயம் கண்டது.

இருநூறு ஆண்டுகளின் அடிமைத் தளை இற்றுவிழவே, இந்தியா 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தலைநிமிர்ந்தது; தனக்குரிய முன்னேற்றப் பாதையில் நடக்கத் தொடங்கியது. இந்தப் பாதையை வகுத்து இதில் இந்தியாவைப் பதினேழு ஆண்டுகளாக அழைத்துச் சென்ற மாபெருந்தலைவர் பண்டித ஜவாகர்லால் நேரு. இவரை உலகம் புதிய இந்தியாவின் நிகரற்ற சிற்பியாக அறிந்து வந்திருக்கிறது.

சிற்பியின் கனவுகளும் நனவுகளும்

இந்தியா சுதந்திரம் பெற்றதும் நேரு முதன் மந்திரியாகித் தொடர்ச்சியாகத் தாம் மறையும் வரை இயன்ற பணிகளையெல்லாம் செய்து வந்திருக்கிறர். அன்னிய ஆதிக்கத்தால் ஏற்பட்டிருந்த கேடுகளைப் போக்க முயன்றர். நாட்டின் ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி, சமூக மறுமலர்ச்சி, சர்வதேச சமாதானம் ஆகிய நாலு தூண்களில் எதிர்

கால இந்தியா உலகத்துக்கொரு புதுமையாக நின்று நிலவ வேண்டும் என்பது இவரது பொற் கனவு.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கு உலகக் கண்ணோட்டம் தந்தவர் நேருவே. சுரண்டப்படுவோர் அனைவரும் விடுதலை பெறுவதற்காகவும், புதிய சமுதாய அமைப்பு நிறுவப்படுவதற்காகவும் நடைபெறும் உலகப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே அவர் இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தைக் கருதினார். மார்க்ஸ், லெனின், ஆகிய புரட்சிக்காரர்களின் நூல்களும், ஆங்கில இலக்கியம் போல், இவரது அரசியல்-உணர்வை ஊட்டி வளர்த்தன.

சோவியத் புரட்சி பொதுவாக மனித சமுதாயத்தை முன்னேறச் செய்தது என்று இவர் கருதிய போதிலும், உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அங்குலமும் இந்தியராகவே நின்று சிந்தித்தார்; கனவு கண்டார்; செயலாற்றினார். கி.மு. மூன்றும் நூற்றுண்டில் அரசாண்டு 'இனிக் கொலைக் கருவிகளை ஒரு போதும் தொடேன்!' என்று சூளுரைத்துச் சமாதானத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அசோக மன்னனையே இவர் தமக்கு வழி காட்டியாகக் கொண்டார்.

இந்தியா நேருவின் உள்ளத்தில் ஊறி உதிரத்தில் கலந்திருந்தது. இவருக்கு இந்தியா என்றால் பூகோளத்தின் ஒரு நிலப்பகுதி என்பதில்லை; கோடிக்கணக்கான சகோதரர்களின் உயிர்ச் சக்தியும் உழைப்பும் இதயத்துடிப்பும் நிரம்பி அவர்கள் வாழ்விற்கு உரியதோர் உறையுளாக அமைந்திருக்கும் தாயகம்—இன்றைய உலகின் இன்றியமையாத பகுதியாக வாழவும் வளரவும் தகுதி பெற்றிருக்கும் மக்களின் தொகுதி.

இந்தியாவை நேசித்துத் தொண்டாற்ற விரும்பிய நேரு இன்றைய இந்தியா மீதும் எதிர்கால இந்தியா மீதும் அபார நம்பிக்கை கொண்டிருந்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதர தருமம் என்று மேலை நாட்டார் கூறும் முழுப்பொருளுடன் சத்தியம், அன்பு மற்றும் வாழ்க்கைக்கு வேண்டிய பண்புகள் ஆகியவற்றின் சின்னமாக இந்தியா விளங்க வேண்டும் என்ற நம்பிக்கையும் நேருவை நாட்டுப் பணியில் தூண்டிய வண்ணமாயிருந்தது.

எனினும், ஏறக்குறைய ஓர் அன்னிய ஆராய்ச்சிக்காரன் போல் இவர் பழமையின் சின்னங்கள் பலவற்றையும் நோக்கியதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்; 'மேற்கு வழியாகக் கிழக்கை நோக்குவதாகவும்' கூறியுள்ளார்; பழமையில் பலவற்றையும் தள்ளிவிட வேண்டும் என்கிறார்; அதே சமயம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியா நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தொடர்ந்து வாழ்ந்து வந்திருப்பதன் இரகசியத்தையும் அறிந்து கொள்ள முயன்றிருக்கிறார்.

நேருவின் வரலாற்றுப் பார்வை

வரலாற்றுப் பிரியர் நேரு. அவர் வரலாற்றின் போக்கைப் புரிந்து கொண்டு புதுமைக் கொள்கைகளை உருவாக்கினார்; புதிய வழிகளைக் கண்டு அந்த

வழிகளில் செல்ல ஒளியும் காட்டினார். சென்ற காலத்துப் பரிசுகளைத் திருப்பித்திருப்பி எண்ணிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் இன்றைய மக்களுக்குச் சிரத்தையுடன் செய்வன திருந்தச் செய்ய வேண்டும், எதிர்காலத்துக்குரிய கடமைகளையும் செய்யவேண்டும், இதற்கு உரிய வரலாற்றுப் பாடங்களையும் கற்றுக்கொள்ளலாம் என்பது நேருவின் கொள்கை.

இந்தச் சரித்திர மாணவர், சாதாரண மாணவர் போலவோ, ஆராய்ச்சிக்காரர் போலவோ வரலாறு கற்கவில்லை. பாடப் புத்தகங்களின் பாடங்கள் போல் வரலாற்றுப் பாடங்களை எழுதி வைக்க முடியாது என்றும், அந்தப் பாடங்களை அப்படியே 'காப்பி' அடித்து இன்றைய நிலைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்றும் நேரு கருதுகிறார்.

எனினும், இறந்த காலத்தை ஊடுருவி நோக்கி அக்கால நிலைகளை இயங்கச் செய்த சக்திகளைக் கண்டுபிடிக்க முயலலாம்; இந்த முயற்சியிலும் நேருக்கு நேர் விடையோ பலனோ கிடைத்து விடாது. மேலும், பழையகாலம் நம்பிக்கை நிறைந்த காலம். அரசர்கள், குடிகளின் பக்தி விசுவாசங்களும் சிற்பிகள், கல் தச்சர்களின் ஆவேச நம்பிக்கையும் பெரிய பெரிய கோயில்களையும் சிற்ப விசித்திரங்களையும் உருவாக்கி வைத்திருக்கின்றனவே, அந்த வரலாறு திரும்பிவராது! இது பக்தியுகம் அன்று, ஆராய்ச்சியுகம் என்கிறார்.

புது வழிகளையும் உண்மையின் புதிய அம்சங்களையும் நம் சூழ்நிலைக்கு இசையக் கண்டு கொள்ள விரும்புகிறோம். இன்றைய மக்களான நாம் அதற்காகக் கேள்விகள் கேட்கிறோம்; வாதமிடுகிறோம்; புதிய கொள்கைகளையும் தத்துவ இயல்புகளையும் வகுத்துக்கொள்ளவும் பார்க்கிறோம். அநீதியும் ஏழை கண்ணீரும் மூர்க்கரின் மிருகத் தன்மையும் நம் உள்ளத்தைக் கலக்கிப் புதிய விமோசன வழிகளையும் கொள்கைகளையும் காணத் தூண்டும்போது, வரலாறு சற்று வழி காட்டுகிறது.

'மக்கள் வளர்ச்சிக்கு எல்லையில்லை' என்ற பாடத்தை வரலாறு கற்பித்தது நேருவுக்கு. சென்ற காலத்தின் திருதராட்டிரப் பிடிப்பிலிருந்து விடுதலை பெற்று நாம் எதிர்காலத்தை நோக்கிச் செல்லத்தான் வேண்டும் என்கிறார். சென்ற காலம் உண்மையின் சில அம்சங்களை நமக்குத் தந்திருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார்; இவற்றுள் சில ஆன்மீக அடிப்படை உண்மைகள் என்பது காந்தியடிகளின் கொள்கை எனினும், உண்மையின் பல அம்சங்களும் எதிர்காலத்தில் மறைந்து கிடக்கின்றன என்பது நேருவின் திட நம்பிக்கை.

நேரு கற்ற வரலாற்றுப் பாடங்களில் முக்கியமான ஒன்று அரசியல் எகாதிபத்தியங்களைக் காட்டிலும் கருத்துலகின் செல்வங்களும் மகாராச்சியங்களும் வலிமையுள்ளனவாக நிலைபெற்று உலகத்துக்கு நலம் புரிந்திருக்கின்றன என்பது. எனவே, இவர்

அகமத் நகர்ச் சிறைக் கூடத்தில் 1944-ல் உலகப் புகழ் பெற்ற தமது 'இந்திய தரிசன' த்தை எழுதினர். இதில் இவர் பழங் காலம் பற்றி ஆராய்ந்து பார்த்த துடன், நிகழ்காலத்தை உற்று நோக்கியும் எதிர் காலத்திற் குள்ளே ஊடுருவிப் பார்த்தும் அரும்பெருங் கருத்துக்களை வெளி யிட்டிருக்கிறார்.

சிறந்த வரலாற்றுப் புத்தகங் களைக் கற்கும் முறை தெரிந்து கற்றவர் நேரு. இங்கிலாந்தி லுள்ள 'ஹாரோ' பாடசாலையில் படித்தபோது, இவருக்கு ஒரு புத்தகப் பரிசு கிடைத்தது. கரிபால்டியின் வாழ்க்கை வர லாறு அது. அன்னிய ஆதிக்கத்தி லிருந்த இத்தாலி தேசத்தைப் போராடி விடுவித்த தேசபக்த வீரன் கரிபால்டி. இப் புத்தகத் தைப் படிக்கும்போது இத்தாலி என்று வந்த இடங்களில் இந்தியா என்று மாற்றிப் படித்ததுடன், ''கரிபால்டியைப் போல் நானும் ஏன் இந்தியாவுக்காக விடுதலைப் போர் புரியக்கூடாது?' என்று தம்மைத் தாமே பன் முறையும் கேட்டுக் கொண்டாராம்.

குழந்தைப் பருவத்திலே கதை கள் கேட்பதில் பிரியம் கொண்டி ருந்த இவரை அராபிக்கதைகளைப் போல் வரலாற்றுக் கதைகளும் வசீகரித்தன. முஸ்லீம் குமாஸ்தா ஒருவன் குழந்தை நேருவை மடி யில் வைத்துக் கொண்டு 1857-ம் ஆண்டில் இந்தியச் சிப்பாய்கள் நடத்திய சுதந்திரப் போராட்டங் களை அடிக்கடி வருணித்துக் கூறிய துண்டு. அவற்றுள் சிலவற்றை வயது முதிர்ந்த அந்தக் குமாஸ்தா நேரில் பார்த்திருந்தான்; அவற் றால் தானும் துன்பம் அடைந்தி ருந்தான். அவன் அக்கதைகளைச் சொல்லச் சொல்ல, குழந்தை ஜவாகர் மனம் குமுறி அனுபவித் தது.

இப்படியெல்லாம் வரலாற்றால் வசீகரிக்கப் பெற்றிருந்த குழந்தையுள்ளம் நாளடைவில் வரலாற்றை நோக்கும் முறை யுடன், பயன்படுத்திக் கொள்ளும் முறையையும் கற்றுக் கொண்டது. ஜவாகர்லால் சுதந்திரப்போராட் டத்தில் முழுமூச்சுடன் ஈடுபட் டிருந்த காலத்திலே அரசியல் கூட்டம் ஒன்றில் தருக்க சாத்தி திரப் பேராசிரியர் ஒருவர், இவர் தலைமையில் பேசிக் கொண்டிருந் தார். அப்போது அவர் காங்கி ரஸ் மகா சபையின் நடவடிக்கை களைத் தருக்கரீதியாக அலசிப் பார்த்து, 'இவை நடைமுறைக்கு ஒத்துவராதவை' என்று கண்டித் தார். இத் தருக்கவாதியை ஒரு வரலாற்றுத் துணைக்கைக் கொண்டு மடக்கி வாயடைக்கச் செய்தார் நேரு.

முகத்தில் குறுநகை அரும்ப, 'நம் பேராசிரிய நண்பரின் பேச் சைக் கேட்டதும் ஒரு கிரேக்கப் பேராசிரியரின் நினைவு வருகிறது' என்றார். ஒரு சமயம் அந்தப் பேராசியர் சேற்றுக் குழி ஒன் றில் சிக்கிக் கொண்டார். தருக்க முறையில் வல்லவனான சீடன் ஒருவன்—அந்த வழியே வந்தவன்— ''இவரை இப்போது சேற்றி லிருந்து விடுவிப்பதால் என்ன பயன்?'' என்று தருக்கம் செய் யத் தொடங்கினான். மேலும் தருக்க முறையில் ஆற அமரச் சிந்தித்த பின் ஒரு முடிவுக்கு வர லாமே! என்று சொல்லி அப்பால்

போய் விட்டான்'. நேரு இப்படிச் சொன்னதும் எல்லோரும் சிரித்தார்கள். தருக்கவாதி தலை குனிந்தார்.

நேருவின் வரலாற்றுப் பார்வை இவரை வறட்டுத் தருக்கத்திலோ தத்துவத்திலோ செலுத்தி விடவில்லை; வாய்ப்பிற்கு இசைந்தவாறு செயலாற்றத் தூண்டியது. நவகாளி மாவட்டத்தில், இந்து-முஸ்லீம் மக்களிடையே அமைதி ஏற்படுத்த மகாத்மா காந்தி முயன்று கொண்டிருந்த போது ஒரு சிறு வாய்க்காலைக் கடக்க மூங்கிற் பாலம் ஒன்றன் மீது நடந்து செல்லப் பழகியிருந்தார். அதை ஏதோ ஒரு வித்தை காட்டுவது போல் நேருவுக்கு மகாத்மா காட்டியதும், இவர் சிரித்தார். உடனே மாகாத்மா இவர் நினைப்பது போல் அந்த வாய்க்காலைக் கடப்பது அவ்வளவு எளிதன்று என்றார். ஜவாகரோ, 'இதோ பாருங்கள்' என்று சொல்லிக் கொண்டே ஒரே தாண்டலில் தாண்டி விட்டார். இச் செய்தித் துணுக்கு, ஜவாகர் தம்முடைய படிப்பையும் பழக்கங்களையும் எவ்வாறு சமயோசிதமாகப் பயன்படுத்திக் கொண்டார். என்பதற்கு ஓர் அறிகுறியாகும்.

நேருவின் செய்தி

காந்தியடிகளுக்கும் நேருவுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் உண்டு. ஜவாகரின் விஞ்ஞான மனப்பான்மையோடு கூடிய பொருளாதாரக் கொள்கைக்கும் காந்தியடிகளின் 'கிராமராஜ்ய' கொள்கைக்கும் இடையே உள்ள வேற்றுமையை அறியாதார் யார்? குஜராத்தில் எண்ணெய் வயல்களை நேரு முதல் முதல் பார்வையிட்டபோது, 'இந்திய மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் இது' என்று பரவசமுற்று அதை அள்ளித் தமது தூய ஷர்வானிச் சட்டையில் பூசிக் கொண்டாராம். சுதந்திர இந்தியாவில் எண்ணெய்த் தொழில் போன்ற தொழில் துறைகள் வளர்ந்தோங்க வேண்டும் என்ற நேருவின் ஆர்வத்திற்கு இச் செயலை ஓர் அடையாளமாகக் கொள்ளலாமல்லவா?

எதிர்கால இந்தியாவை எங்கும் தொழிற்சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்லூரிகளுமாகத் தம் அகக் கண் எதிரே கண்டார் நேரு. இந்தியா தொழில் மயமானால் தான் கடைத்தேற முடியும் என்று நம்பினார். பொருளாதார சமத்துவமும் அரசியல் சமத்துவமும் சமுதாய சமத்துவமும் மக்கள் பெற வேண்டும் என்ற ஆசை இவர் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது. நேருவின் நேரடியான தலைமையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் வகுக்கப்பட்டன. இத் திட்டங்களின் பயன் எதிர்பார்த்ததற்குக் குறைவுதான் என்பதைத் திட்டமிட்டவர்களும் இன்று ஒப்புக்கொள்கிறார்கள். எனினும், நேருவின் பெரு நோக்கைப் பெரிதும் போற்ற வேண்டியது தான்.

நமது நீண்ட வரலாற்றுப் போக்கிலே இன்று நாம் மிகப் பெரிய மாறுதலை அடைந்து வருகிறோம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பழமை மாறித்தான் ஆக வேண்டும்.

காலப் போக்கிலே சில அபாயங்களையும் சமாளித்துத்தான் ஆக வேண்டும். நடக்கும்போதே தடுமாறி விழுவதும் சாத்தியமே; மறுபடியும் மண்ணைத் தட்டிக் கொண்டு நடப்பதே முறை. துன்பங்கள், இடையூறுகள் எல்லாம் நம்முடைய வலிமையைச் சோதிக்கின்றன; அதிகரிக்கவும் செய்கின்றன. இது நேருவின் செய்தி.

இவர் சுதந்திரப் போர்வீரர் மட்டும் அல்லர், உன்னத அரசியல் தலைவர் மட்டும் அல்லர், உன்னத எழுத்து வன்மையும் உள்ளவர்; ஆழ்ந்த கல்வி அறிவும் இந்தியப் பண்பாடு, உலகப் பண்பாடு ஆகிய விரிவான ஞானமும் உள்ளவர்; உலக சமாதானத்தின் உறுதி வாய்ந்த ஒரு காவலர். இவரது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் இவரைப் புதிய இந்தியாவின் அருமந்த சிற்பியாகக் காட்டுகின்றன. இந்திய வரலாற்றிலும் இந்திய மக்களின் உள்ளத்திலும் நேருவின் நினைவு பசுமையாக நிலைத்திருக்கும்.

டில்லியில் நடைபெற்ற சோவியத் பொதுக் கல்விக் கண்காட்சியில் ஜவாகர்லால் நேரு.

நேரு ஒரு வரலாற்றாசிரியர்

திரு. கி. ர. அநுமந்த், எம்.ஏ.

விந்தை நிறைந்த இவ்வுலகில், இயற்கையன்னையானவள் எந்த இடத்தில் எதைத் தோற்றுவிப்பாள் என்பது யாருக்கும் புரியாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது. மணமென்பது மருந்துக்குமில்லாத கள்ளிமரத்தினடுவில் நறுமணமிக்க அகிற்கட்டை உருவாகிறது. துள்ளியோடும் மானின் வயிற்றினுள்ளே மருந்துக்குரிய அரிதாரம் அல்லது கஸ்தூரி உண்டாகிறது. ஆழமிக்க கடலினுள்ளே விலையுயர்ந்த முத்துக்கள் பிறக்கின்றன. அதே முறையில் தான் துன்பத்தின் உறைவிடமெனத் தக்க சிறைச்சாலைகளிலும் மாண்பு மிக்க பல வரலாற்று நூல்கள் தோன்றியுள்ளன. சர் வால்ட்டர் ராலே (Sir Walter Raleigh), கன்டார்செட் (Condorcet) போன்ற அறிஞர்கள் தங்களது உலக வரலாற்றுக் குறிப்புகளைச் சிறைக் கூடங்களில் அடைபட்டுக் கிடந்த வேளையிலும், தலை மறைவாகத் தனியே இருந்த வேளையிலும் தான் எழுதி முடித்தார்கள். ஹிட்லரின் தன் வரலாறான மெயின் கேம்ப் (Mein Kamp) என்ற நூல் தோன்றிய இடமும் சிறைச்சாலை யாகும். அண்மையில் நம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து அமரத்துவம் எய்திவிட்ட அண்ணல் நேருஜி அவர்களை வரலாற்றாசிரியராக்கிய பெருமையும் சிறைச்சாலைக்கே உரியதாகும். அவ்வப்போது அவர் சிறைச்சாலையில் அடைப்பட்டுக் கிடந்த வேளையில் தான், அவரது ஒப்புயர்வற்ற தன் வரலாறும் உலக வரலாற்றுச் சுருக்கமும் இந்திய வரலாறும் அவரது பேனாவினின்றும் முளைத்தெழுந்தன. நேருஜியைச் சிறையிலடைத்ததன் மூலம் பிரிட்டிஷார் தங்களையறியாமலேயே வரலாற்றுக்கு ஒரு சேவையைச் செய்துள்ளனர். இங்ஙனம், செய்யாமற் செய்த உதவிக்கு வரலாற்றுலகம் பிரிட்ஷாருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளதென்றே கூறலாம்.

நேருஜியவர்கள் இயல்பாகவே வரலாற்று உணர்வுடையவராக விளங்கினார்கள். இளமையிலேயே வரலாற்றின் மீது அவருக்கு ஈடுபாடு அதிகம் உண்டு. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலே அவர் பல விஞ்ஞான நூல்களையெல்லாம் ஐயந் திரிபறக் கற்றாரெனினும், வரலாறுதான் அவரது இதயத்தைப் பெரிதும் கவர்ந்த

தொரு பாடமாகும். உலக வரலாற்றை, அதிலும் சிறப்பாக நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்களின் வரலாறுகளைப் படிக்கும்போது அவர் அப்படியே மெய்மறந்து விடுவது வழக்கம். ட்ரெவெல்யான் (Trevelyan) என்ற வரலாற்றுசிரியர் வரைந்த கரிபால்டி (Garibaldi) என்ற இத்தாலிய விடுதலை வீரனின் வாழ்க்கை வரலாறு அவர் மனதைப் பெரிதும் ஈர்த்தது. அவரைப் போல் தாமும் நாட்டுக்காகப் பாடுபட்டுப் புகழெய்த வேண்டும் என்ற அவா அவரது பிஞ்சு உள்ளத்தில் அரும்பியது. அவ்வரும்பு, மலர்ந்து காயாகி நாளடைவில் கனியையும் ஈந்த கதையை நாம் யாவரும் அறிவோம். இங்ஙனம் வரலாற்றில் அவருக்கு இளமையில் ஏற்பட்ட ருசியே சிறைச் சாலையிருக்கும் போது வரலாற்று நூல்களைப் படிக்கவும், சிந்திக்கவும், சிந்தித்தவற்றை அழகிய ஆங்கில நடையில் வடித்தெடுக்கவும் அவரைத் தூண்டியதெனலாம்.

வரலாற்றுசிரியர்களிற் பல வகையினருண்டு. சிலர் தங்களது சொந்த வரலாற்றை எழுதிவிட்டு, அதிலேயே மனநிறைவெய்தி விடுவர், வேறு சிலர் தங்கள் நாட்டு வரலாற்றிலேயே நாட்டமெல்லாம் செலுத்துவர். வேறு சிலர் உலக வரலாற்றிலேயே ஊட்டமிக்கவராய் விளங்குவர். ஆனல், நேருஜியோவெனின் தனது சொந்த வரலாற்றைத் தனியழகுடன் வரைந்ததோடமையாது, தான் வாழ்ந்த நாட்டு வரலாற்றையும் உலக வரலாற்றையும் திறம்படத் தொகுத்து எழுதி வைத்துள்ளார். அதன் மூலம் அவர் நன்கு முழுமைபெற்ற ஒரு வரலாற்றுசிரியரென்பதைக் காட்டியுள்ளார். மேலும் வரலாற்றுசிரியர்களுக்கெல்லாம் அவர் ஒரு வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். வீட்டுக்கும், நாட்டுக்கும், பின்னர் உலகத்துக்கும் வரலாற்றுத் துறையில் என்னென்ன சேவை செய்ய முடியுமோ அத்தனையும் செய்ய ஒவ்வொரு வரலாற்றுசிரியனும் முயலுதல் வேண்டும் என்பதை அவர் சொல்லாமற் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்.

வரலாறு ஓர் கலையா (art) அல்லது விஞ்ஞானமா (Science) என்பது பற்றி வரலாற்றுசிரியர்கள் இன்றைக்கும் தமக்குள் தீவிரக் கருத்து வேறுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். ஆனல் நேருஜிக்கு வரலாறு ஒரு கலையாகவே தென்பட்டது. அவர் வரைந்துள்ள வரலாற்று நூல்களும் ஒப்பற்ற கலைப் படைப்புக்களாகவே நமக்குக் காட்சியளிக்கின்றன. தென்னட்டுக் கோயில்களுக்கும், அஜந்தா ஓவியங்களுக்கும், கர்நாடக இசைக்கும் அவரது கலைப்படைப்புக்களை ஒப்பிடலாம். அவற்றிலே ஒருவித நீர்மையும், சீர்மையும் மிளிர்கின்றன. நல்ல நயமும் நடையழகும் நடம்புரிகின்றன. ஆங்கிலத்தில் அவரைப் போன்று அழகுற, அமைவுற எழுதக் கூடியவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் என்று எச்.ஜி. வெல்ஸ் என்பார் ஒரு சமயம் கூறினர். வரலாற்றை எழுதுவதில் இவ்வித முறையைக் கையாள வேண்டுமென்பதே மெக்காலே, ட்ரெவெல்யான் போன்ற புகழ்பெற்ற வரலாற்றுசிரியர்களின் கருத்தா

கும். வரலாற்று உண்மைகளைக் கண்டுபிடிக்க முயலும்போது வேண்டுமானால், வகுத்தல், பகுத்தல் போன்ற விஞ்ஞான முறைகளை ஒருவர் கையாளலாமேயன்றிக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளைத் தொகுத்து எழுதும்போது அவற்றைப் படிப்போருக்குச் சலிப்புத் தட்டாத முறையில் சுவைபட எழுத வேண்டுமென்பதை அன்னார் வற்புறுத்துகின்றனர். அவர்களது கூற்றுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக நேருஜியின் வரலாற்று நூல்கள் அமைந்துள்ளன எனலாம். அவற்றில் எளிமை, நயம், சுவை, அழகு யாவும் ஒருங்கே கலந்து காட்சியளிக்கின்றன. அவற்றைப் படிக்கும் போது நாம் ஒரு திரைப்படக் காட்சியையோ, நாடகத்தையோ காண்பது போல் உணர்கிறோம். நம்மை மறந்து நாமும் அவரோடு கல்லூரியில் படிக்கிறோம்; அப்பாவோடு சச்சரவு நிகழத்துகிறோம்; சத்தியாக்கிரகத்தில் குதிக்கிறோம்; சிறைச் சாலையில் அவதியுறுகிறோம்; உழவர்களின் நிலை கண்டு கண்ணீர் வடிக்கிறோம்; சமதர்மப் (Socialism) பாதையிலே முன்னேறுகிறோம்; குழந்தைகளோடு விளையாடுகிறோம்; இமயமலையின் இயற்கை எழிலிலே மனதைப் பறிகொடுத்து நிற்கிறோம். இங்ஙனம் வாசகர்களைத் தன்னோடு அழைத்துச் செல்லும் கலையுணர்வுடன் எழுதப் பெற்றவை நேருஜியின் வரலாற்று நூல்கள். கலையை அனுபவிப்பது போல் நாமும் அவற்றை முழுமையாக அனுபவிப்பதில்தான் இன்பம் காண முடியும். விஞ்ஞான ரீதியில் பிரித்துப் பிரித்துப் பார்த்தால் அவற்றின் அழகை முழுவதும் ரசிக்க இயலாது. உண்மையில் நேருஜி விஞ்ஞான ரீதியில் வரலாற்றை முறையே படித்து ஆராய்ச்சி நிகழ்த்தி அதன்பின் தமது நூல்களை எழுதவில்லை. ஏதோ ஒழிந்த வேளைகளில், தம் உள்ளத்தே இயல்பாக எழுந்த வரலாற்றுச் சிந்தனைகளை ஒருவழிப்படுத்தி அவர் எழுதியுள்ளார். அவ்வளவுதான். அப்படியிருந்தும் அவை சிறந்த வரலாற்று இலக்கியங்களாக விளங்குகிறதெனின் அது அவர் ஒரு வரலாற்றாசிரியர் என்பதையே நமக்கு விளக்கா நிற்கின்றது.

வரலாற்று இலக்கியத்தில் நேருஜியின் ''தன்வரலாறானது'' ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. அது அவரது சொந்த வரலாறு மட்டுமல்ல. தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறும் அதில் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. அவரது தேசபக்தி, நூல் முழுவதும் விரவிக் கிடப்பதை நாம் காணலாம். ஆனால் தேசபக்தி காரணமாக அவர் நம் நாட்டின் குற்றங்குறைகளை மூடி மறைக்கவுமில்லை. உள்ளதை உள்ளபடியே கூறிச் செல்கின்றார். உண்மையை ஒளிக்காமல் கூறல் வரலாற்றாசிரியன் ஒருவன் சிறப்பியல்பாகுமென்று கார்லைல் (Carlyle) என்ற ஆசிரியர் கூறிச் சென்ற கூற்றுக்கு எடுத்துக் காட்டாக அவரது ''தன் வரலாறு'' விளங்குகின்றது. தான் ஜார்ஜ் மன்னரோடு படித்தாரென்றும், தனது உடைகள் பாரிஸ் நகரில் சலவை செய்யப் படுமென்றும் உலவிவந்த வதந்திகளை அவர் பொய்யென்றும் நன்கு கண்டிப்பாகக் கூறுகின்றார். மற்றும்

கேம்பிரிட்ஜ் மாணவர்



வழக்கறிஞர் நேரு

மணமகனார் நேருவும்
மணமகளார் கமலாவும்
←

தந்தையாரும் மகனாரும்
→



திரு. நேரு தம் பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும்



இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. இராசேந்திரப் பிரசாத்
திரு. நேருவுக்குப் ''பாரத்ரத்ன'' என்னும் பட்டம் வழங்கும் காட்சி.

ரது குணநலன்களை அறியவும் தேசீயம் நாட்டில் படிப்படியாக எப்படி மலர்ந்தது என்பதை உணரவும் அவரது தன்வரலாறு நமக்குப் பெரிதும் துணை புரிகிறது.

பிரிட்டிஷாரின் அடக்குமுறையின் விளைவால் சிறையில் அவதியுற்றுக் கிடந்த வேளையில் எழுதப்பட்ட அவரது ''தன் வரலாற்றில்'' பிரிட்டிஷாரைப் பற்றிய நிந்தனை மொழி சற்றேனும் காணப் படாததொன்றே அவரது பெருந்தன்மைக்கு ஒரு சிறந்த சான்றாயமைகிறது. மற்றும் ஓரிடத்திலேனும் அவர் தன்னைத் தான் புகழாத பான்மையிலிருந்து நாம் அவரது எளிமையோடு கூடிய பெருமையை நன்குணர்ந்து கொள்கிறோம். கீழை நாட்டுப் பண்புகள், மேலைநாட்டு நாகரிகம் ஆகிய இரண்டிலுமே நன்கு கால்கொள்ளாது அவ்விரண்டுக்கும் இடையிலே நின்று அவரது உள்ளம் தடுமாறுகின்ற காட்சியையும் அந்நூல் நமக்கு நன்கு காட்டுகிறது. மேலும் பூரண சுதந்திரக் கொள்கை சமதர்மக் கொள்கை, சர்வ தேசீயக் கொள்கை ஆகியவற்றைக் காங்கிரசின் குறிக்கோள்களாக மாற்ற அவர் பட்டபாட்டையெல்லாம் அவரது தன்வரலாறு நன்கு சித்தரிக்கிறது.

நேருஜியின் ''தன் வரலாறு'' ஒரு தனித் தன்மை பொருந்தியது. குரோபோட்கின் (Korpotkin), ஹிட்லர் ஆகியோரின் நினைவுக் குறிப்புக்களில் காணப்படுகின்ற தேசீய வெறியும், ஏகாதிபத்திய உணர்ச்சியும் அவரது ஏடுகளில் காணப்படுவதில்லை. ஏனைய நாடுகளைப் பலாத்காரமாக அடிப்படுத்தித் தன் நாடு வாழ வேண்டும் என்ற தேசீய வெறி அவர்பால் எழவில்லை. ''நம் நாடும் வாழ வேண்டும். பிற நாடுகளையும் வாழவிட வேண்டும்'' என்ற நல்ல நாட்டுப் பற்றையே நாம் அவரிடம் காண்கின்றோம். அவரதுதேசீயம்சர்வதேசீயத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தை அவர் நசுக்கப்பட்ட எல்லா நாடுகளுடைய போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதினார். இந்தியா விடுதலைப் பெற்றால் அதையொட்டிப் பல ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் விடுதலை பெறுமென அவர் நம்பினார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதைப் பிற்கால நிகழ்ச்சிகள் நன்கு காட்டி விட்டன. காந்திஜியின் சத்திய சோதனையில் காணப்படும் தெய்வீக நோக்கு (Divine outlook) நேருஜியின் தன் வரலாற்றில் காணப்படவில்லை. ஆனால், மன்பதை உய்ய வேண்டும் என்ற மனித நோக்கு (Humanism) அவரது வரலாற்று ஏடுகளில் கரைபுரண்டு ஓடுகிறது. அலகாபாத் நகருக்கருகிலுள்ள கிராம மக்களின் வாடிய வதனங்களைக் கண்டபோது அவரது உள்ளத்தில் ஏற்பட்ட வேதனை, அதன் காரணமாகப் புத்தரைப் போல் தமது சொந்த சுகங்களை எல்லாம் அவர் தியாகம் செய்ய முன்வந்தது ஆகிய விவரங்கள் எல்லாம் அவரது மானுடப் பண்பையும் கருணையுள்ளத்தையும் நன்கு விளக்குகின்றன.

இங்ஙனம் தேசீய, விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை அறியவும், நேருஜியின்

ஆளுமையை (Personality) நாம் நன்கு புரிந்துகொள்ளவும் அவரது தன் வரலாறு நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. அது இவ்வுலகில் என்றும் நின்று நிலவக் கூடிய ஓர் இலக்கியம் ''ஹென்றி ஆடம்ஸின் கல்விப் பயிற்சி'' (Education of Henry Adams) போன்ற தன் வரலாறுகளைப் போல் அது ஒரு காலத்துக்கு மட்டும் உரியது அன்று. அது ஓர் அறிவுச் சுரங்கம். படிப்போர்க்கு இன்பம் வழங்கும் வற்ருத இன்ப ஊற்று; அடக்கப்பட்ட நல்லுணர்ச்சிகளின் வெளிப்பாடு; அதே உணர்ச்சிகளை வாசகர்களின் இதயங்களிலும் தோற்றுவிக்கும் காலக் கண்ணுடி; கதைக் கட்டுக் கோப்புடன் கூடிய உரை நடைக் காவியம்; ஒப்பற்ற கலைப் படைப்பு.

நேருஜி சிறையிலிருந்த போது (1931-36) அவர் தமது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பே ''உலக வரலாறு பற்றிய கணநேரக் காட்சிகள்'' (Glimpses of world History) என்ற பெயரில் பின்னர் வெளிவந்தது. குழந்தையாகிய தமது மகளுக்கு வரலாறு பற்றிய கட்டுரைகளை நேரு எழுத முன் வந்ததிலிருந்து அவர் குழந்தைகளுக்கு வரலாற்றறிவு எவ்வளவு இன்றியமையாத தென்பதை உணர்ந்தவர் என்பதை நாம் தெள்ளிதின் புரிந்து கொள்ளலாம். நேருஜியின் இக்கட்டுரைகள் துண்டு துண்டாகத் தனியே நிற்பது போல் தோன்றினும் அவற்றினிடையே ஒரு வரலாற்றுத் தொடர்பு காணப்படுகிறது. வரலாற்றை அவர் நன்மை, தீமை என்ற இரு சக்திகளின் போராட்டமாகவும், செல்வர்கள் வறியர்கள் ஆகிய இரு வகுப்பாரின் போராட்டமாகவும் சித்திரிக்கிருர். மார்க்ஸ் என்பார் கையாண்ட முரண் நிலை ஆய்வு முறையையே (Dialectical method) அவரும் கையாளுகின்ருர். வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த பிரெஞ்சுப் புரட்சி, ருஷ்யப் புரட்சி ஆகிய புரட்சிகளை அவர் சற்று விரிவாக ஆராய்கின்ருர். இரண்டாம் உலகப் போரின் காரணங்களை அவர் தெள்ளிதின் புலப்படுத்துகின்ருர். உலக வரலாற்றைச் சுவைபடச் சொல்லும் கலையில் அவரை வான் லூன் (Van Loon) என்ற வரலாற்ருசிரியருக்கும், அதைப் பொருளாதார ரீதியில் விளக்கம் செய்வதில் மார்க்ஸுக்கும், சமுதாயம் கலை ஆகியவற்றின் வளர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் எச். ஜி. வெல்ஸுக்கும் ஒப்பிடலாம். ஆனல், அவ்வாசிரியர்கள் ஆசிய வரலாற்றைப் புறக்கணித்தது போல் நேருஜி செய்யவில்லை. ஐரோப்பிய வரலாற்ருேடு, ஆசிய வரலாற்றுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். தீவிர நாட்டுப்பற்றின் காரணமாக அவர் சில சமயங்களில் ஒருதலைப் பட்சமான விளக்கங்களைத் தருகிருரெனினும் மொத்தத்தில் அவரது உலக வரலாறு புகழத்தக்க மேம்பாடுடைத்து என்பதில் சிறிதும் ஐயமில்லை.

''இந்தியாவை மீண்டும் காணல்'' (Discovery of India) என்ற நூல் நேருஜி இந்திய வரலாற்றைப் பற்றிச் சிந்தித்து இந்தியப் பண்பாட்டைப் புரிந்து கொண்ட கதையை விளக்குகிறது. இந்திய வரலாற்றைப்

பற்றிய ஒரு விளக்க நூல் என அதனை அழைத்தல் தகும். இந்திய வரலாற்றில் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்ற சிந்து வெளி நாகரிகத்தை அவர் சிறப்பாக வர்ணிக்கிருர். புத்தர், அசோகர் ஆகியோரைப் பற்றிய அவரது விளக்கம் விரிவும் கருத்தாழமும் கொண்டது. இந்தியாவின் வேற்றுமைகளினிடையே இழையோடிக்கிடக்கும் கலாசார ஒற்றுமையை அவர் அடிக்கடி வலியுறுத்துகிருர் 'இந்திய ஒற்றுமை'' (Indian Unity) என்ற அவரது இன்னொரு நூலும் இதே கருத்தையே வலியுறுத்துகின்றது. முஸ்லீம் மன்னர்களின் குணச்சிறப்புக்களை விவரிக்கும் போது இந்து முஸ்லிம் மனக்கசப்புகளை வளர்க்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்துகிருர். பிரிட்டிஷ் ஆட்சியை விவரிக்கும் போது அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், சுயநலத்தையும் வன்மையாகக் கண்டிக்கிருர். அதனுல் சினமுற்ற சில ஐரோப்பிய வரலாற்ருசிரியர்கள் ''நேரு நடுநிலையாளரல்லர், ஒரு தலைப்பட்சமான 'வரலாற்ருசிரியர்'' என்று குறை கூறுவர். ஆனுல், நேருவின் கள்ளமற்ற உள்ளத்தை அறிந்தவர் எவரும் அவர் மீது காழ்ப்புணர்ச்சி என்ற குற்றத்தைச் சாட்ட முன்வரார்.

இந்நூலில்தான் நேருஜி இந்தியாவின் தத்துவங்களையும் கடவுள் நெறிகளையும் அறிய முற்படுகின்ருர். எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் ஒரு முழுமுதற்பொருள் இருக்கக்கூடும் என்பதை அவர் மனம் ஒப்புக் கொள்கிறது. எனினும் விஞ்ஞான ரீதியில் அதை ஒப்புக்கொள்ள முடியாமல் அவர் உள்ளம் தவிக்கிறது. அந்த நிலையில் அவர் தன்னை மறந்து மக்களின் சேவையிலேயே முழு நேரத்தையும் கழிக்க ஆரம்பித்து விடுகிருர். ஜீவ சேவையே சிவபூஜை என்ற பொன்மொழிக்கு அவர் இலக்கணமாகி விடுகின்ருர். ''கடவுளை ஒருவன் நம்பா விட்டால் போகட்டும் பரவாயில்லை. ஆனுல், மனிதன் மீதுள்ள நம்பிக்கை மக்களிடம் மாண்டுபோகுமானுல் அது மனித சமுதாயத்துக்கே ஆபத்தை விளைவிக்கும்'' என அவர் எழுதியுள்ளமை ஈண்டு கருதற்பாற்று.

நேருவின் வரலாற்றுணர்வானது அவரது வாழ்விலும் கொள்கையிலும், செயல்களிலும் ஊடுருவி நிற்பதை நாம் பார்க்கிருேம். இந்திய வரலாற்றில் திளைத்து, இந்தியாவின் தலையாய பண்புகளை நன்கு உணர்ந்து கொண்டகாரணத்தாற்ருன் அவர் தமது ஒப்பற்ற பஞ்சசீலக் கொள்கைகளை வகுத்தார். தொன்று தொட்டு இந்தியாவுக்கும், சீனுவுக்கும் இருந்து வரும் கலாசார உறவை எண்ணியே அவர் சீனுவிடம் அவ்வளவு நட்புரிமை பாராட்டினுர்; நம்பினுர். ஆனுல் நய வஞ்சகச் சீனத் தலைவர்கள் அவரது நம்பிக்கையைக் குலைத்து விட்டனர். சீனர்களின் எல்லைத் தாக்குதல் அவருக்குத் தாங்கொணு அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது. அவரது வரலாற்று மனப்பான்மையின் விளைவாகவே அசோகரது தர்ம சக்கரம் பாரதக் கொடியிலும், அசோகரது தூணின் தலைப்பு பாரதத்தின்

முத்திரையிலும் இடம் பெற்றுள்ளதெனலாம்.

நேருஜியை, உலக மெலாம் போற்றும் உத்தமராக்கிய பெருமை வரலாற்று மனப்பான்மையினடிப்படையில் தோன்றிய அவரது சர்வ தேசிய உணர்ச்சியையே பெரும்பாலும் சாரும். ஸ்பெயினில் உள்நாட்டுப்போர் ஏற்பட்ட போதும், சீனுவில் ஜப்பானியர் அட்டூழியங்கள் புரிந்த போதும் அவர் மனம் பட்ட வேதனையை அவரது "தன் வரலாறு" தெள்ளிதின் புலப்படுத்துகிறது. போரில் இடர்ப்படும் மக்களுக்கு, அடிமை இந்தியாவி லிருந்து எவ்வளவு வைத்திய உதவிகள் புரிய முடியுமோ அத்தனையும் செய்ய நேரு அரும்பாடுபட்டார். காங்கிரஸ் நிறுவனத்துக்கே சர்வதேச மனப்பான்மையை ஊட்டியவர் அவர் ஒருவரேயாகும். உலகப் போர்களில் "அந்தோ ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்து விட்டதே" என அவர் பெரிதும் அங்கலாய்த்தார். போர் மீண்டும் ஏற்படாவண்ணம் தடுக்கும் முயற்சிகளுக்கு அவர் தனது பூரண ஒத்துழைப்பையும் நல்கினுர். ஐ.நா. சபையில் அவர் இந்தியாவை ஓர் உறுப்பு நாடாக்கியதற்கும் உலக சமாதானத்தில் அவர் கொண்டிருந்த அக்கரையே காரணமாகும். ஒருவேளை பொதுவுடைமைக் கோட்பாட்டு நாடுகளுக்கும் முதாளித்துவ கோட்பாட்டு நாடுகளுக்கும், போர் மூளுமானுல் இந்தியா அவ்விரு கட்சியினரிடையே சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்திச் சேவை செய்யலாம் என்ற எண்ணத்தினடிப்படையில்தான் அவர் தமது கூட்டுச் சேராக் கொள்கையை வகுத்தார். இங்ஙனம் அவர் உலக நன்மையை முன்னுல் வைத்துத் தனது நாட்டு நன்மையைப் பின்னுல் வைத்தே ஓயாது பணிபுரிந்து வந்தார். உலகமெல்லாம் ஒரு குடும்பமாக ஒரு கூட்டரசாக வாழ்ந்தாலன்றி நிரந்தர சமாதானம் உலகில் நிலவ முடியாதென்பதை அவர் ஓயாது வற்புறுத்தி வந்தார். உலக வரலாற்றை ஊன்றிப் படித்ததின் விளைவாகவே அவர் அத்தகைய முடிவுக்கு வந்தார். அம் முடிவையே அவர் தமது வரலாற்று நூல்களில் வலியுறுத்துகிருர். அவரது பூத உடல் மாய்ந்து விட்டது. ஆனுல் அவருடைய கொள்கைகள் சிரஞ்சீவித் தன்மையுடையன. அக் கொள்கைகளை உட்கொண்ட அவரது வரலாற்று இலக்கியங்கள் இவ்வுலகில் இருக்கும்வரை அவரது புகழ் உடம்பு நீடு வாழும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

வாழ்க நேருஜியின் நாமம்!

வெல்க அவரது பஞ்ச சீலக் கொள்கை!!

உண்மையான சமாதானத்தை அடைய ஒரு வழிதானுண்டு: அதாவது ஒவ்வொரு படியிலும் மேலும் மேலும் அனைத்துலகக் கூட்டுறவைச் சாதிப்பதுதான்.

— நேரு



பிரிட்டிஷ் தூதுக்குழுவினருடன் பேசிய பிறகு திரு. நேரு,
திரு. பட்டேல் அவர்களுடன் வைசிராய் மாளிகையிலிருந்து வருதல்.



திரு. நேரு லார்ட் மவுண்ட் பேட்டன் முன்னிலையில்
1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியாவின் முதல் அமைச்சராகப்
பதவியேற்கும் காட்சி



முதலமைச்சர் திரு. நேரு இந்தியாவின் புதிய சட்டப் புத்தகத்தில் 1950 ஜனவரி 26-ஆம் நாளன்று கையெழுத்திடுகிறார்

1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் நள்ளிரவில் சுதந்திர இந்தியாவின் முதல் சட்டமன்றத்தில் முதலமைச்சர் திரு. நேரு பேசுகிறார்

நேருவுக்கு நம் அன்பளிப்பு

திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன்

அமரர் பண்டித ஜவஹர்லாலைப் பற்றி நினைக்கையில்-அவருக்குக் குழந்தைகள் மீதுள்ள அபார வாஞ்சைதான் நினைவிற்கு வருகிறது. குழந்தைகளைப் பார்க்கையில் அவர்களோடு சேர்ந்து கொண்டு தானும் ஒரு குழந்தையாகி விடுவார்.

அஞ்சாமை என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. பயம் என்பது அவர் அகராதியில் இல்லை. இந்தத் தீர புருஷருடைய அன்பு நிறைந்த, நெகிழ்ந்த உள்ளம்—கருணையின் கடல் போன்றது. அநீதியை-அக்கிரமத்தை எங்குக் கண்டாலும் - கேட்டாலும் கொதித்தெழும் அவர்-தன் சகாக்களிடமும் இதரரிடமும் எவ்வளவு சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார் என்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். அவருடைய அணைக்கும் கை எத்தனை ஆயிரமாயிரம் நொந்த மக்களுக்கு ஆறுதல் அளித்திருக்கிறது.

இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கிய மகத்தான சிற்பி, மகாத்மாவின் வாரிசு — இடைவிடாது உலக சமாதானத்திற்காக உழைத்த உத்தமன்—உலக மேதைகளில் ஒருவர்—என்று வரலாற்றில் — பொன்னெழுத்தில் பொறிக்கப்பெறும் நம் பண்டித ஜவஹர்லால்ஜி வாழ்ந்த இந்த நாட்டில் - இந்தச் சகாப்தத்தில் வாழக்கொடுத்து வைத்த நாம் எவ்வளவு பாக்கியசாலிகள்!

இந்த உரிமையின் மறுபுறம் கடமையும் உண்டல்லவா? நேருஜி எதிர்பார்த்த-கடையனுக்கும் கடைத்தேற்றம் கொடுக்கும் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கு முழு மூச்சுடன் உழைப்பதுதான் நாம் பண்டிட்ஜிக்கு-அவர் நினைவிற்கு அளிக்கும் அன்பளிப்பாகும். இந்தப் பணிக்கு நம்மை அர்ப்பணிக்க ஒவ்வொரு இந்தியனும் நவம்பர் 14-ஆம் தேதி ஜவஹர்லாலின் ஜன்ம தினத்தில் உறுதிகொள்ள வேண்டும்.

நேரு
உலகத்தின் பொதுச் சொத்து

திரு. நாஞ்சில் கி. மனோகரன், எம்.ஏ., எம்.பி.

மறைந்த மாவீரர் நேரு அவர்கள் என் இதயத்தில் குடி புகுந்துவிட்ட குறிப்பிட்ட சில தலைவர்களில் ஒருவர் !

ஆபிரகாம் லிங்கன், நினைவரங்கில் நிலைத்து விட்டவர்.

கென்னடி, குடும்ப அங்கத்தினர்களில் முக்கியமான ஒருவர் என்ற நினைவை உருவாக்கி நின்றவர்.

மகாத்மா காந்தி - மாயவில்லை, மறைய முடியாதவர் - மன்பதை உள்ளவரை நிலைத்து நிற்பவர்.

பண்டித நேரு- அவர் ஒரு வரலாறு- கிளர்ச்சியூட்டும் கலை-சமாதானத்தின் பேரிலக்கியம்.

அவர் வரலாறு படித்தவர் மட்டுமல்லர், வடித்தவர். அவர் தீட்டிய எண்ணச் சுவடிகள் காருள்ளளவும், சந்திர சூரியர் உள்ளளவும் நிலைக்கும். எனில் பண்டித நேரு சாக முடியாதவர்.

பாராளுமன்றத்தில், நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் அதனாலேதான் நான் குறிப்பிட்டேன், 'Nehru is dead, Long Live Nehru' என்பதாக. நேரு இறந்து விட்டார். அவர் நீடூழி வாழ்க என்றேன்.

அண்மையில் தென் கிழக்காசிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தேன்.

பார்மோசாவின் குடியரசுத் தலைவர் ஜெனரலிஸிமோ சியாங், வரவேற்ற எங்களிடம் நேருவின் மறைவிற்காக தமது குடும்பத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்.

திருமதி சியாங், அந்த சோகத்தை எதிரொலித்து விட்டு, நேரு, தங்களது குடும்ப நண்பர் என்றார்.

ஜப்பான் நாட்டு முன்னாள் பிரதம அமைச்சர் கிஷி அவர்களைச் சந்தித்தேன்.

சோகம் கப்பிய நிலையில், நேருவின் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தார். அவரது தொண்டை இடறியது - நா, குழறியது.

தென்வியட்நாம் நாட்டின் அன்றைய பிரதமர் நிகுவின் கான், குடியரசுத் தலைவர் திரு. மின் ஆகியோரைச் சந்தித்தோம்.

"எங்களது நாட்டின் நெருங்கிய நண்பர் நேரு காலமாகி

விட்டார் - விளக்கைப் பறி கொடுத்துவிட்டோம்- வழி காட்டியை இழந்து விட்டோம்'' என்றார்கள். வேதனைப் புயல் கிளப்பிற்று, என் உள்ளத்தில். சைகானில், நான் தங்கிய உணவு விடுதி மெஜஸ்டிக் ஹோட்டல்.

லிப்ட் வழியாக மேலேறுகிறோம். அதை இயக்கிக் கொண்டிருந்தவன் இருபது வயது கூட நிரம்பாத, அழகான வாலிபன்.

''நீங்கள் எல்லாம் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறீர்கள் அல்லவா?'' என்றான். ''ஆமாம்'' என்றோம்!

''ஐயோ, நேருவைப் பறி கொடுத்து விட்டீர்களே'' என்றான். அவன் கண்களை நீர்த்துளிகள் மறைத்தன. எங்களது இதயத்தைக் கடுமையான வேதனை துளைத்தெடுத்தது.

சிங்கப்பூர் சென்றேன். அங்கே கலாச்சார அமைச்சர், ராஜரத்தினம் அவர்களைச் சந்தித்தேன். அவரது உணர்வும் இதுவே. மலேசியா துணைப்பிரதம அமைச்சர் ரசாக்கைக் கண்டேன். கருவூலத்தை இழந்து விட்ட கவலையை நேருவின் மறைவிலே கண்டார்.

நேரு - உலகம் தெரிந்தவர்- உள்ளம் புரிந்தவர்.

எல்லைகளைத் தாண்டி அவர் புகழ் நிலைத்தது. ஆனால் எல்லையைக் காக்கும் கட்டாயத்திற்கு அவரைச் சீன ஏகாதிபத்தியம் ஆளாக்கிற்று!

இன்று நேரு, உலகத்தின் பொதுச் சொத்து; மானிட ஜாதியின் வழிகாட்டி; சமாதானத்தின் விடிவெள்ளி. வாழ்க நேரு! வளர்க அவர் புகழ்!.



புது டில்லி வந்திருந்த சோவியத் சர்க்கஸ் கலைஞர்களிடையே திரு. நேரு

மொழியும் நேருஜியும்

கோவைக் கம்பன்
திரு. பி. ஜி. கருத்திருமன், பி. எஸ்சி., எம். பி.

மனிதன், வேறு ஏனைய ஐந்தறிவுள்ள பொருள்களிலிருந்து பகுத்தறிவால் மிகவும் வேறுபடுவதுடன், தான் உணர்த்தும் மொழியினால் உயர்ந்த நிலையையும் பெறுகிறான். உலகிலுள்ள பல்வேறு தேசங்களிலும் அங்கங்கு வாழும் மக்களுக்கேற்ப பல மொழிகள் வழங்கி வருகின்றன. சில தேசங்களில் ஒரே மொழி உண்டு; சில தேசங்களில் இரண்டு அல்லது மூன்று மொழிகளும் உண்டு. ஆனால் நம் பரத தேசத்தைப் போன்ற மாபெருந் தேசங்களில் பலவகையான மொழிகளும், பல இன மக்களும் உள்ளனர். பல மொழி, பல இனங்கள் இருந்தாலும், அடிப்படையான கலாச்சாரம், பண்பாடு ஒன்றை மத்தியமாகக் கொண்டே எல்லா வகை மொழி இன வேறுபாடுகள் பின்னிக்கிடக்கின்றன. மொழிகளிலேயும் பலவகை உண்டு. எண்ணங்களைத் தெரிவித்துக் கொள்வதற்காகப் பேசப்படும் மொழிகளாகவே பல ஆயிரக் கணக்கான மொழிகள் உலகில் நிலவி வருகின்றன. வரி வடிவங்கள் பெற்ற மொழிகள் பல. எழுத்து வடிவங்கள் ஒத்திருந்தாலும் பேச்சளவிலே மொழிக்கு மொழி வேறுபாடுகள் உண்டு. அநேகமாக, ஓர் இனத்தவர்க்கு ஒருமொழி என உலகில் எந்த தேசத்திலும் இல்லை யென்று சொல்லலாம். பெரும்பாலான மக்கள் உபயோகப்படுத்தும்படியான மொழியே, ஒரு நாட்டின் சிறப்பு மொழியாகவும், அந் நாட்டின் ஆட்சி மொழியாகவும் இயங்கி வருவதைக் காண்கிறோம். மொழிகளில் தொன்று தொட்டு வழங்கி வருபவைகள் மிகச் சிலவே. புராதீன மொழி என்பதினால் மட்டும் ஒருமொழி உயர்ந்ததாகக் கருதப்படமாட்டாது. உயர்வாகக் கருதப்படும் மொழிகள், அம் மொழிகளிலேயுள்ள இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கணங்கள், மற்றும் இவைகளைச் சிறப்பாக அமைப்பதற்கு ஏற்ற தகுதியுள்ள

இந்தியத் தலைவர்களுடன் திரு. நேரு.

திரு. நேரு, திரு. காமராசர்,
திரு. இராஜகோபாலாச்சாரியார்.

திரு. நேரு, திரு. சக்லா, திருமதி. தோர்டி.



அனைத்திந்தியக் காங்கிரஸ்
தலைவர்
திரு. காமராசருடன்...

நடுவரசு அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியத்-
துடன்...



சென்னை முதலமைச்சர்
திரு. எம். பக்தவத்சலத்-
துடன்...

உயர்ந்த கவிஞர்களையும் காப்பியர்களையும் தொன்று தொட்டுப் பெற்றிருந்ததால்தான் மேன்மையடைகின்றன. மொழிகளினால் கவிகள் உண்டாவதில்லை. உயர்ந்த எண்ணங்களையுடைய கருத்துக்களையும், கவின் நிறை கற்பனைகளையும் தன்னகத்தே கொண்ட மானிடர்கள் எங்குப் பிறந்து வாழ்கின்றார்களோ, அப்பிரதேசத்து மொழிதான், அம் மாகவிகளின் கவித்துவ ஆற்றலினால், உயிர் பெற்று, வளம்பெற்று, உயர்வும் பெறுகிறது. கற்பனை செறிந்த கவிஞர்களால் தான் மொழிகள் சிறக்கின்றனவேயன்றி, மொழிகளினால் கவிகள் உண்டாவதில்லை.

நம் பரத தேசத்தில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. அம் மொழிகளில் சமஸ்கிருதத்தைப் போல் ஆழ்ந்த கருத்துக்களையும், வேத தத்துவங்களையும் கொண்ட வேறு மொழியில்லை. தமிழ் மொழியோ, தொன்மையானதும் மேன்மையானதுமாகிய பெருங் காப்பியங்களையும், இலக்கிய இதிகாசங்களையும் தொல்காப்பியம் போன்ற அரிய இலக்கண நூல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதாலும், என்றும் புகழ் அழியாப் புலவர்களான உலகம் போற்றும் வள்ளுவர், சிலப்பதிகார இளங்கோ, கவிச்சக்ரவர்த்தி கம்பர் பெருமான் முதலியோர்களின் கவித்துவ ஆற்றலினால், உலகிலுள்ள மொழிகளில் ஈடு இணையற்ற மொழியாக விளங்குகிறது. வங்க மொழியோ, கவிகள் நிறைந்த, கருத்துச் செறிந்த தொன்மையான மொழிகளில் ஒன்று. அதே போல் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், பிறவும் போற்றப்படும் பாஷைகளே. ஏனைய மொழிகள் அண்மையில் தோன்றியிருந்தாலும் மக்களின் பண்பாட்டைச் சிறப்புறச் செய்திருக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால், இப்படிப்பட்ட பரத கண்டத்திற்கு ஒரு பொது மொழி அவசியமல்லவா? அது எந்தப் பொதுமொழி என்பதில் தான் ஒரு பெரிய பிரச்சனையே உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சனை, மிகவும் நல்ல மனதுடனும் பரந்த மனப்பான்மையுடனும் கவனிக்க வேண்டியதொன்றும். இந்த மொழிப் பிரச்சனையைப் பெரும்பாலானவர்களுடைய எண்ணத்தை வைத்தும் தீர்ப்பதற்கில்லை. பெரும்பாலானவர்களுடைய மனதைப் பொறுத்துத் தீர்ப்பதாக இருந்தால், அதனால் பாதிக்கப்படும் சிறுபான்மையோரின் பூரண ஒத்துழைப்பும், நம்பிக்கையும் மிக மிக இன்றியமையாதது. ஆகையால் தான், இந்தப் பொது மொழிப் பிரச்சனையை மிகவும் கவனமான முறையில், உலகம் போற்றும் உத்தமர் காலஞ் சென்ற பண்டித நேருஜி அவர்கள் கண்காணித்து வந்தார்கள். இந்த மொழிப் பிரச்சனையைப் பற்றி நேருஜி அவர்களது கருத்தை அறிய வேண்டுமானால் சில விஷயங்கள் மீதுள்ள அவரது கருத்துக்களை ஆராய்வது அவசியம். அந்த விஷயங்களைப் பூரணமாக அறிந்து கொள்வதின் மூலம் நேருஜியின் மொழிக்

கொள்கை தெற்றென விளங்கும். அவைகளாவன:

1. மொழிவாரி மாகாணங்கள் (Linguistic States)

2. மொழிவளம் (Enriching the languages)

3. சமஸ்கிருதம் (The Sanskrit language)

4. ஆங்கிலத்தின் நிலை (The place of English)

தற்போதுள்ள மாகாணப் பிரிவினை நிலவரமே தொடர்ந்திருக்க வேண்டும் என நாம் விருப்பப்படும் அளவிற்கு, நிலவி வரும் நிலைக்கு நாம் பழக்கப் பட்டு விட்டோம். நம் நாட்டில் உள்ள பெரிய மாகாணப் பிரிவுகள், தற்போதுள்ளதை விடச் சிறிய பிரிவுகளாக இருத்தல் வேண்டும் என்பது நேருஜியின் கருத்து. ஒவ்வொரு பகுதியிலும் வாழும் மக்கள், மொழி, கலாச்சாரம் ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டு பிரிக்கப்பட்டால், அது, நாட்டின் நல்வாழ்வும், கலாச்சாரமும் உயர்ந்த அளவில் முன்னேற ஏதுவாகும். மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என பரதத்தின் தெற்கிலும். மேற்கிலும் உள்ள மக்கள் சொல்லி வருகின்றனர். இப் பிரச்சனையின் முடிவு, அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்ததேயன்றி அதில் கட்டாயம் என்ற ஒன்றைத் திணித்தல் கூடாது. மொழியும், கலாச்சாரமும் உயர மொழிவாரிப் பிரிவு அவசியம் என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்தப் பகுதியின் பொருளாதாரம், நிதி, ஆட்சிப் பரிபாலனம் ஆகிய முக்கிய அம்சங்களையும் மனதிற் கொண்டு அதைக் கவனித்தல் வேண்டும். மேற் கூறப்பட்ட எல்லாக் கொள்கைகளிலும், மக்களிடம் ஒருமைப்பாடு உண்டானல், மொழிவாரி மாகாணப் பிரிவினையில் பிரச்சனையே இல்லை.

தற்போதுள்ள மாகாணப் பிரிவுகளை மனதில் கொண்டு, மொழிவாரிப் பிரிவினைப் பிரச்சனையை ஆராய்வோமானல், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மக்களில் நூற்றுக்கு நூறு பேர் அதை ஆதரிப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது. தற்போது நாடு உள்ள நிலையில், நாட்டின் ஒருமித்த ஒருமைப்பாட்டு எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் ஓங்க வேண்டும் என்பது மிகமிக அவசியம். அப்படிப்பட்ட நிலையில், இந்த ஒருமைப்பாட்டு எண்ணத்தைப் பாதிக்கும் வகையில், சில மக்கள் மனத்தில் வெறுப்பைத் தூண்டும் மொழிவாரிப் பிரிவினை போன்ற எந்தக் 'கொள்கையையும் கட்டாயப் படுத்துதல் கூடாது. பரத நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் மனதும் அதை ஆதரிக்கும்வரை, அந்த 'எண்ணத்தைத் தாமதப்படுத்த நாம் தயங்கக் கூடாது.

மக்களின் நல்லெண்ணமே, நாட்டின் உயர்வுக்கு அடிகோலும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சொல்லளவில் இந்திய வரைபடத்தை எடுத்து மொழிவாரியாக மாகாணங்களைப் பாகுபடுத்தி விடலாமே தவிர அதை உடனே செயல்படுத்த முயல்வது சுலபமல்ல என்பது மட்டுமல்ல;

அது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது என்பது நேருஜியின் கருத்தாகும். பொதுவாக, எந்த ஒரு தனிப்பட்ட கொள்கையை மட்டும் வைத்துக்கொண்டு, அதை நாட்டில் செயல்படுத்துதல் கூடாது. அக் கொள்கையைப் பற்றி ஒரு முடிவிற்கு வருமுன்னர் அந்த நாட்டின் பொருளாதாரச் சுய பூர்த்திகள், நிதி முதலியவை மற்றக் கொள்கைகளையும், அக் கொள்கையோடு நிலைநிறுத்தி நோக்கி, அவை யாவும் ஒன்றுபட்டு வருமானால், அதை மேற்கொள்ளுதலே சான்றாண்மையாகும்.

மக்களின் முன்னேற்றத்தை உயர்த்த அவர்கள் பேசும் பிரதேச மொழிகளை ஊக்குவித்தல் அவசியம். சென்னை போன்ற பல மொழி பேசும் மாகாணங்களில் எல்லா மொழிகளையும் சரிசமமாக ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பரந்த நோக்கம் கொண்டவர்களாக இருப்பதுடன் நாட்டின் ஒருமைப்பாட்டிலும் கவனம் செலுத்தவர்; மற்ற மொழிகளைப் பயிலவும் முயல்வர். ஆனால், உத்திரப் பிரதேசம் போன்ற ஒரு மொழி பேசும் பெரிய மாகாணங்களில் உள்ளவர்கள் நாட்டின் பிற பகுதிகளில் வாழும் மக்களின் மொழி பற்றியோ, நிலை பற்றியோ அறிய முற்படுவதில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. எனவே உத்தரப் பிரதேசம் போன்ற பெரிய மாகாணம் நான்கு சிறிய மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பது நேருஜியின் கருத்து. எனவே, மொழிவாரிப் பிரிவினைகளின் பல தரப்பட்ட கருத்துக்களை அமைதிப்படுத்த ஒரே வழி, ஒவ்வொருவரும் அதை நல்லெண்ண நோக்குடன் சீர்தூக்கிப் பார்த்துப் பின் செயல்படுத்த முயல்வதே.

ஒரு நாட்டின் மொழிவளம், மற்றெல்லா வளங்களையும்விட இன்றியமையாத தொன்று. நம் பரத நாடு பல வேறுபட்ட இன மக்களையும், பழக்க வழக்கங்களையும், பலமொழி பேசும் மக்களையும் உடையது. இப்படிப்பட்ட நாட்டில் பொது மொழி என்ற வகையில் ஒன்றை ஏற்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. இந்தப் பொது மொழிப் பிரச்சனையை, யுகோஸ்லேவியா போன்ற முன்னேற்ற நாடுகள் நன்முறையில் தீர்த்துள்ளன. யுகோஸ்லேவியாவில் செர்பியன், மெகடோனியன் என்ற இரு மொழிகள்தான் எழுத்து வடிவிலும், மூன்று மொழிகள் பேச்சு வடிவிலும் உள்ளன. இந்த இரு மொழிகளுமே, அதிகார பூர்வமான ஆட்சி மொழியாக அங்கு ஏற்கப்பட்டுள்ளன. அதில் எந்த ஒரு மொழியும், மற்றதின் மேல் ஆட்சி செலுத்தாதவாறு, மக்களும், அரசாங்கமும் கண்காணித்து வருகின்றனர். கற்றவர்கள் அந்த இரு மொழிகளையுமே நன்கறிந்தவர்களாக உள்ளனர். சீனாவில் பேசப்படும் மொழிகள் பலவாயினும் எழுதப்படும் மொழி என்ற வகையில் ஒன்றே ஒன்று தான் உள்ளது.

இந்தியாவின் பொது மொழிப் பிரச்சனை முற்றிலும் வேறுபட்ட தொன்று. எண்ணிலடங்கா மொழிவகைகளை எழுத்து வடிவிலும் சில பேச்சு வடிவில் மட்டுமாகக் கொண்ட நாடு

இந்தியா. எந்த நாட்டிற்கும் பொதுமொழி அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இந்தியாவின் பொதுமொழி என்ற வகையில் பலரும் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் கூறுகின்றனர். அகில இந்தியமொழி என்னும் வகையில் பல மொழிகளின் கலவை ஒன்றை ஏற்படுத்தலாம் என்பது பலர் கருத்து. இதனுல் ஏற்படும் மிகப் பெரிய தீமை என்னவெனில் அம்மொழி மிகச் சாதாரணமானதொன்ருக ஆகிவிடுமே யல்லாது, மொழியின் போக்கில், நல்ல இலக்கியங்கள் வளரத் துணை புரியாது. இலக்கியத்தின் வளர்ச்சியே மொழியின் வளர்ச்சி. கவிஞர்களால் தான் மொழிவளம் உயர்கிறது. மொழியின் இயற்கைவளர்ச்சியிலே அந்நியமொழி வார்த்தைகள் வந்து கலப்பது இயல்பே தவிர, கலவை மொழியில் பலதரப்பட்ட அந்நியச் சொற்களைத் திணித்து, உபயோகப்படுத்தி, மொழியைக் கெடுப்பது முறையாகாது என்பது நேருஜியின் கருத்து.

அந்தந்தப் பிரதேசங்களின் மொழிகளில் இலக்கியம் வளர்ந்து மொழி உயரவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனுல் நாட்டின் பொது மொழி என்றவகையில் ஒன்று அமைதல் அவசியம். அது இந்தியாக இருக்கலாம் என்பது அவர் கருத்து. இந்தி மொழி, தமிழ், வங்கம் போன்ற மொழிகளைப் போல் உயர்ந்த இலக்கியங்களை உடைத்தாய் உள்ளது என்ருே, அவைகளைப் போல் தொன்மையும் புகழும் வாய்ந்தது என்ருே, சொல்லிவிட முடியாது. ஆனுல் நாட்டில் அதிகப்படியான மக்களால் பேசப்படும் மொழி இந்தி என்பது யாவரும் அறிந்ததே. இந்தியை அதிகாரப் பூர்வமான ஆட்சி மொழியாக்கினுல், மற்ற மொழிபேசுபவர்கள், அதாவது இந்தி அறியாதவர்கள், தம் முன்னேற்றத்திற்கு இது பெரும் தடை என்று எண்ணுதல் கூடாது. இந்தி, பிரதேச மொழியாக இருத்தலால், அங்கு அதன் இலக்கியம் வளர வழி வகை உள்ளது. அதே மொழி, ஆட்சி மொழியாகவும் இருந்தால், இந்தி அறியாதவர்கள் அந்த இலக்கியம் முழுவதையும் கற்றுணர வேண்டும் என்பது அவசியமில்லை. மிக எளிய முறையில் ஆயிரம் வார்த்தைகளைக் கொண்ட எளிய இந்தியை ஏற்படுத்தி, பொதுமொழி என்ற வகையில் அதை யாவரும் கற்றுணர்ந்த பின், ஆட்சி மொழியாக்குதல் வேண்டும். இதில் கட்டாயம் எதுவும் கூடாது என்பது நேருஜியின் எண்ணம். ஒரு மொழியைத் தாக்கி, மற்ருெரு மொழியைத் திணித்தோ, கட்டாயப் படுத்தியோ, அதை வளம்படுத்த முடியாது. எல்லா மொழிகளும் வளரவேண்டும். எனவே எந்த ஒரு மொழிமேலும் துவேசம் கொள்ளுதல் கூடாது.

நம் பாரத நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் மொழிகளில் மேன்மை உடையது சமஸ்கிருத மொழியாகும். பாரத நாட்டின் புகழ் தாங்கும் இலக்கியச் செல்வங்கள் எனப் போற்றப்படும் மகாபாரதம் போன்ற புராண இதிகாசங்கள் முதலில் சமஸ்கிருத மொழியில்தான் தோன்றின. அன்று தோன்றிய மகாபாரதம், என்றும் அழியாச் சின்னமாய் இருந்து, என்றும்

மேன்மை நிலையிலேயே இருந்து, டிக்களைப் பரவசமூட்டுகிறது. என்பதில் ஐயமில்லை. இந்தியாவின் பழம்பெரும் பெருமைகளை உலகிற்கு எடுத்துக்காட்டும் அம்சங்கள் பலவற்றில் சமஸ்கிருத மொழியின் மேன்மை மிக இன்றியமையாத தொன்று. உலகில் மிகச் சக்தி வாய்ந்த தொன்று எண்ணம். அந்த எண்ணங்களை, நயத்தோடு வெளியிடுதலே இலக்கியங்கள் ஆகின்றன. உயர்ந்த எண்ணங்களை, உயர்ந்த முறையில் விளக்குவனவே உயர்ந்த இலக்கியங்கள் அத்தகைய உயர்ந்த இலக்கியங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட சமஸ்கிருத மொழி உயர்ந்த மொழி என உலகின் மக்களால் போற்றப்படுவதில் அதிசயம் இல்லை. தென்னகத்திலும். வடநாட்டிலும், சமஸ்கிருதப் புலமை பெற்றோர், அவ்வக்காலங்களில் இலக்கியம் பல ஆக்கி மறைந்தனர். இம்மொழி பேச்சு வழக்கில் இறந்த மொழியாயினும் இதன் இலக்கியத்தின் உயிரோட்டம் உயர்ந்த நிலையில் உள்ளது; உலகம் உள்ளளவும் மறையாதது. இந்தப் பெருமை சமஸ்கிருத மொழி ஒன்றுக்கே உண்டு. இம்மொழியி லிருந்து பிறந்த மொழிகள் தான் தற்போது நாட்டில் பல உருவெடுத்து வழங்கி வரப்படுகின்றன. வருங்காலம் எப்படியிருந்தாலும், பெரியதும், சக்தி வாய்ந்ததும், உன்னதமானதும் புகழ் பெற்றதுமான சமஸ்கிருத மொழியும், அதில் நாளுக்கு நாள் தோன்றும் புதுப்புது இலக்கியங்களும் என்றும் நம்மை விட்டு நீங்காது. இம்மொழியினால் பாரதம், உலக அரங்கில் பெறும் பெருமை ஒவ்வொரு இந்தியனுக்கும் உரியது.

நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்கும் விஞ்ஞான உலகத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உரிமை பெற்றுச் சில ஆண்டுகளே சென்ற இந்தியா போன்ற நாடுகளுக்கு, முன்னேற்ற நாடுகளான பல அயல் நாடுகளின் துணையும், ஒத்துழைப்பும் மிகமிக அவசியம். இந்நிலையிலே உலகின் பெரும்பாலான மக்களால் அறியப்படுகின்ற ஆங்கில மொழியைக் கற்றல் அதி அவசியம். விஞ்ஞானத்தின் பல துறைகளும் ஆங்கிலத்தில் தான் அதிகமாக உள்ளன. விஞ்ஞானப் பாடங்களைப் பிரதேச மொழிகளிலோ, அல்லது பொது மொழி என்ற வகையில் இந்தி மொழியிலோ மொழிபெயர்ப்பது என்பது முடியாத காரியம். இவைகளை யெல்லாம் நோக்கும்போது ஆங்கில அறிவு அத்தியாவசியம் என்பது எளிதில் விளங்குகிறது. இந்த ஆங்கிலம் போதனா மொழியாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருப்பதால், யாவரும் ஆங்கிலம் அறிய ஏதுவாகிறது. ஆனால் இந்த ஆங்கிலத்தை மட்டும் கற்று, பிரதேச மொழியாகிய தாய் மொழியையோ, பொது மொழியான இந்தியையோ தள்ளி விடுதல் கூடாது. இந்தியப் பொதுமொழி என்ற வகையில் இந்தியைக் கட்டாயமாக எல்லோரும் கற்க முயலவேண்டும். உலகப் பொதுமொழி என்ற வகையில் ஆங்கில அறிவும் வேண்டும். தாய்மொழியின் தனிப் பற்றால் அதையும் அறிந்து, அது

வளர ஆவன செய்தல் வேண்டும் என்பது நேருஜியின் மேன்மையான கருத்து.

பொதுமொழி என்ற ஒன்றைத் திணித்தல் கூடாது. பொது மொழி என்ற ஒன்று நம் நாட்டிற்கு அவசியம் என ஒவ்வொரு இந்தியனும், காலப்போக்கில் அறியவேண்டும். அந்தப் பொது மொழி, நாட்டின் பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் மொழியாக, எளிமையான நடையில் இருத்தல் வேண்டும் எனவும் அறிதல் வேண்டும். இந்த நல்லெண்ண நோக்கோடு, பிரதேச மொழியோடு, ஆங்கில மொழியோடு, பொது மொழியாகிய இந்தியையும் நாளடைவில் கற்று, நம் நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த ஒவ்வொரு இந்தியனும் முன்வர வேண்டும் என்பது காலஞ்சென்ற பிரதமரின் எண்ணம்.

நேருஜி அவர்களது பூத உடல் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது கருத்துச் செறிந்த அறிவுரைகள், அறவுரைகள் என்றும் நம்மிடையே இருக்கின்றன; இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. தனிமனிதன் என்ற முறையில், ஒரு நாட்டிற்குச் சேவை செய்யும் பாக்கியத்தைப் பெற்றவர் நேருஜியைத் தவிர வேறொருவர் இவ்வுலகில் தோன்றியதில்லை. இந்தப் பெருமை, நாம், அவர்களுக்கு அளிப்பது மட்டுமல்ல. உலகப் பேரறிமேதைகள் அவருக்கு அளிக்கும் காணிக்கையாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை நினைவுகூர்ந்து, அவர் நினைத்த மொழிக் கொள்கையை வெற்றியடையச் செய்யும்படியான தகுதியை நாம் பெறுவோமாக.

ஜெய் ஹிந்த்!

கலைக்கதிர்

கட்டுரை, சிறுகதைப் போட்டி

முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கும் சிறுகதைகளுக்கும் பரிசளிக்கப்படும்.

பரிசுகள் விவரம்.

முதல் பரிசு	ரூ.	250—00
இரண்டாம் பரிசு	ரூ.	150—00
மூன்றும் பரிசு	ரூ.	75—00

கல்லூரி மாணவர்கள் மட்டுமே இப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

குறிப்பு:

கட்டுரை, சிறுகதை அனுப்பவேண்டிய இறுதிநாள் 30—11—'64 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டி பற்றிய முழு விவரங்களைக் கலைக்கதிர்க்கு எழுதிப் பெறுக.

நேரு இல்லா உலகு

"கமல்"

அண்ணல் நேருவின் முடிவு இத்துணை அண்மையில் இருக்குமென நம்மில் யாரும் எண்ணவில்லை. எதிர்பாராத இப் பேரிழப்பு உலகிற்குப் பேரிடியாகும். அண்ணலின் அறிவும், ஆலோசனையும் பெரிதும் வேண்டப்படுங் கால் இப்பேரிழப்பு நிகழ்ந்தது வேதனை தரும் சோதனையாகும். அமரர் காந்திஜியின் சாதனையாம் உரிமை பெற்ற நவீன இந்தியாவை உருவாக்கிய பாரதத்தின் மணிப் புதல்வர் நேரு இன்று நம்மிடையே இல்லை! கொந்தளிக்கும் பெருங் கடலாம் ஞாலஅரசியலிலே இளைய இந்திய அரசென்ற நாவாயைச் செப்பனுறச் செலுத்திச் சென்ற துணிவின் வடிவுருவம் இன்று நம்மிடையே இல்லை! அவர் அமரராகி விட்டார். அப் பெருமகனார் இல்லாத உலக அரசியல் பற்றிய ஒரு கண்ணோட்டமே இக் கட்டுரையின் நோக்கம்.

ஒவ்வொரு நாட்டு முன்னேற்றப் பாதையிலும் பல இடுக்கண்கள் குறுக்கிடுகின்றன. சுதந்திர இந்திய முன்னேற்றப் பாதையிலும் இந்து-முகமதியர் கலகம், காந்திஜியின் கொலை, சீனர்களின் ஆக்கிரமிப்பு போன்ற பல தடைகள் குறுகிட்டன. ஆனால், அன்றெல்லாம் தடையை எதிர்த்து நம்மை அழைத்துச் சென்ற வழி காட்டி இன்று நம்மிடையே இல்லை. எனினும் அவ்வழி காட்டியின் இழப்பினைத் தாங்கிக் கொள்ள இந்தியக் குடியரசு உரம் பெற்றுவிட்டது.

"நேருவுக்குப் பின், யார்?" என்ற வினா நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நெடுங்காலமாக எழுப்பப்பட்டு வந்தது. நேரு மறைந்த மூன்று நாட்களுக்குள் புதிய தலைவர் ஒருவரை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து அக் கேள்விக்கு விடையையும் அளித்து விட்டது ஆளுங்கட்சி. நேருவைப் போன்று நாட்டு மக்களிடைச் செல்வாக்கும், துணிவும் திறமையுமுடையவர்கள் கிடைப்பது அரிது என்றாலும், புதிய தலைவருடைய தேர்வு நேருவுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி பிரிந்து விடும் என்று எண்ணியவர்களை நிலைகுலையச் செய்து விட்டது. நேருவின் பதவிக் காலத்தில் அவருடைய கூர்த்த ஆலோசனையை எதிர்நோக்கி மற்றத் தலைவர்கள் வாளாவிருந்தனர். இன்றோ எல்லா முடிவுகளும் கூட்டாகச் செய்யப்படுகின்றன. கூட்டு முடிவு (Collective decision) கூட்டுத்தலைமை (Collective leadership) ஒருமனதான முடிவு (Unanimous decision) முதலிய

சொற்கள் இன்று நாட்டில் மிகுதியாக அனுபபிடுகின்றன. நேருவின் நிழலிலிருந்து அனுபவம் பெற்ற புதிய பிரதமரின் அரசாங்கம் ஜனநாயக சோஷலிசத்தையும், கூட்டுச் சேராக் கொள்கையையும் பின்பற்ற இருக்கிறது. இந்திய வெளிக் கொள்கைகளிலும், உள்நாட்டுக் கொள்கைகளிலும் மாறுதல் எதுவுமில்லை. இந்தியாவிலும் பாராளுமன்ற முறை அரசாங்கம் வேரூன்றித் துவங்கிவிட்டது. நேருவின் ஆத்மா சாந்தி பெற பிறிதொன்று வேண்டியதில்லை.

உலக சமாதானம் தழைக்கவும், உலக மக்களிடையே வறுமையும், பிணியும் ஒழியவும் பெரும்பாடுபட்ட நேருவின் மறைவிற்கு உலகு வடித்த கண்ணீரே அவரது சாதனைக்குச் சான்ருகும். வல்லரசுகள் மோதக் கூடிய சிக்கல்கள் ஏற்பட்ட போதெல்லாம் நடுநிலைமையில் நின்று உலகப் போர் ஏற்படாமற் காத்த அமைதிக் காவலரின் இழப்பை உலகம் இன்று உணர்கிறது வல்லரசுகளோடு கூட்டுச் சேராது தனித்து நின்று கூட்டுச் சேராக் கொள்கையை உருவாக்கி அதன் வழி அமைதி காத்துநின்ற அவருடைய மறைவு அக் கொள்கையின் எதிர்காலத்தை எங்ஙனம் பாதிக்கும் என்பதனை நாம் காண இருக்கிறோம். நேரு இல்லாத காமன்வெல்த்தின் எதிர்காலத்தைப்பற்றியும் தலைவர்கள் சிந்திக்கின்றனர். குடியரசான ஒரு நாடும் காமன்வெல்த்தில் உறுப்பினராக இருக்க முடியும் என்பதனைச் சாதித்துக் காட்டி அந் நிறுவனத்தின் நிலைத்த வாழ்வில் பெரும் பொறுப்புக் கொண்ட நேருவின் மறைவு அதனுடைய எதிர்காலத்தை எவ்வாறு மாற்றும் என்று நாம் காண இருக்கிறோம். நேரு இல்லா இந்தியாவில் அவருடைய மறைவினால் பெரிய மாறுதல் எதுவும் இல்லாமையை நாம் கண்டோம். நேரு இல்லா காமன்வெல்த், நடுநிலைமைக் கொள்கை, உலக சமாதானம் இவற்றைப்பற்றி நாம் ஒன்றும் அறுதியிட்டுக் கூற இயலா நிலைமையில் உள்ளோம். எது எவ்வாருயினும் அமெரிக்க ஜனாதிபதி ஜான்சன் கூறியது போல, நேரு இல்லா உலகைப் போரில்லா உலகாக்குவதே நேருவுக்கு நாம் ஏற்படுத்தக் கூடிய சிறந்த ஞாபகார்த்தச் சின்னமாகும்.

மக்கள் அன்பே இணையற்ற பரிசு

எத்தனை ஏற்றமான பொருள்களும் பரிசுகளும் கிடைத்தாலும், மக்களின் அன்புக்கு மேலானது ஒன்றுமே இருக்கமுடியாது.

—நேரு

உலகத் தலைவர்களோடு திரு. நேரு



லார்ட் மவுண்ட்
பேட்டன்
இந்தியாவுக்கு
வருகை தந்தபோது..

எலிசெபெத்
அரசியாருடன்...

இங்கிலாந்து முதலமைச்சர் மாகமில்லனுடன்...

அமெரிக்கா சென்றிருந்தபோது
ஐசன்ஹோவருடன் ...



கென்னடியுடன்...

திரு[illegible]குலின் கென்னடியுடன்...

நேரு ரஷ்யாவில் தமக்களிக்கப்பட்ட இராணுவ மரியாதையைக்
குருஷ்சேவுடன் ஏற்றுக்கொள்கிருர்

இலங்கையில் திருமதி பண்டாரநாயகாவுடன்
நேரு ஆயுர்வேத ஆய்வு நிலையத்தைப் பார்வையிடுகிருர்

கென்னடியின் அழைப்பை ஏற்றுத் திரு. நேரு அமெரிக்கா சென்றிருந்தபோது அவர் அளித்த தொலைக்காட்சிப் பேட்டி

அமெரிக்காவில் தமக்களித்த விருந்தொன்றில்
நேரு உரைநி[illegible] காட்சி

நியூயார்க்கில் ஒரு நாடகக் காட்சிக்குப் பிறகு, நேரு நடிகர்களைப் பாராட்டுகிறார்

பிரெஞ்சு ஓவியர் ஜாக்ஸ் ப்ரோமோனாட்டின் ஓவியக் காட்சியில் நேரு தமது உருவப் படத்தைப் பார்வையிடுகிறார்

எழிற் பூ!

• தமிழன்பன் •

இந்திய நாடே என்றன்
இன்னுயிர் என்றாய்! வாழ்வின்
இறுதிநாள் வரையி லந்த
ஏற்றநன் னாட்டிற் காகச்

சிந்தையால் மொழியால் ஆக்கச்
செயலினால் உழைப்பே னென்றாய்!
செப்பிய வண்ணம் செய்து
செந்தழல் புகுந்து மக்கள்

சிந்தியே விழிபெ ருக்கும்
தீத்துயர் நெருப்பு நீரில்
சிதைந்துகு நெடிய மூச்சில்
தேம்பலில் அரற்றுஞ் சொல்லில்

வந்திவண் நாடு காத்த
வள்ளலே குடிபு குந்தாய்!
வான்புகழ் நேரு நின்னை
மறக்கிலோம் எந்த நாளும்!

எண்மைசால் தலைவா! மக்கள்
இதயமாம் பொய்கை தன்னில்
எழில்நலம் காட்டிப் பூத்த
ஈடிலாப் பூவே! பூவின்

தண்மைசால் தேனும் தூய
தகவுடை அருளால் உற்ற
தரவெலாந் தகைந்தோய்! அன்பாம்
சாய்த்திடும் மணப்பெ ருக்கால்

புண்தரு பூசல் கொள்கை,
புரைமிகு தீய நாற்றம்
போக்கிநல் மென்மை சான்ற
பொன்னிகர் மொழிக ளாலே

மண்மிசை அமைதி ஆள்
மாண்பமை வழிய மைத்தோய்!
மங்கலப் பொருளே! யாங்கள்
மதித்துமை வணங்கி னேமே!

சிற்பியின் செல்வி

திரு. நா. கோவிந்தராசுலு, பி. எஸ்ஸி

'ணங்' 'ணங்' கென்ற ஒலி கொல்லைப் புறத்திலிருந்து எழுந்ததைச் செவிமடுத்த செல்வி, படுக்கையை விட்டு எழுந்தாள். எழுந்து அவளுடைய தந்தை சுந்தரமூர்த்தி செய்து கொண்டிருந்த வேலையைப் பார்த்து அப்படியே நின்றாள். ''என்னப்பா இது? இந்த இரவு வேளையிலும் கூடவா சிலையைச் செதுக்க வேண்டும். பேசாமல் வந்து தூங்குங்களப்பா!'' என்றாள் கோபம் கலந்த தொனியில்.

அவளுடைய உருவமே ஒரு அழகுக் குவியலாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பூரண நிலவொளிபட்டு மின்னிய அவளுடைய தந்தமேனி, ஒரு சௌந்தரிய தேவதையின் பொலிவு மிக்க தோற்றத்தை நினைவுபடுத்தியது! அந்த அழகை அப்படியே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் சுந்தரமூர்த்தி. அவருக்கு வயது சுமார் ஐம்பத்து ஐந்துக்கு மேலிருக்கும்.

''என்னப்பா இது, நான் பேசிக் கொண்டேயிருக்கிறேன் நீங்கள் சும்மா பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்! செதுக்கியதுபோதும், எழுந்திருங்கள்'' என்றாள் செல்வி.

''இல்லையம்மா......உன்னுடைய கை விரல்களின் அமைப்பு நினைவில்லாமல் தான் இவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் அப்படியே நில். ஒரு நொடியில் வேலையை முடித்து விடுகிறேன்'' என்றார் சுந்தரமூர்த்தி.

''போதும் என்னை நீங்கள் உருவத்தைச் செதுக்கியது. பனி கொட்டிக் கொண்டிருக்கிறது. எழுந்திருங்கள். மணி பன்னிரண்டாகிறது. படுத்துத் தூங்குங்களப்பா!'' என்று கெஞ்சிய செல்வியின் மீன் விழிகளில் நீர் துளித்தது.

தந்தையின் கையிலிருந்த சுத்தியையும், சிற்றுளியையும் பிடுங்கிச் சிலையினருகே வைத்து விட்டு, அவரைக் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

படுக்கையில் படுத்த சுந்தரமூர்த்திக்குத் தூக்கம் வந்தால் தானே! தூக்கம் அவரை விட்டுப் பிரிந்து எத்தனையோ வருடங்களாயின. துக்கம் வந்த மனிதனுக்குத் தூக்கம் ஏது? கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தார்! நொந்த மனம் கொஞ்சம் ஆறுதலடைவது போலிருந்தது!

அந்தக் காலத்தில் சிற்பி வேலாயுத சாமியைத் தெரியாதவர்களே யாரும் கிடையாது. பாண்டிய மன்னன் காலத்திலிருந்து பணியாற்றி வரும் பரம்பரை என்பதனால் அவரைக் கண்டாலே எல்லோருக்கும் ஒரு தனி மதிப்பு. சிற்பக் கலையில் அவருக்குத் தெரியாத சூக்குமங்கள், விஷயங்கள் எதுவுமே கிடையாது எனலாம். மகுடஞ்சாவடி என்ற அந்தச் சிற்றூரே அவரால் தனிச் சிறப்புப் பெற்று விளங்கியது.

தமிழ் நாட்டின் பண்டைய சிற்ப சாஸ்திரத்தை அடிபிறழாமல் பயின்றவர், என்பதனால் அவருக்குத் தனி செல்வாக்கும் சிறப்பும் இருந்து வந்தன. அவருக்கு மகனாகப் பிறந்த சுந்தரமூர்த்தியும் தந்தையைப் போலவே சிற்பக்கலையைச் சிறு வயது முதலே நேர்த்தியாகப் பயின்று வித்தகரானார்.

வேலாயுதசாமி காலத்திற்குப் பின் ஆலயம் அமைக்க விரும்புகிறவர்கள் சுந்தரமூர்த்தியைத் தான் நம்பியிருந்தார்கள். ஆனால் நாகரிகம் வளர வளர, ஆலயங்கள் கட்டும் பணி நிற்கத் தொடங்கின. மனிதர்களிடையே தெய்வ பக்தி குறையத் தொடங்கியது தான் காரணமோ அன்றி, தேவைக்கு மீறி வந்த செல்வத்தைப் பதுக்கி வைக்க ஆரம்பித்ததின் விளைவோ என்னவோ? வேலையில்லாத காரணத்தால் சுந்தரமூர்த்தியின் வாழ்க்கை வசதி குறையத் தொடங்கியது.

அழகியதொரு பெண் மகவை ஈன்றெடுத்த மனைவியும் அப்போதே மாண்டுபோனாள். அடுக்கடுக்காகத் துன்பங்கள் தொடர்ந்தன. அவருடைய தந்தை இருந்த காலத்தில், கோயில் தரும கர்த்தாக்களால் ஆதீனமாகக் கொடுக்கப்பட்ட வீடு ஒன்று தான், அவர் பட்டினியோடாவது படுத்துக் கிடக்க நிழல் கொடுத்துக் கொண்டிருந்தது.

மிகுந்த சிரமத்தினூடே வளர்ந்த செல்வி பருவம் எய்தினாள்.

அவளுடைய அற்புதமான அழகைக் கண்டு ஆனந்தப்பட்ட சுந்தரமூர்த்தி, தன் இதயத்தின் ஒரு மூலையில் ரத்தக் கண்ணீரும் வடிக்கத்தான் செய்தார்!

ஏழையின் மகளை மணமுடிக்க யார் வருவார்கள்?

எவ்வளவோ சொல்லியும் கேட்காமல், அவ்வூர் பெருமாள் ஆலயத்திலேயே பணிபுரியச் சேர்ந்து கொண்டாள் செல்வி!

இப்படி எப்படியோ ஒரு விதமாக அவர்களுடைய வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. சிலே செதுக்கிய மனமும், உளி பிடித்த கரமும் சும்மா இருக்குமா? கொல்லைப்புறமிருந்த ஆளுயரக் கற்களைக் கொண்டு, செல்வியின் அழகு வடிவத்தையே செதுக்கலானார் சுந்தரமூர்த்தி. அதில் ஒரு நிம்மதியைக் கண்டது அவர் மனம். நல்ல காலம் வராதா என்று ஏங்கி ஏங்கி அவருடைய உள்ளம் நம்பிக்கையையே இழந்து விட்டிருந்தது.

ஒரு நாள் காலை. ''தினமும் தான் பொழுது விடிகிறது. என் வாழ்வு என்றைக்கு விடியப் போகிறதோ?'' என்று எண்ணிக் கொண்டே வாசலுக்கு வந்த சுந்தரமூர்த்தி ''சிற்பி சுந்தரமூர்த்தி இருக்கும் வீடு இது தானே!'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தார்.

கண்ணாடியணிந்த ஒரு மனிதர் எதிரே நின்றுகொண்டிருந்தார். தூரத்தில் ஒரு கார் நின்றுகொண்டிருந்தது.

''ஆமாம் நான்தான். வாருங்கள் உட்காருங்கள் என்ன வேண்டும்'' என்று வந்தவரை உபசரித்து உட்கார வைத்தார்.

''உங்களைத் தேடித்தான் வந்தேன். என் பெயர் மாணிக்கம். செல்வபுரம் பஞ்சாயத்து தலைவராகப் பணியாற்றி வருகிறேன்''.

''மிக்க மகிழ்ச்சி. என்ன விஷயமாக...............?''

''சொல்கிறேன். எங்களூர்க் குளக்கரையின் அருகில் இருக்கும் திடலில்..............''

அவர் பேச்சை முடிக்கும் முன் ஆவலுடன் இடைமறித்தார் சுந்தரமூர்த்தி.

''ஏதாவது ஆலயத் திருப்பணியா?''

''இல்லை அதைவிடச் சிறந்ததொரு பணி. அந்தத் திடலின் மையத்தில் ஒரு சிலை நிறுவ வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. சிலை மிகவும் இயற்கையாக இருக்க வேண்டும். எங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய திறமை இந்த வட்டாரத்திலேயே உங்களிடம்தானிருக்கிறது என்று கேள்விப்பட்டுத்தான் உங்களிடம் வந்தேன். சிலையை உருவாக்க நீங்கள் எவ்வளவு கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறோம்'' என்று கூறிவிட்டு சுந்தரமூர்த்தியின் முகத்தையே கூர்ந்து கவனித்தார் வந்தவர்.

கிழவரின் நெஞ்சம் நிறைந்தது. தெய்வத்தை வேண்டிக்கொண்டது பலித்து விட்டதா?

''செய்கிறேன். சிலை யாருடையது என்று கூறவில்லையே'' என்று கேட்டார்.

''ஆமாம் மறந்து விட்டேன். டிரைவர்! காரிலிருக்கும் அந்தப் படங்களை எடுத்து வாப்பா!'' என்று கூறினார் மாணிக்கம்.

காரோட்டி, அழகிய சட்டமிடப்பட்ட படங்களை எடுத்து வந்தான்.

''இதோ இவருடைய உருவத்தைத்தான் நீங்கள் செதுக்க வேண்டும்''. என்று கூறி அவைகளைச் சுந்தரமூர்த்தியின் கைகளில் கொடுத்தார், மாணிக்கம். அதை வாங்கிப் பார்த்த சுந்தரமூர்த்தியின் கண்கள் விரிந்தன.

சிரித்த முகத்தோடு, சிவந்த ரோஜா மொட்டைப் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தார், சிந்தனைச் சிற்பி நேரு!

''நேரு மகானின் திருவுருவச் சிலையையா உருவாக்க வேண்டும். என் பாக்கியமே பாக்கியம்! கட்டாயம் செய்கிறேன். என் வாழ்நாளிலேயே இதைப்போல் ஒரு சிலை செதுக்கியதில்லை. என்னும்படி செய்கிறேன்'' என்றார் மகிழ்ச்சிப் பெருக்கில் சுந்தரமூர்த்தி.

''சிலை செதுக்குவதற்கு உதவியாக இருக்கட்டும் என்றுதான்

இப்படங்களை எடுத்து வந்தேன். இந்தாருங்கள்'' என்றார் மாணிக்கம்.

''தேவையில்லை. நேருவின் புனித உருவம் யாருடைய உள்ளத்தில் தான் இல்லை? பொலிவான முகம், எளிமையான உடை, அவருடைய கம்பீரமான நடை நம் கண்களில் குடியிருக்கிறது. அவருடைய வீரம் மிக்கப் பேச்சுக்கள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கையில், உருவம் மட்டுமா மறைந்து விடும்? வேண்டாம் எடுத்துப் போங்கள். சிலையின் உயரம், பீடத்தின் அளவு இவைகளை மட்டும் சொல்லி விட்டால் போதும்'' என்றார் சுந்தரமூர்த்தி.

அவைகளைக் குறித்துக் கொடுத்த மாணிக்கம், ''நேரு மகானின் பிறந்த தினத்தன்று முல்லைக்காடு பெரிய பண்ணையாரைக் கொண்டு இச் சிலையைத் திறக்க வேண்டும் என்று ஊர் மக்கள் விரும்புகிறார்கள். எனவே அதற்குள் நீங்கள் வேலையை முடிக்க வேண்டும்'' என்றார்.

''சரி, செய்து தருகிறேன்'' என்று ஒப்புக் கொண்டார் சுந்தரமூர்த்தி. அச்சாரம் கொடுத்து விட்டு போய்விட்டார் மாணிக்கம். சுந்தரமூர்த்தியின் கரங்கள் குவிந்தன.

''இறைவா! இந்த ஏழையின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து விட்டாய்! உன் அருளே அருள். தெய்வமாய் நின்று எங்களைக் காத்து மறைந்த தலைவரின் திருவுருவத்தைப் படைக்கும் வாய்ப்பினைத் தந்த தெய்வமே உன் பெருமை என்னென்பேன்'' என்று அகமகிழ்ந்தார்.

கல்லோடு உளி மோதும் அந்தக் 'கணீ'ரென்ற ஓசை தனிச் சிறப்போடு அவ் வீட்டில் ஒலிக்க ஆரம்பித்தது. அழகாகவும் இயற்கையாகவும் சிலை அமையவேண்டுமே என்ற எண்ணம், அவரை ஓய்வின்றி வேலைவாங்கியது.

சிலை நிறுவ வேண்டிய நாளும் நெருங்கியது. புறாவைக் கையில் பிடித்துக் கொண்டு நேரு நின்ற தோற்றம் செல்வியின் மனதைக் கவர்ந்தது.

எல்லாம் முடிந்தது. கண்கள் திறக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி. 'நல்ல நேரம் பார்த்து அதையும் செய்துவிட்டால் வேலை முடிந்தது. வாழ்க்கையில் ஒரு புனித காரியம் செய்த திருப்தி கிடைக்கும்' என்று நினைத்தார் சுந்தரமூர்த்தி. ஆனால் இரவெல்லாம் விழித்திருந்து உழைத்த அசதி, அவருக்குக் காய்ச்சலை வரவழைத்தவிட்டது. எழுந்திருக்கவே முடியாமல் படுக்கையில் விழுந்தார். உடல் நெருப்பாகக் கொதித்தது. செல்வபுரம் மக்கள் கலங்கினர். நல்ல காரியம் நடைபெறாமல் போய்விடுமோ எனப் பயந்தனர்.

தம்மைப் பார்க்க வந்த மாணிக்கத்தினிடம் ''நீங்கள் சிலையைக் கொண்டுபோய் பீடத்தில் நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இன்னும் இரண்டு நாட்கள் இருக்கிறதல்லவா. எப்படியும் அங்கு வந்து என் வேலையை முடித்து விடுகிறேன்'' என்றார் சுந்தரமூர்த்தி கம்மிய குரலில்,

வேறு வழி தோன்றாத பஞ்சாயத்துத் தலைவரும், சம்மதித்து

சிலையைப் பத்திரமாகக் கொண்டு சென்றார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. உடம்பு கொஞ்சம் தேறியது போலிருந்தது. உடனே காரை வரச் சொல்லிச் செல்வபுரம் சென்றார். அங்கே அழகிய கட்டிடத்தின் மேல் நேருவின் சிலை கம்பீரமாக நின்று கொண்டிருந்தது! ஏணியை வைத்து மேலேறி இறைவனை வேண்டிக்கொண்டு கண்களைத் திறக்க ஆரம்பித்தார் சுந்தரமூர்த்தி. சுமார் அரைமணி நேரம் கழித்திருக்கும். கீழிறங்கிய அவர் நெற்றியில் அரும்பி நின்ற வேர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டு தூர நின்று சிலையை நோக்கினார். அவர் முகத்தில் திருப்தி தவழ்ந்தது. பரந்த அன்பும், ஆழ்ந்த அறிவும், தெளிந்த ஞானமும் ஒருங்கே பொருந்திய நேருவின் கண்களை அப்படியே செதுக்கி விட்ட பெருமையில் அவருடைய உள்ளம் பூரித்தது. உடல் நலக் குறைவைக் கூடக் கொஞ்ச நேரம் மறந்தார்.

மறுநாள் நவம்பர் பதினான்காம் நாள். நேருவின் எழுபத்தி ஐந்தாவது பிறந்த நாளை, செல்வபுரம் சிறப்பாகக் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. பாரத நாடே கண்ணீரோடு கூடிய கோலாகலத்தில் மூழ்கியிருந்தபோது செல்வபுரம் மக்கள் மட்டும் விலக்கா என்ன? மறைந்துவிட்ட மனித குலத் தோன்றலின் வாழ்வையும், அவரைச் சிற்பி சுந்தரமூர்த்தி சிலையாக வடித்தது பற்றியும் ஊரெங்கும் ஒரே பேச்சாக இருந்தது!

பெரிய பண்ணையாரின் கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு அழகிய வாலிபன் இறங்கினான். பண்ணையார் வரவில்லை. அவருக்கு உடல் நலமில்லாததால் வரவில்லையெனவும், அவருக்குப் பதில் அவருடைய புதல்வரும், புதிதாக அப்பகுதியின் கலெக்டர் பதவி ஏற்றிருப்பவருமான மணிமாறன், நேருவின் சிலையைச் திறந்து வைப்பாரெனவும் அறிவித்தார் பஞ்சாயத்துத் தலைவர் மாணிக்கம்.

''வயதிற் சிறியவனான நான் நமது நாட்டின் ஒப்பற்ற தலைவரின் சிலையைத் திறந்து வைப்பதை விட அதை உருவாக்கிய பெரியவர் சிற்பி சுந்தரமூர்த்தி அவர்கள் திறப்பதே மிகவும் பொருத்தமானதாகும்'' என்று மணிமாறன் கூறியபொழுது கூடியிருந்த மக்கள் அதை ஆமோதிப்பது போல் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்திக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது! தனக்கு இவ்வளவு பெரிய பாக்கியமா? மேடையேறி நடுங்கும் கரங்களோடு பட்டு நூலைப் பிடித்து மெல்ல இழுத்தார். திரை மெதுவாக விலகியது.

''ஆகா என்ன அற்புதமான காட்சி?

''பண்டிதர் நேரு மறைந்து விட்டதாகச் சொல்லுகிறார்களே! இதோ இங்குதானே இருக்கிறார்''

''கையில் புறாவுடன் சமாதான தேவதையின் சாத்வீகப் புதல்வராக நிற்கும் இந்த அழகை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே!''

''அந்த விழிகளில் தான் என்ன உயிர். சிலையென்றால் இதுவல்லவா சிலை!''

இப்படிக் கூட்டத்திலிருந்து எழுந்த குரல்கள் சுந்தரமூர்த்தியின் செவியில் தேனாறுபோல் பாய்ந்தது. கண்களில் நீர் மல்க எல்லோரும் சிலையை வணங்கி நின்றனர். 'நேரு புகழ் வாழ்க' என்ற கோஷங்கள் எழுந்தன.

''நேருவின் வழிநின்று நாம் நேர்மையாக நடக்கவேண்டும். என்பதை நமக்கு அடிக்கடி நினைவூட்டும் வகையில், அவருடைய பிறந்த நாளன்று, மறைந்துவிட்ட அவரை மீண்டும் உருவெடுக்கச் செய்த சிற்பி சுந்தரமூர்த்தி அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் அடங்கிய இந்தப்



பணமுடிப்பைப் பரிசாக அளிக்கிறேன்!'' என்று கூறி அவர் கைகளில் வைத்து வணங்கினன் மணிமாறன். உணர்ச்சிப் பெருக்கில் தடுமாறிய சுந்தரமூர்த்தி கீழே விழப்போனர். அவரை அப்படியே தாங்கிப் பிடித்துக் கொண்டான் மணிமாறன்; ஆதரவாக அருகிலிருந்த ஆசனத்தில் அமர வைத்தான்.

கூட்டம் முடிந்தபின் தன் காரிலேயே ஏற்றிக்கொண்டு அவருடைய ஊரான மகுடஞ்சாவடிக்கு வந்தான். வரும் வழியில் அவன் பேசிய பேச்சு அவனுடைய கலையுணர்வைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியது.

''உங்களைப் பற்றி இதுவரை எனக்குத் தெரியாமல் போய் விட்டது. சிற்பங்கள் என்றால் எனக்குச் சிறு வயது முதலே மிகவும் பிடிக்கும். தனியாக சிற்பங்களுக்கென்றே எங்கள் வீட்டில் ஒரு மாடியை ஒதுக்கியிருக்கிறேன். உங்களிடம் நிறைய இருக்கிறதென்று கேள்விப்பட்டேன், ஐயா!'' என்றான்.

இதற்குள் வீடு வந்து விடவே கார் நின்றது. அவரைத் தாங்கலாகப் பிடித்து இறக்கி உள்ளே கொண்டு சென்று உட்கார வைத்தான். ''கொல்லைப் புறத்தில் சிலைகளிருக்கின்றன. போய் பாரப்பா'' என்றார் சுந்தரமூர்த்தி. தோட்டத்துப் பக்கம் வந்த மணிமாறன், அங்கிருந்த சிலை வடிவங்களைக் கண்டு திகைத்து நின்றான். செல்வியின் அழகிய உருவத்தைப் பல்வேறு கோணங்களில் செதுக்கியிருந்தார் சுந்தரமூர்த்தி. அவைகளில் மனதை லயிக்கவிட்ட மணிமாறனுக்கு இவ்வுலக நினைவே இருக்கவில்லை!

அத்தனை அற்புத அழகு வாய்ந்த கற்சிலைகளை அவன் பார்ப்பது அது தான் முதல் தடவை. கோயிலிலிருந்து தோட்டத்து வழியாக வீட்டிற்குள்



நுழைந்த செல்வி, யாரோ ஆடவன் நிற்பது கண்டு, அங்கேயே திகைத்து நின்ருள். ஒவ்வொரு சிலையையும் வரிசையாகப் பார்த்துக் கொண்டுவந்த மணிமாறன் சிற்பி செதுக்காத பொற்சிலை ஒன்று நின்று கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்து நின்ருன். அவளுடைய இளமை கொஞ்சும் தெய்வீக எழில் அவன் மனதை ஒட்டு மொத்தமாகப் பறித்துக் கொண்டது.

சுந்தரமூர்த்தியிடம் அவளைப் பற்றிக் கேட்டபோது ''உலகில் எனக்கிருக்கும் செல்வமெல்லாம் அவள் ஒருத்திதான். அவளை ஒருவனிடம் பிடித்துக் கொடுத்து விட்டால் என்கடமை முடிந்து விடும்'' என்ருர் அவர்.

''உங்களிடம் ஒன்று கேட்கிறேன். தவருக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்ருன் மணிமாறன்.

''தயக்கமின்றி கேளப்பா! சிலைகளை எல்லாம் வேண்டும் என்று கேட்கப் போகிருய் அவ்வளவு தானே!'' என்ருர் அவர்.

''ஆம் பெரியவரே! அதோடு நீங்கள் சம்மதித்தால் உங்கள் மகளையும் நானே மணந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தலையைக் கவிழ்ந்து கொண்டான் மணிமாறன்.

சுந்தரமூர்த்தியால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. மாவட்டக் கலெக்டரான மணிமாறனெங்கே, ஏழைச் சிற்பியின் செல்வி எங்கே? வாழ்க்கை விடியாதா, விடியாதா என்று ஏங்கிக் கிடந்தவருக்கு இப்படியொரு இன்ப இடியா? சட்டென்று அவருடைய முகக் குறி மாறியது. ''ஏனப்பா உன் தந்தை இதற்கு சம்மதிப்பாரா?'' என்று கலக்கத்துடன் வினவிஞர். ''என் விருப்பத்திற்கு மாருக அவர் எதுவுமே சொல்லமாட்டாரய்யா! அதுவும் திருமணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்த நான் இப்போது ஒருத்தியை மனமார விரும்பி மணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லும்போது தடையே சொல்ல மாட்டார். அதில் சந்தேகமே இல்லை'' என்ருன் உறுதியாக. ''செல்வி உனக்கு விருப்பம்தானே அம்மா'' என்று பெரியவர் கேட்டபோது ''போங்களப்பா'' என்று வெட்கம் விழுங்க உள்ளே ஓடிஞள் செல்வி. ''எல்லாம் அந்த நேரு மகானின் திருவுருவச் சிலை தொட்ட வேளை! ஐயா உன் பெயர் வாழி, உன் புகழ் வாழி'' என்று சுந்தரமூர்த்தியின் உதடுகள் முணுமுணுத்தன! ●

பலாத்காரம் அழியவில்லை

பலாத்கார யுகம் முடிந்துவிட்டதென்ரே, விரைவில் முடிந்து விடுமென்ரே யாரும் கூறமுடியாதென்று நினைக்கிறேன். என்றுமில்லாத வேகத்துடன், அளவற்ற அழிவுச் சக்தியுடன் அது இன்று தலைவிரித்தாடுகிறது. ஒன்று அது அழியவேண்டும் அல்லது உலகத்தின் பெரும்பகுதியை அது அழித்துவிடும்.

—நேரு.

நேரு ஒரு விஞ்ஞானி

திரு. ஆர். இராமசாமி, எம்.எஸ்ஸி.

உலகின் தலைசிறந்த அறிவியல் அறிஞர்களில் நேருவும் ஒருவர். அவர், வெளிநாட்டில் கல்வி பயின்று வந்தபொழுது அறிவியல் பாடத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவர், தம் வாழ்க்கையில் முதன் முதலில் பெற்ற பட்டம் அறிவியல் பட்டமேயாகும். ஒருவர் ஒரு துறையில் சிறந்த வல்லுநராக இருக்கும் பொழுது அவர் பிற துறைகளிலும் சமமாகச் சிறந்து விளங்குவார் என்பதில் ஐயமில்லை. அறிவியல் பாடத்தில் சிறந்து விளங்கிய நேரு அப்போது இருந்த இந்திய அரசியலையும் சிறப்பாகப் புரிந்து கொண்டிருந்தார். அவர், பிறந்த பொன்னாட்டைப் பெற்ற தாயினும் மேலாகப் போற்றி மதித்தார். அப்பொன்னாடு மாற்றான் கையில் சிக்கி நாளுக்கு நாள் சீரழிந்து போவதை எண்ணி மனம் வெதும்பினார். அன்னையின் அடிமை விலங்கை அகற்றக் காந்தியடிகள் குரல் எழுப்பிய போது அக்குரல் நேருவின் காதுகளில் தேன்போல் பாய்ந்தது. அதனால் அவர் கவனம் அரசியலில் திரும்பியது. அந்தச் சூழ்நிலை அவரை அறிவியல் துறைக்கு விடாமல் அரசியலுக்கு இழுத்து விட்டது. ஆனாலும், வாழ்க்கை முழுதும் அவர் உள்ளத்தின் ஒரு மூலையில் அறிவியல் ஏக்கம் ஒலித்துக் கொண்டேதான் இருந்தது. அவர், தாம் கலந்து கொண்ட பல அறிவியல் கழகக் கூட்டங்களில், 'நான் இம் மாபெரும் நாட்டின் பிரதம மந்திரியாக இருப்பதைக் காட்டிலும், ஒரு அறிவியல் கூடத்தில் அமைதியாக அமர்ந்து ஆராய்ச்சியில் மூழ்கியிருப்பதையே பெரிதும் விரும்புகிறேன். அத்தகைய பணியே எனக்கு மிகுந்த இன்பமும் நிறைவும் ஊட்டும்' என்று கூறியிருக்கிறார். அரசியலில் முழுமையாக ஐக்கியமான பின்பும் அவர் அறிவியலைப் புறக்கணித்து விடவில்லை; அறிவியல் துறையில் ஏற்படும் அன்றாட முன்னேற்றங்களையும் அம் முன்னேற்றங்கள் மக்களுக்கு எவ்வாறு பயனளிக்கக் கூடியன என்பதையும் ஆழ்ந்து சிந்தித்து வந்துள்ளார். அவை மனித இனத்திற்கு நன்மை பயப்பனவாகத் தோன்றியபோது அவற்றை வரவேற்று வளர்ச்சிக்கு ஆக்கமளித்தார். அவை மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியன என்று அறிந்த போது அவற்றைத் தீவிரமாக எதிர்த்து நின்றார். அறிவியல்

ஆய்வுகளின் நோக்கம் மக்களுடைய வாழ்க்கை நலன்களை அதிகரிப்பதே. அறிவியல் துறையில் கண்டுபிடித்த புதுமைகளையெல்லாம் செயற்படுத்தி அவற்றை மக்களுடைய வாழ்க்கை நலன்களுக்குப் பயன்படுத்துவது அதிகாரம் படைத்த அரசியல் மேதைகளின் கடமையாகும். அறிவியலிலும், தொழில் நுட்பவியலிலும் புதியன காண்பதோடு விஞ்ஞானிகள் நின்று விடுகின்றனர். அவர்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து நேரு தொடர்ந்து செயலாற்றினர். அறிவியலும் தொழில் நுட்பவியலும் மக்களுக்கு எவ்வெவ் வழியில் பயன்தர முடியுமோ அவ்வழிகளையெல்லாம் சிந்தித்துச் செயல்படுத்தினர். அதனல் நேருவைத் தலை சிறந்த விஞ்ஞானிகளின் வரிசையில் வைத்து எண்ணுவது மிகவும் பொருத்தமாகும்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெர்டிணண்ட் ப்ரூக்ஸ் என்பவர் நேருவின் இளமைப் பருவத்தில் அவருக்குக் கல்வி கற்பித்தார். வீட்டில் தனியாக ஒரு விஞ்ஞான ஆய்வுக் கூடம் அமைத்து அதில் நேரு அறிவியல் பாடம் கற்ருர். ஏனைய பாடங்களை விட அறிவியல் பாடம் அவருக்கு மிகுந்த உற்சாகமூட்டியது. இவ்வாறு, தம் இளம் வயதிலேயே அறிவியல் புதுமைகளை அகன்ற கண்கொண்டு பார்க்கத் தொடங்கிய நேரு தம் கடைசி நாள் வரை அத்துறையில் குன்ருத ஊக்கம் காட்டிவந்தார்.

தம் 15-வது வயதில் நேரு இங்கிலாந்துக்குச் சென்று அங்கு ஏழு ஆண்டுகள் (1905 முதல் 1912 வரை) கல்வி பயின்ருர். அவர் அங்குத் தங்கியிருந்த காலத்தில் தான் இங்கிலாந்து இயந்திரப் புரட்சியில் மூழ்கியிருந்தது. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிவியல் அங்கு வளர்ச்சியுற்று வந்தது. தொழில் நுட்பத் துறையில் நாள்தோறும் புதுமைகள் தோன்றிவந்தன. கூர்த்த மதி படைத்திருந்த நேருவின் உள்ளத்தை இப்புதுமைகளெல்லாம் கொள்ளை கொண்டன. அக்காலத்தில் ஏற்பட்ட அறிவியல் புரட்சியைப் பிற்காலத்தில் அவர் எழுதிய 'உலக வரலாறு' (Glimpses of World History) என்னும் நூலில் அழகாகச் சொல்லியுள்ளார்.

பள்ளிப்படிப்பை ஹாரோவில் முடித்துக்கொண்டு நேரு கேம்பிரிட்ஜிலுள்ள ட்ரினிட்டி கல்லூரியில் தம் அறிவியல் படிப்பைத் தொடங்கினர். புகழ் பெற்ற கேவெண்டிஸ் அறிவியல் ஆய்வுக் கூடத்தில் அவர் நுழைந்தபொழுது அவருடைய உள்ளம் துள்ளிக் குதித்தது. இவ்வாய்வுக் கூடம் உண்மையிலேயே வரலாற்றுப் புகழ் பெற்றது. இருபதாம் நூற்ருண்டு அறிவியல் புதுமைகளுக்குக் காரணமான ஜே. ஜே. தாம்சன், இரதர் போர்ட், ஜேம்ஸ் ஜீன், சாட்விக், ஆர்தர் எட்டிங்டன் ஆகிய அறிவியல் மேதைகளை உலகுக்கு அளித்த பெருமை இவ்வாய்வுக் கூடத்தையே சாரும். இந்த மேதைகளின் சாதனைகள் நேருவை மிகவும் கவர்ந்தன. தமது, 'உலக வரலாறு' என்னும்

நூலில், அவர்களுடைய சாதனை களைப் பற்றி நேரு சிறப்பாக எழுதியுள்ளார்.

"ஜேம்ஸ் ஜீன்ஸ் இந்தப் பரந்த அண்டத்தை விரியும் அண்டம் (Expanding universe) என்று வர்ணித்தார். தொடர்ந்து விரிந்து செல்லும் ஒரு சோப்புக் குமிழுக்கு அவர் இதை ஒப்பிட்டார். இந்த அண்டம் மிகப் பெரிது என்றும் இதன் குறுக்கே ஒளிசெல்வதற்கு பலகோடி ஆண்டுகள் ஆகின்றன என்றும் கண்டு கூறினார்".

"இரதர்போர்ட் ஆல்பா, பீட்டா, காமா கதிர்களைக் கண்டு பிடித்தார். ஒரு அணு ஆல்பா, பீட்டாக் கதிர்களை வெளியிடுவதன் மூலம் ஒரு புது அணுவாக மாற்றமடைகிறது என்று அவர் கண்டுபிடித்தார். அவர், ஆல்பாத் துகள்களைக் கொண்டு நைட்ரஜன் அணுவைத் தாக்கி அதை உயிரிய அணுவாக மாற்ற முடியும் என்றும் காட்டினார்".

ஒரு விஞ்ஞானியால் கூட எடுத்துச் சொல்லவியலாத நவீன அறிவியல் கருத்துக்களைத் தெளிவாகக் கூறும் ஆற்றல் நேருவுக்கு உண்டு. இவ்வாற்றல் அவருடைய அறிவியல் அறிவின் காரணமாகவும், அவ்வப்போது அறிவியல் துறையில் ஏற்படும் புதுமைகளைக் கூர்ந்து கவனித்தறிந்து வந்ததன் காரணமாகவும் ஏற்பட்டதாகும்.

கேவெண்டிஸ் ஆய்வுக் கூடத்தில் கழித்த நாட்களை நேரு தம் வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை. அவருக்கு அறிவியலில் இருந்த பற்றின் காரணமாக அந்நாட்களை அவரால் மறக்க முடியவில்லை. அவ்வப்போது கடந்து போன அந்நாட்களை எண்ணி அவர் ஏங்கியதுண்டு.

1910-ல் அறிவியல் பட்டம் பெற்றபின் நேரு சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். அப்பொழுது தான் அவருக்கும் அறிவியலுக்கும் இடையே இடைவெளி ஏற்படத் தொடங்கியது. சட்டக் கல்வி முடிந்த பின்பு 1912-ல் இந்தியா திரும்பியதிலிருந்து காந்தியடிகளின் சீடராகித் தாய் நாட்டிற்காக உழைத்தார். அடிமைப் பிணியில் சிக்கிக் கிடந்த இந்திய மக்களின் துன்பக் கண்ணீரைத் துடைக்கவேண்டும் என்னும் அவா அவருக்கு ஏற்பட்டது. தம் நேரம் முழுவதையும் நாட்டுப் பணியிலும் சமூகப் பணியிலும் அவர் செலவிடலானார். இவ்வாறு அவர் அறிவியல் மாணவராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கி, இறுதியில் சமூக விஞ்ஞானியாகவும் (Social scientist) சிறந்த சிந்தனையாளராகவும் மாறினார்.

1927-ல் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அங்கு ஏற்பட்டிருந்த அறிவியல் மற்றும் பொறியியல் முன்னேற்றங்கள் அவரைக் கவர்ந்தன. இரஷ்யாவில் அப்பொழுதுதான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப் பட்டுவந்தது. அவர்கள் தீட்டிய திட்டங்களெல்லாம் அறிவியல் முறையில் (Scientific method) அமைந்திருந்தன. இம் முறை நேருவை மிகவும் கவர்ந்தது. அன்றிலிருந்து, இதே முறையை இந்தியாவிலும் கடைப்பிடித்து நாட்டைப் பல துறைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்ய

வேண்டும் என்ற ஒரு திண்மையான உறுதியை அவர் எடுத்துக் கொண்டார். ''அறிவியல், மனிதனுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம்; அதனுடைய ஆற்றல் அளவற்றது. மனித இனத்தின் மீது அன்பும் அதன் முன்னேற்றத்தில் ஈடுபாடும் உள்ள மனிதர்களிடத்தில்தான் அது வளர வேண்டும்; குறுகிய நோக்கமுள்ள தனிப்பட்ட அரசியல்வாதிகளின் கையில் அது சிக்கக்கூடாது; அப்படிக் கிடைப்பது உலகின் வரலாற்றிற்கே முற்றுப் புள்ளி வைத்துவிடக்கூடும்'' என்பது நேருவின் கருத்தாகும்.

1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு நேரு பிரதம மந்திரி ஆனார். அவருடைய எண்ணங்களையெல்லாம் செயல்படுத்த அவருக்குச் சமயம் கிடைத்தது. அவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து அவருடைய கடைசி நாள் வரை ஆற்றிய பணிகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அவர் அரசியல் அலுவல்களில் எவ்வளவு கவனம் செலுத்தினாரோ அதே அளவு கவனம் அறிவியல் துறையிலும் செலுத்தினார் என்பது தெளிவாகும். 1948-ம் ஆண்டு மார்ச் 14-ம் நாள் விசாகப் பட்டணத்தில் ஜால் உஷா (Jal usha) என்னும் கப்பலை வெள்ளோட்டம் விட்டார்; ஏப்ரல் 12-ல் ஹிராகுட் அணைக்கு அடிக்கல் நாட்டினார்; ஒரு வாரத்திற்குப் பின்னர் இந்திய தேசிய அறிவியல் கழகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இவ்வாறு பல ஆண்டுகள் தொடர்ந்து அறிவியல் துறையிலும் தொழில் நுட்பத் துறையிலும் பல ஆக்க வேலைகளுக்கு அடிகோலினார். வெளிநாட்டுத் தொழிற்கலையைக் கண்மூடித்தனமாக அப்படியே பின்பற்றக்கூடாது. இந்திய விஞ்ஞானிகள் உற்பத்தித் துறைகளில் சொந்தத் தொழில் நுட்பத் திறனைப் பயன்படுத்திப் புதுப் புதுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் வெளிநாடுகளை எதிர்பார்த்து நம் சொந்த அறிவுக்கும், அறிவியலுக்கும், தொழில் நுட்பக் கலைக்கும் முட்டுக்கட்டை போட்டுவிடக்கூடாது. இது அவருடைய கருத்தாகும்.

அறிவியல் வளர்ச்சிக்கும் இயற்கை வள ஆய்வுக்கும் உதவும் வகையில் ஒரு இலாகா புதிதாக மந்திரிசபையில் இடம் பெற்றது. அறிவியல் மற்றும் தொழில் துறை ஆய்வுக் கழகம் (C S I R) ஒன்று அமைக்கப்பட்டு அதை மையமாகக் கொண்ட முப்பது அறிவியல் ஆய்வுக் கூடங்கள் நாட்டில் உருவாக்கப்பட்டன, பாதுகாப்பு அறிவியல் கழகம், அணுச்சக்தித் துறை, தொழில் நுட்பக் கழகங்கள் முதலியன நாட்டில் வேகமாக உருவாயின. இவைகளின் நோக்கமெல்லாம் முதலில் நாட்டில் அறிவியல் சூழ்நிலை (Scientific temper) யை ஏற்படுத்துவதாகவே இருக்க வேண்டும்; அறிவியல் ஆய்வுகள், அறிவியல் துறைப் பயிற்சிகள் முதலியன இவற்றின் இரண்டாவது குறிக்கோளாக அமைய வேண்டும் என்று நேரு வலியுறுத்தி வந்துள்ளார். இந்திய நாட்டை அறிவியல் மயம் ஆக்குவதில் நேரு எவ்வளவு தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

"1945-லிருந்து 1964-வரை உலகில் மிகப்பெரிய இரு அறிவியல் சாதனைகள் ஏற்பட்டுள்ளன. ஒன்று, ஆக்கவேலைக்கும் அழிவு வேலைக்கும் பயன்படக்கூடிய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட அணுச்சக்தி; மற்றொன்று, வானவெளிப்பயணம். இவ்விரண்டு அறிவியல் சாதனைகளையும் பரந்த நோக்கத்தோடு ஆக்கவேலைகளுக்கு மட்டும் மனிதன் பயன்படுத்தினால் அவன் உலகில் மனித இனத்தின் வாழ்க்கைத் தரத்தை எவ்வளவோ உயர்த்திவிடமுடியும். இத்துறையில் அவனுடைய உள்ளம் பண்படவேண்டும். சந்திரனில் மனிதன் இறங்குவதற்கு முன்னால் அவன் வாழும் பூமியைப் பற்றியிருக்கும் பீதியை ஒழிக்க முயலவேண்டும்'' என்று மனித இனத்தின் நன்மையைக் கருதி நேரு தம் கருத்துக்களை வலியுறுத்தி வந்துள்ளார்.

சுதந்திரத்திற்கு முன்னால் இந்திய விஞ்ஞானம் இருட்டறையில் எறியப்பட்ட விதையாகப் பயனற்று மட்கிக்கிடந்தது. இவ்விதையை நேரு காற்றும், ஒளியும் நிறைந்த வளமான நிலத்தில் விதைத்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். 1955-ல், அவர் ரேடியோ தொலைபேசிக் கழகத்தைத் துவக்கி வைத்தார்; 1956-ல் டாக்டர்களின் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்; 1957-ல் அணு உலையை இயக்கி வைத்தார்; 1958-ல் அணுச்சக்தித் துறையை உருவாக்கினார். 1959-ல் ஜபல்பூரில் மோட்டார் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். 1960-ல் பிரமபுத்திரா நதிப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்; 1961-ல் முதல் இந்திய மின்சார இரயிலை முடுக்கி வைத்தார்; 1962-ல் கங்கையில் கட்டப்பட்ட மிகப்பெரிய கான்கிரீட் பாலத்தைத் திறந்துவைத்தார். 1963-ல் பக்ரா அணையை நாட்டுக்கு உரிமையாக்கினார்; இவைபோன்று இன்னும் எத்தனையோ துறைகளில் நாட்டின் வளத்தைப் பெருக்கினார். இவைகளையெல்லாம் செய்து முடித்த பொழுது இந்திய நாட்டைத் தொழில் மயமாக்கும் முயற்சியில் முதல் படி முடிந்ததாக எண்ணிக் களிப்புற்றார். சீர் குலைந்திருந்த தன் உடல் நலனையும் பாராது நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஓயாது உழைத்தார். தம் உயிர் பிரிவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கூட "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடும் அறிவியலும்'' என்னும் ஒரு பட்டி மண்டபத்தைத் துவக்கி வைக்க ஒப்புதல் அளித்திருந்தார்!

மாமேதை மறைந்துவிட்டார்! அவர் காட்டிய வழியில் நாம் தொடர்ந்து சென்று, நம் நாட்டைப் பல துறைகளிலும் முன்னேற்றுவதன் மூலம் அவர் ஆத்மாவுக்குச் சாந்தியளிப்போமாக!

நாடு நிரந்தரமாய் வாழும்

நாடு என்றும் இறப்பதில்லை. ஆண்களும் பெண்களும் வருவார்கள், போவார்கள். ஆனால் நாடு என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கும். நிலையான பரம்பொருளின் தத்துவம் அதிலே கிடக்கிறது.

—நேரு.

நேருவும் குழந்தைகளும்

"குழந்தைகள் என்னிடம் வருவதற்கு வழிவிடுங்கள்; அவர்களே இறைவன் குடியிருக்கும் ஆலயங்கள்" என்றார் ஏசுநாதர். அன்புக் குழந்தைகளை ஆண்டவனுடைய குடியிருப்பாகக் கண்டு போற்றினர் நம் பண்டைய சான்றோர். பகவான் புத்தரும், அண்ணல் காந்தி அடிகளும், அமரர் நேருவும் குழந்தை உள்ளத்தின் அன்பிலே திளைத்தவர்கள்.

இன்றைய குழ்ந்தைகள்தாம் நாளைய நவ பாரதத்தை உருவாக்கும் சிற்பிகள் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டவர் இந்திய நாட்டின் ஒப்பற்ற தலைவர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும், அதற்குப் பிறகு விடுதலை பெற்ற நாட்டின் நல் வாழ்விற்கான திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதிலும் அவர் அயராது உழைத்தார். உலக சமாதானத்திற்காகவும், சகோதர சகவாழ்வு, கூட்டுச் சேராக் கொள்கை முதலிய தமது ஒப்பற்ற குறிக்கோள்களின் வாயிலாக உலக அரங்கில் ஓர் உன்னத இடத்தை அவர் தமக்கென உண்டாக்கிக் கொண்டார்.

உலக அரசியல் தலைவர்களும், உலக மக்களும் நேருஜியிடத்தில் அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். "உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக் காட்டாக நின்று உலக மக்கள் உள்ளத்தில் நிலைத்து நின்ற அப் பெருமகனின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் பெருமை பால் மணம் மாறாப் பச்சிளம் குழந்தைகளையே சாரும். வஞ்சனை இல்லாப் பிஞ்சு முகங்களைக் கண்டால், ரோஜாவைக் கண்டால் எப்படி அவர் முகம் மலருமோ அப்படி அவருடைய அகம் மலரும். குழந்தைகளைக் காணும் போது அவரே ஒரு குழந்தையாக மாறிவிடுவார். பொதுக் கூட்டமானாலும் சரி, பாதை ஓரமானாலும் சரி, புன்னகை தவழ நிற்கும் குழந்தைகளைக் கண்டு விட்டால் அவர், கழுத்திலிருக்கும் மாலை அவர்கள் கழுத்திற்கும், அவர் கையிலிருக்கும் பூச் செண்டு அவர்கள் கைக்கும் மாறும்.

சென்னை அடையாறிலுள்ள
புற்றுநோய் மருத்துவ நிலையத்தில் நேரு

திரு. நேரு குழந்தைகளின்மீது அன்புமாரி பொழிகிறார்

திரு. நேரு, சென்னைத் தொழிலமைச்சர் திரு. வெங்கட்ராமனுடன்
மதுரையிலுள்ள தொழில்பேட்டையைப் பார்வையிடுகிறார்



பிம்பிரியிலுள்ள பெனிசிலின் தொழிற்சாலையிலுள்ள
பெருக்காடி ஒன்றின் மூலம் திரு. நேரு பார்க்கிறார்.

திரு. நேரு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்வையிடுகிறார்

தம்மகள் இந்திரா காந்தி, பேரன்கள் ராஜிவ், சஞ்சிவ் ஆகியோருடன் திரு. நேரு இந்தோனேசியாவிற்குக் கப்பலில் செல்கிறார்.



திரு. நேரு அவர்கள், திரு. திம்மையா, திரு. முகர்ஜி, திரு. வர்மா ஆகிய படைத் தலைவர்களுடன் உரையாடுகிறார்.

உலகப் பேரொளியின் இறுதிப் பயணம்



கலைக்கதிர் வெளியீடுகள்

தமிழன்பர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு!

கலைக்கதிர் 16 ஆண்டுகள் நிறைவெய்துவதை முன்னிட்டுத் தமிழன்பர்களுக்குக் கலைக்கதிர் வெளியீடுகளைக் குறைந்த விலைக்குத் தர விரும்புகிறோம். அக்டோபர் முதல் தேதி முதல் டிசம்பர் 31-ஆம் தேதி வரை எங்களிடம் நேரிடையாக நூல்களை வாங்குபவர்களுக்கு 15% கழிவு தரப்படும். இதோடு நூல்களை அனுப்புவதற்குரிய அஞ்சல் செலவு முதலியவைகளை நாங்களே ஏற்றுக்கொள்ளுகிறோம்.

இச்சிறந்த வாய்ப்பினைத் தமிழன்பர்கள் அனைவரும் நழுவவிடாமல் கலைக்கதிர் வெளியிட்டுள்ள மிகச்சிறந்த இலக்கிய நூல்களையும், விஞ்ஞான நூல்களையும் தவறாமல் வாங்கிப் பயன் பெறுவதோடு எம் தமிழ்ப்பணிக்கும் இவ்வகையில் ஊக்கம் அளிக்கும்படி வேண்டுகிறோம்.

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டையில் வேண்டும் நூலின் எதிரே √ இந்தக் குறியிட்டு அந்நூலின் விலையில் 15% கழிவு நீக்கி மீதிப் பணத்தை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். தொகை கிராஸ் செக், போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பப்பெறுமானால் உரிய கழிவுத் தொகையை (Commission) சேர்த்து அனுப்புதல் வேண்டும். மணியார்டர் மூலம் அனுப்புவதாயின் கழிவுத் தொகையைக் கழிக்காமல் அனுப்புதல் வேண்டும்.

1. கானல்வரி - ஆசிரியர்: திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

விலை ரூ. 6-25

இந்நூல் கானல்வரியை மையமாகக் கொண்டு சிலப்பதிகாரத்தை மிகத் தெளிவாக ஆராய்கிறது. சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தின் மிக நுண்ணிய நுட்பங்களையெல்லாம் நம் பல்கலைச் செல்வர் தெரிவிக்கும் திறன் வியந்து போற்றுதற்குரியது.

2. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு

ஆசிரியர்: திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

விலை ரூ. 3-00

சமணப்புலவர்கள் ஆக்கிய இலக்கண இலக்கியங்களை முறைப்பட மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகிறது.

3. குலசேகரர்

ஆசிரியர்: திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

விலை ரூ. 3-00

குலசேகரர் பாடிய பத்துத் திருமொழிகளில் முதல் ஐந்தின்கண் அடங்கியுள்ள தெய்வீகத் தத்துவங்களையும் நுட்பங்களையும், நயங்களையும் மிகச் சுவைபட இந்நூல் விளக்குகிறது.

4. கோகொரோ – ஆசிரியர்: திரு. நாத்சுமே ஸோஸாகி. விலை ரூ. 1-00

உள்ளத்து உணர்ச்சிகட்கிடையே ஏற்படும் போராட்டங்களை இப்புதினம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. ஜப்பானிய நாவலின் மொழிபெயர்ப்பு.

5. ஆற்றலோ ஆற்றல் — ஆசிரியர். பால் பளாகவுட.

தமிழாக்கம்: திரு. தி. அ. கறுப்பண்ணன், எம். ஏ., எம். எஸ்சி., டி. எஸ். எஸ.

விலை ரூ. 3-50

சூரியன், பொருள்கள், உடல், மின் அணுக்கரு முதலியவற்றின் ஆற்றல்கள் எப்படி ஒருவகையிலிருந்து மற்றொரு வகையாக மாறுகின்றன என்றும், எங்ஙனம் ஒவ்வொரு ஆற்றலும் தள்ளுவதற்கும் இழுப்பதற்கும் பயன்படுகிறது என்றும் மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகிறது.

6. மண்ணிலும் விண்ணிலும் – ஆசிரியர்: மார்கரெட் ஓ. ஹைடு.

தமிழாக்கம்: ம. ரா. போ. குருசாமி, எம். ஏ.

விலை ரூ. 2-50

மண்ணிலும் விண்ணிலும் உள்ள இயற்கைப்புதிர்களை விடுவிக்கும் முயற்சிகளை இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

7. நாமும் விஞ்ஞானிகளாவோம் – பதிப்பாசிரியர்: ஜி. ஆர். தாமோதரன்,

தமிழாக்கம்: திரு. ஏ. வி. குப்புரத்தினம், பி. எஸ்சி. விலை. ரூ. 11-25

காலநிலை அறிதல், அணுதரிசனம், வானவெளிச் செய்திகள், கடலினுள் காணும் விந்தைகள், மின்னணு முதலியவைகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

8. எலெக்ட்ரான் – ஆசிரியர்: திரு. ஜி. ஆர். தாமோதரன். விலை ரூ. 4-25

எலெக்ட்ரான்களின் தத்துவத்தையும், அவை பல துறைகளிலும் தொழிலாற்றும் திறனையும் இனிய எளிய முறையில் தக்க படங்களுடன் இந்நூல் விளக்குகிறது.

9. அடிசிற்கினியாள் – ஆசிரியர்: டாக்டர். தா. ஏ. ஞானமூர்த்தி, எம். ஏ., பி. எச். டி.

விலை ரூ. 2-25

பழந்தமிழ் இலக்கியங்களின் நுட்பத்தைத் தெளிவுறுத்தும் கட்டுரைகள் இதன் கண் உள்ளன. தமிழ் இலக்கியச் சுவையை நுகர்தற்கு உறுதுணையாகும் இந்நூல்.

10. வான்வெளி – ஆசிரியர்: டாக்டர் ஹோமர் நெவில் (ஜூனியர்)

தமிழாக்கம் கேப்டன். தி. அ. கறுப்பண்ணன், எம். ஏ., எம். எஸ்சி., டி. எஸ். எஸ்.

விலை ரூ. 2-00

நம் பூமியைப் பற்றியும் வானவெளியில் அதன் இடம் பற்றியும் அறிவிக்கிறது. பூமியைச் சூழ்ந்துள்ள காற்று மண்டலம், சந்திரன் முதலிய துணைக் கோளகள் பற்றியும், இன்னும் மற்ற கோள், வால் மீன்கள், விண்கற்கள். அஸ்டிராய்ட்ஸ் என்ற குட்டிக் கோள்கள் பற்றியும இந்நூலால் அறியலாம். மேலும் வானவெளிப் பயணம் பற்றியும் விண்ணை ஊடுருவிப் பாயும் ராக்கெட்டுகள் பற்றியும் செயற்கைக் கோள்கள் பற்றியும் இன்றைய சாதனைகளைத் தெளிவாக உணரலாம். இது பள்ளிச் சிறுவர்க்கென எளிமையாக எழுதப்பட்டது.

11. பிராங்கு லாய்டு ரைட் – ஆசிரியர்: ஐலெசா ஃபோர்சி,

தமிழாக்கம்: கேப்டன். திரு. தி. அ. கறுப்பண்ணன், எம். ஏ., எம். எஸ்சி., டி. எஸ். எஸ்.

விலை ரூ. 3-00

பிராங்கு லாய்டு ரைட் என்பவர் பழம கட்டட முறைகளை எதிர்த்துக் காலத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் வதிபவர்களுக்கு ஏற்பவும் புதுப்புது வகையில் பல கட்டடங்களை அமெரிக்காவிலும் ஜப்பானிலும் கட்டிய மாபெரும் சிற்பி ஆவர் இந்நூல் அவருடைய வாழ்க்கை வரலாற்றினையும் அவர் கட்டிய கட்டடங்களின் அமைப்பு முறைகளையும் மிகத்தெளிவாகவும் சுவைபடவும் கூறுகிறது.

ஒரு முறை தென் இந்தியச் சுற்றுப் பயணத்தின் போது ஒரு கிராமத்தில் நேருஜியின் கார் நின்றது. அப்பொழுது வயதான ஒருவர் பலூன் விற்பதைக் கண்டு அவரிடம் சென்று அவர் தோள் மேல் கை போட்டுக் கொண்டார். ''பலூன் என்ன விலை என்று விசாரித்தார். 'ஒரு பலூன் இரண்டணு', என்ற பதிலைக் கேட்டதும் பையைத் துழாவிப் பார்த்தார். வழக்கம்போல் பையில் பணம் எடுத்துப்போக வில்லை. உடனே தன் நண்பர் ஒருவரிடம் இருந்து இருபது ரூபாய் வாங்கி அந்தக் கிழவரிடம் கொடுத்து எல்லாப் பலூன்களை யும் வாங்கிக் கொண்டார். குழந்தையைப்போல் சிரித்துக் கொண்டு ஆங்குக் கூடியிருந்த குழந்தைகளுக்கு அந்தப் பலூன் களைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு மீண்டும் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

இவ்வாறு சின்னஞ் சிறுவர் களுக்காக அவருடைய உள்ளமும் இல்லமும் என்றும் திறந்தே இருந்தன. சிறுவர்கள் அவரைச் சந்திப்பதற்கு நேரமும் காலமும், இடமும் தேவைப்படவில்லை. முன் கூட்டியே ஏற்பாடு செய்யப் பட்ட ''திட்டமிட்ட சந்திப்புக் கள்'' குழந்தைகளைப் பொறுத்த வரையில் என்றுமே தேவை இல் லாமல் போய்விட்டது. குழந்தை களின் உள்ளத்தில் குடிகொண்டு வாழும் அந்தக் கோமானைச் சந் திக்கக் குழந்தைகளுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் அவரால் வழங்கப் பட்டிருந்தன.

சின்னஞ் சிறுவரிடம் அவர் கொண்ட பற்று உலகம் அறிந்த ஒன்று; அது நாடு, சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து நின்ற ஒன்றாகும். வெளி நாட்டுப் பயணங்கள் ஒவ்வொன்றிலும் அவரை வரவேற்க அந் நாட்டுக் குழந்தைகளே முன் நின்றன என்பது நாம் அறியாத ஒன்றன்று. அந்தக் குழந்தைகளுக்காகவே யானைக் குட்டிகளைப் பரிசாக அவர் அனுப்பி வைக்க மறந்ததும் இல்லை.

தாம் பிறந்த நாளான நவம்பர் 14 -ஆம் நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப் பட்டதை அவர் பெரிதும் விரும்பினர். அன்று சிரித்து மகிழும் குழந்தைச் செல்வங்கள் ஆயிரக் கணக்கில் அணிவகுத்துச் செல்வதை அவர் அகமகிழக் கண்டு களிப்பார். அவர்களுடைய மகிழ்ச்சியில் தாமும் பங்கு கொள்வார். மலர்கள் வழங்கி அன்பு தவழும் புன்சிரிப்புடன் அவர் களை வரவேற்பார்.

ஒவ்வொரு குழந்தையிடமும் ஆர்வத்தோடு அணுகிக் குழந்தையைப் போல் பேசுவார். ''பறவையின் ஒலியிலிருந்து நீ அந்தப் பறவையை இனம் கண்டுகொள்ள முடியுமா'' என்று கேட்பார். ''பூவின் மணத்தைக் கொண்டு அந்தப் பூவின் பெயரை உன்னல் சொல்ல முடியுமா''? என வினவுவார். உலகில் ஏற்படும் புதுப்புதுப் படைப்புக்களையும் விஞ்ஞானச் சாதனைகளையும் குழந்தைகள் ஆர்வத்தோடு உற்றுக் கவனிக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறுவார். விண்ணும் மண்ணும் மற்றும் இயற்கையும் விசித்திரமானவை; ஆதலால் உன் அறிவும்

ஆற்றலும் அதனை ஆய்வதற்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்று குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுவார்.

இவ்வாறு குழந்தையோடு குழந்தையாக நின்று கொஞ்சிப் பேசும் பண்பு அவருக்கே உரியது. ''குழந்தைகளிடையே நேரம் செலவழிப்பதற்கும், அவர்களுடன் பேசுவதற்கும், விளையாடுவதற்கும் நான் பெரிதும் விரும்புகிறேன். குழந்தைகளோடு இருக்கும்போது நான் அரசியல் சிக்கல்கள் அனைத்தும் மறந்து விடுகிறேன். அவர்கள் மத்தியில் இருக்கும்போது, என்னுடைய குழந்தைப் பருவம் கடந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதையும், என் விளையாட்டுப் பருவம் மீண்டும் வராது என்பதையும், நான் வயதான கிழவனாகி விட்டேன் என்பதையும் நான் இந்நேரங்களில் முற்றிலும் மறந்து விடுகிறேன்'' என்று அவரே குறிப்பிடுகிறார்.

இந்தக் குழந்தைப் பண்பும், உள்ளமும் நேருவிடத்தில் இருந்த காரணத்தினால்தான் உலக மக்களானாலும் சரி, உலகத் தலைவர்களானாலும் சரி அவரிடத்தில் ஒரு பற்றுதல் கொள்ள முடிந்தது. ஏனெனில் குழந்தையையும், தெய்வத்தையும் ஒன்றாகப் போற்றுதல் உலக இயல்பு. கண்ணால் காணா இறைவனைக் காட்சிப் பொருளாகிய குழந்தைகளிடத்திலே காண முடிகிறது. ஆதலால்தான் வாழ்நாள் முழுவதும் தெய்வப்பற்றுக் குறைந்தவராகத் தோன்றிய போதிலும் குழந்தைப் பற்று மிகுந்தவராக - தெய்வக் குழந்தையாக - அவர் தோன்றினார்.

இந்தத் தெய்வக் குழந்தையை இன்று நாம் இழந்து விட்டோம். ஆனால், அந்தக் குழந்தை உள்ளம் என்றுமே நம்மைவிட்டு மறையாது. உலகம் என்ற ஒன்று உள்ளவும், அதில் இந்திய நாடு உள்ளவரைக்கும் நேருவின் குழந்தை உள்ளம் நிலைபேறு பெற்று வாழும் என்பது உண்மை.

மறு உலகமா?

மறு உலகத்தை பற்றி எனக்கு அக்கரையில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த உலகில் நான் செய்ய வேண்டிய வேலைகளிலேயே என் மனம் ஆழ்ந்து கிடக்கிறது. இந்த உலகத்தில் என்வழி எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டால், அதுவே போதும். இங்கே எனக்குள்ள கடமையை நான் தெளிவாக உணர்ந்து கொண்டுவிட்டேனானால், வேறு எந்த உலகத்தைப் பற்றியும் நான் கவலை கொள்ளவே மாட்டேன்.

—நேரு

நேரு ஒரு சிறந்த மனிதர்

திரு. **ம. பொ. சிவஞானம்.**

பாரதப் பெருநாடு ஒரே தலைமுறையில் இரு பெரு ஞானியரைப் பெற்றெடுத்தது. ஆம்; பல நூற்றுண்டிற் கொருமுறை ஒரு ஞானி தோன்றுவார் என்பது உலக வழக்கும்-வரலாறு. ஆனல், ஒரே தலைமுறையில் இரு பெரும் ஞானியர் ஒரே நாட்டில், கிட்டத் தட்ட ஒரே பிரதேசத்தில் தோன்றிய புதுமையை பாரதம் நிகழ்த்தியது. அவர்கள், மகாத்மா காந்தியும் பண்டித ஜவகர்லால் நேருவும் ஆவர். முன்னவர், குருநாதர்; பின்னவர், சீடர். புகழில் குருவையும் மிஞ்சி நின்ருர் சீடர்.

காந்தியடிகள், இல்லந்துறந்து சன்னியாசியாக வாழ்ந்தார். இரண்டாடை உடுத்தி, ஆட்டுப் பாலும், பேரீச்சம் பழமும் உணவாகக் கொண்டு, ராம் தூன் பஜனை செய்து வாழ்க்கை நடத்தினர். அதனல், அவரைத் தெய்வத் தூதராகவே கருதினர் மக்கள். ஜவகர்லால் நேரு, அந்த நிலையில் வாழ்க்கை நடத்தவில்லை. கல்வி கேள்வியுடைய ஒரு அறிஞராகவே நம்மிடை வாழ்ந்தார். ஆனல் ஒரு ஞானிக்குரிய உள்ளொளி, ஒழுக்கம், தியாக உணர்வு, சேவா மனப்பான்மை, மரணத்திற்குமஞ்சாத மா வீரம் ஆகிய நல்ல பண்புகள் அனைத்தும் ஜவகரிடம் இருந்தன. இத்தகைய உயர் பண்புகள் அனைத்தும் ஒரு அரசியல் தலைவரிடம் பொருந்தியிருப்பது அரிது. இந்தக் காரணத்தால் ''மனிதருள் மாணிக்கம்'' என்று ஜவகரைப் புகழ்ந்தார் காந்தியடிகள். பாரதத்துக்குச் சுதந்திரம் தேடித் தந்த பெருமை காந்தியடிகளுக்கு உண்டு. ஆனல், சுதந்திர பாரதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க அடிகள் முன்வரவில்லை. தம்முடைய வாரிசான நேருவையே சுதந்திர பாரதத்தின் பிரதமராக்கினர். நேருவின் நேர்மையிலே, நெஞ்சுறுதியிலே, நிர்வாகத் திறமையிலே அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார் அண்ணல் காந்தி. அவருடைய நம்பிக்கையை மெய்ப்பித்துக் காட்டினர் நேரு. அசோகர் - அக்பர்-ராஜ ராஜ சோழன் போன்ற பேரரசர்கள் பாரதத்தின் பெரும் பகுதியில் செங்கோல் செலுத்தி இருக்கின்றனர். ஆயினும் அந்தப் பேரரச ரெல்லாம் பெருத உலகப் பெரும் புகழைப் பிரதமர் நேரு பெற்றிருந்தர்.

பிரதமர் நேரு நவ பாரதம் காணவிழைந்து, தமது வாழ் நாளின் பிற்பகுதியில் பதினெட்டு ஆண்டுக் காலம் ஓய்வின்றிப் பாடு பட்டார்.

பாரதத்தைச் சுற்றி உள்ள பாரதத்தோடு சேர்ந்து சுதந் திரம் பெற்ற-ஒவ்வொரு நாடும் சமயச் சார்புடைய நாடாகவே பிரகடனப் படுத்தப் பட்டுள்ளன.

பாரதத்திலிருந்து பிரிந்து போன பாகிஸ்தான், இஸ்லாமியச் சார்புடைய நாடு; பாரதம் சுதந் திரம் பெற்றதன் விளைவாக எதி ரொலி சுதந்திரம் பெற்ற பர்மா வும் இலங்கையும் புத்தமதச் சார் புடைய நாடுகள்; அண்மையில் சுதந்திரம் பெற்ற மலாசியா, இஸ்லாமியச் சார்புடைய நாடு.

இந்தச் சூழ்நிலையில், 45கோடி மக்களைக் கொண்ட மா பெரும் நாடான பாரதத்தை, மதச்சார் பற்ற நாடாகச் செய்த பெருமை நம் பெருந் தலைவர் நேருவுக்கே உரிமை. நேரு, மதத்தின் விரோதியல்ல. ஆயினும், மக்க ளின் விரோதியாக மதத்தைப் பயன்படுத்த அவர் விரும்ப வில்லை. இந்தியாவை இந்துக் களுக்கே உரிய நாடாகச் செய்ய வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி எழுந்தது. அந்தக் கிளர்ச்சி காந்தி யடிகளின் உயிரைப் பலி கொண் டது. நேருவையும் பயமுறுத்தி யது. மனித நாகரிகத்தில் நம் பிக்கைக்கொண்ட ஜவகர்லால் நேரு மத வெறிக் கிளர்ச்சியை வெற்றி கண்டார்.

நால்வருண ஆசாரம் பண்டை நாளிலிருந்தாற் போன்று இன் றைய நாளில் பலம் பெற்று இருக்கவில்லை. ஆயினும், அடி யோடு அழிந்து விடவும் இல்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்—என்ற நால்வருணப் பாகுபாடு அற்ற நவ பாரதத்தைச் சிருஷ்டித்தார் நேரு. நால் வரு ணத்திற்கும் தாழ் வருணத்தவர் எனப்பட்ட டாக்டர் அம்பேத் காரைச் சட்ட மந்திரியாக்கி, பாரதத்தின் அரசியல் சட் டத்தை அவரைக்கொண்டு உரு வாக்கி, அரசியல் நிர்ணய மன் றத்தில் நிறைவேற்றி வைத்த பெருமை பிரதமர் நேருவுக்கு உண்டு.

மனித நாகரிகத்தின் காவல ரான நேரு, பெண்ணினத்திற்குச் சொத்துரிமை வழங்கினார். அதற் கேற்பட்ட எதிர்ப்புக்களை யெல்லாம் தகர்த்தெறிந்தார்.

தீண்டாமையைச் சட்ட விரோதமாக்கிய சமூகப் புரட்சி, பிரதமர் நேருவின் ஆட்சியில் தான் நிகழ்ந்தது.

அறுநூறு முடி மன்னர்களைச் சாதாரண மனிதர்களாக்கி, அவர்களது ஆதிக்கத்திற்குட் பட்ட மக்களையெல்லாம் முடி சூடா மன்னர்களாக்கிய அரசி யல் புரட்சி நேருவின் ஆட்சியில் தான் நிகழ்ந்தது.

ஆசிய-ஆப்பிரிக்கக் கண்டங் களிலே, மிகப் பெரும்பாலான நாடுகளில், ஜனநாயகம் அஸ்த மித்து வரக் காண்கின்றோம். அண்டையிலுள்ள பாகிஸ்தானி லும் பர்மாவிலும் ஜனநாயகம் முற்றிலும் அஸ்தமித்து விட்டது. சீனாவின் நிலை உலகறிந்ததாகும். இந்தச் சூழ்நிலையில், பாரதப் பெரு நாட்டில், மிக்க அமைதி யான முறையில் ஜனநாயகத்தை வளர்த்து, அது வாழ்வு பெறும்

காலத்திலேயே தம்முடைய வாழ்வை முடித்துக் கொண்டார் நேரு.

பாரதம், பல்லாயிரமாண்டுகளாகத் திட்டமிட்டு முன்னேற்றங் காணாத நாடு. இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலப் பேரரசால் திட்டமிட்டுச் சுரண்டப்பட்ட நாடுமாகும். கோடானு கோடி மக்கள் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், வாழ மனைக்கும் வழியின்றி வருந்தும் நிலையில்தான் பாரதப் பெருநிலம் சுதந்திரம் பெற்றது. அத்தகைய பெருங் கேட்டிற்கு இரையான பாரதத்திற்குப் புது வாழ்வு தர, ''இல்லை'' என்ற சொல் 'இல்லை' யென்னும்படிச் செய்ய ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துச் சுதந்திர பாரதத்தைச் சொர்க்க போகமாக்கக் கனவு கண்டார் நேரு. அத்துறையில் வெற்றியைக் காணுமுன்பே அவருடைய வாழ்வு முடிந்துவிட்டது. என்றாலும், வெற்றிக்கு வழி காட்டி விட்டு நம்மிடம் விடை பெற்றுக் கொண்டார்.

பாரதப் பெருநிலம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தனி உடைமைத் தத்துவத்தையே ''தரும''மாகக் கொண்டு, அதன் கொடுமைகளை அனுபவித்து அலுத்துச் சலித்துவிட்டது. அதனால், சோஷலிசப் புது உலகாக பாரதத்தை மாற்ற வழிவகுத்துத் தந்தார் நேரு. ''எல்லோருக்கும் எல்லாம்'' என்ற நிலையை ஏற்படுத்தப் பாடுபட்டார்.

ஜவகர்லால் நேரு, தெய்வ அருள் பெற்ற மகான் அல்ல; மக்களுடைய ஆதரவு பெற்ற சாதாரண மனிதர்தான். ஆனால், ஆண்டவனருள் பெற்ற மகானைக் குருவாகக் கொண்டு, மனித சக்திக்கு இயன்றதை யெல்லாம் சாதித்துக் காட்டினார். அவ்வகையில் மனித குலத்தின் மாணிக்கமாக விளங்கினார் ஜவகர்லால் நேரு.

நேரு சர்வாதிகாரம் படைத்த சக்கரவர்த்தியல்லர்; ஜனநாயக ஆட்சியிலே, சட்டங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் பிரதமராகவே இருந்தார். ஆனால், சர்வாதிகார சக்கரவர்த்திகள் சாதிக்காத அற்புதங்களையெல்லாம் சாதித்தார்.

பாரதப் பேரரசு உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்குவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால், பாரதப் பிரதமர் நேரு வல்லரசுகளெல்லாம் வாயார வாழ்த்தும் தலை தாழ்த்தி வணங்கும் நல்லரசின் தலைவராக விளங்கினார்.

''அன்புடையார், தம் என்பும் உரியர் பிறர்க்கு'' என்றார் வள்ளுவர். அதனை மெய்ப்படுத்துவது போலத் தம்முடைய உடம்பை எரித்துப் பொடியாக்கிய பின்னர், மிகுந்திருக்கும் என்புப் பொடியைப் பாரத நாட்டின் வயல்களிலெல்லாம் தூவுமாறு உயில் எழுதி வைத்தார் நேரு. உலகங் கண்ட பேரரசர்களிலே, பிரதமர்களிலே, பெருந் தலைவர்களிலே ஒருவர் கூட இந்த அரிய சாதனையைச் செய்ததாகச் சரித்திரம் கூறவில்லை. இவ்வளவையும் செய்த ஜவகர்லால் நேரு, நம்மைப் போன்ற சாதாரண ஒரு மனிதர்தாம் என்பதை நினைக்கும் போது, மனித சக்திக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துகின்றோம். வாழ்க, நேருவின் புகழ்! வளர்க, மனித சக்தி!

நேருவின் இறுதி விருப்பம்

''........இந்தியா மக்களனைவரும் என்பால் அளவிலா அன்பு காட்டி வந்துள்ளனர். விலைமதிக்கவொண்ணு அவ்வன்பிற்கு எவ்வகையிலும் என்னுல் ஈடுசெய்ய முடியாது. ஆனுலும், அவர்களுடைய அன்பிற்குத் தகுதியற்றவனுக நின்றுவிடாமல் என் வாழ்நாள் முழுதும் அவர்களுக்காக என்னுல் இயன்றதைச் செய்துவருவேன்.''

''நாட்டின் இன்ப துன்பங்களில் விலகாது ஒட்டி நின்று என்னேடு பங்கு கொண்ட பல்துறை மேதைகளுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

''நான் இறந்த பின்பு எவ்வித மதச்சடங்குகளும் எனக்காக நடத்தப்படுவதை நான் விரும்பவில்லை. மதச் சடங்குகளில் அடிமைப் பட்டுக் கிடப்பதில் எனக்கு நம்பிக்கையுமில்லை.

''நான் உயிர் நீத்த பின்பு என் உடல் எரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். ஒருவேளை, நான் வெளி நாட்டிலிருக்கும் பொழுது உயிர் பிரிந்தால், என் உடல் அங்கேயே தகனம் செய்யப் பட்டு அஸ்தி அலகாபாத் நகருக்கு அனுப்பப்படவேண்டும். அவ்வஸ்தியில் ஒரு கைப்பிடியளவு கங்கையாற்றில் கரைக்கப்பட வேண்டும். இந்த ஆற்றில் என் அஸ்தி கரைக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தவொரு மதக்கோட்பாடும் காரணமன்று. சிறுவயது முதற்கொண்டே கங்கை, யமுனை ஆறுகளோடு என் வாழ்க்கை ஒன்றி விட்டது. நான் வளர வளர இந்தப் பிணைப்பும் இறுகி வளர்ந்து கொண்டே வந்துள்ளது. காலம் காலமாக அந்நதிகளைப் பற்றிப் புனையப்பெற்று, அவற்றின் நீரோடு நீராய்க் கலந்துவிட்ட கதைகளும் கவிதைகளும், வனப்பும் வரலாறும் என் உள்ளத்தில் நீங்காது நிலைத்து விட்டன. இவ்விரு ஆறுகளிலும் கங்கைக்கு மட்டும் தனிச் சிறப்பு உண்டு. இதன் கரைதான் இந்தியத்தாயின் வரலாற்று ஏடு. அவ்வேட்டில் அவளுடைய வாழ்வும் தாழ்வும், இன்பமும் துன்பமும், வெற்றியும் தோல்வியும் பொறிக்கப்பட்டுள்ளன. வெள்ளிப் பனிமலையில் தோன்றி, ஆழ்ந்தகன்ற பள்ளத்தாக்குகளையும், பரந்த சமவெளிகளையும் கடந்து, அகன்ற கடலில் கலந்துவிடும் இந்தக் கங்கையாறு இந்தியாவின் கடந்தகால, நிகழ்கால, எதிர்காலச் சின்னமாகும். அதனுல்தான், இந்திய நாட்டிற்கும் அதன் பண்பாட்டிற்கும் என் கடைசி வழிபாடாக என் அஸ்தியில் ஒரு கைப்பிடியளவு அதில் கரைக்கப்படவேண்டும் என்று விரும்புகிறேன்.

''கங்கையில் கரைக்கப்பட்டது போக எஞ்சியுள்ள அஸ்தி முழுதும் ஆகாய விமானத்தில் உயர எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தூவப்பட வேண்டும்; ஏழைகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் வயல்களின் மீதெல்லாம் அது படிய வேண்டும்; அவ்வாறு படிந்து இந்திய நிலத்தின் மண்ணேடு மண்ணுக இரண்டறக் கலந்து விடவேண்டும்.''

ஜூன் 21, 1954. —ஜவகர்லால் நேரு.

நேருஜியின் அயல்நாட்டுக் கொள்கை

திரு. ஏ.ஜி. வேங்கடாச்சாரி

ஒவ்வொரு நாட்டுக்கும் தேசிய நலன்கள் எனப்படுபவை உண்டு. அவை கைகூடுவதற்கு உள் நாட்டிலும் வெளியுலகிலும் பல்வேறு முயற்சிகள் அவசியமாகின்றன. இவை ஒன்றுக்கொன்று இசைவாக இருத்தல் இன்றியமையாதது. ஆகையால்தான் உள்நாட்டுக் கொள்கை, அயல்நாட்டுக் கொள்கை ஆகிய இரண்டும் ஒரு சேர அமையவேண்டும். என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

பாரத நாட்டின் தேசிய நலன்கள் எவ்வாறு நேருஜி போஷித்து வந்திருக்கிறார் என்பது ருசிகரமான ஆராய்ச்சி. எப்பொழுதுமே விரிவான உலகக் கண்ணோட்டத்துடன்தான் நமது பிரச்னைகளை மதிப்பிட்டுச் செயலாற்ற வேண்டும் என்பது அவரது துணிவு. குறுகிய அபிமானங்கள் அகன்று இந்திய மக்கள் ஒன்றுபட்டு, சுபிட்ச சமுதாயத்தை அமைத்து, உலகமே ஒரு குடும்பம் என்ற சீரிய லட்சிய நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். என்பது அவரது பேரவா. உலக விவகாரங்களில் அவர் சிரத்தை காட்டியது இந்த நோக்கத்துடன்தான்.

"உலக விடுதலை"

நேருஜி பாரத நாட்டின் விடுதலையை மட்டும் நாடினார் என்பதில்லை. எல்லா நாடுகளுமே சுதந்திரமடைந்து நல்வாழ்வு நடத்த வேண்டும், அந்த அடிப்படையில்தான் உண்மையான சர்வ தேசியம் மலர்ச்சி காணும் என்பது அவரது நம்பிக்கை. எனவே அதற்காக உழைத்த ஸ்தாபனங்களுடன் கூட 1926-ஆம் ஆண்டிலேயே ஐரோப்பாவில் அவர் தொடர்பு கொண்டார். ''ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்'' பெல்ஜியத்தில் கூடி அடிமை நிலையை உலகினின்று அகற்றுவதற்கு முற்படுவதென சங்கற்பித்துக் கொண்டபோது அவர் உடன் இருந்தார். எனவே ஏகாதிபத்

திய-எதிர்ப்பு அவரது உலகக் கண்ணோட்டத்தில் முதல் முக்கிய அம்சமாகியது. அதைத் தொடர்ந்து சென்னை வந்து காங்கிரஸ் மகா சபையில் கலந்து கொண்டு, பரிபூரண சுதந்திரத் தீர்மானத்தை அவர் ஆதரித்தார்.

ஐரோப்பாவில் இருந்தபோது நேருஜி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார். அங்கு நடந்து வந்த சோஷலிஸ சமுதாய நிர்மாணப் பணி அவரைப் பெரிதும் ஈர்த்தது. லண்டன் பொருளாதார ஸ்கூலின் தொடர்பும் அவருடைய சிந்தனையை சோஷலிஸ்ட் திசையில் உருவாக்கியது. இந்தியாவும் ஏறக்குறைய சோஷலிஸ சமுதாயமாக வேண்டும் என்ற ஆர்வம் வலுத்தது. அது ஒரு தினுசாக கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தில், குறிப்பிட்ட லட்சிய விவரங்களாக வெளிப்பட்டது.

இடதுசாரிப் போக்கு

முஸோலினியும் ஹிட்லரும் வளர்ச்சி கண்டு வந்த ஐரோப்பாவில் அவர்களது பாசிஸத்துக்கு எதிரிடையான ஒரு முன்னணி எல்லாத் தேசங்களிலும் உருவாயிற்று. அது இந்தியாவிலும் எதிரொலித்தது. கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் லிபரல்களும் சேர்ந்த ஐக்கிய முன்னணிகள் 1933 முதல் 1937 வரை தோன்றின. இக் காலத்தில்தான் இந்தியாவைச் சோஷலிஸ்ட் பாதையில் இட்டுச் செல்லவேண்டும் ஏன்ற தமது விருப்பத்தை 1933-இல் ஒரு துண்டுப் பிரசுரத்தின் மூலம் வெளியிட்டார். காங்கிரசின் ஆலோசனைகளில், தாம் அக்ராசனராக இருந்த காலையில், சோஷலிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடம் கொடுத்தார்.

இந்தச் சமயத்தில் இடசாரிப் போக்கை முடுக்கிவிடுவது நேருஜிக்கு அதிக உகப்பாயிருந்தது. தேச விடுதலைக்கான ஆர்வத்தை சோஷலிஸ லட்சியத்தை முன் வைத்துத்தான் வளர்க்க முடியுமென அவர் நம்பினார். பாசிஸத்தைக் கண்டிப்பது, ஏகாதிபத்திய எதிர்ப்பை வலியுறுத்துவது என்ற ரீதியில் அவர் அயல்நாட்டுக் கொள்கைத் தீர்மானங்களைக் காங்கிரசில் கொணர்ந்து நிறைவேற்றுவது வழக்கமாகி விட்டது. இதை அனுமதித்த காந்தி வழித் தலைவர்கள் அவரது சோஷலிஸ ஆர்வம் காங்கிரஸ் கொள்கையின் பகுதியாகும்படி விடவில்லை. விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடந்தாக வேண்டிய நிலவரத்தில், வர்க்கப் போராட்ட அடிப்படையில் உள்ள சோஷலிஸப் பிரசாரம் தேசிய ஒற்றுமையுணர்வைக் குலைத்துவிடும் என்று காங்கிரஸ் கொள்கையில் அது இடம் பெறுவதற்கில்லை என்று அவர்கள் தெளிவாகக் கூறி விட்டனர்.

இரண்டாவது உலக யுத்தம் தொடங்குவதற்கு முன் ரஷ்யாவும் ஹிட்லரின் ஜெர்மனியும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தைத் திடும் பிரவேசமாகச் செய்து கொண்டதும், பின்னர் போலந்தைப் பங்குபோட்டுக் கொண்டதும் ஐக்கிய முன்னணிகளுக்கு வேட்டுவைத்து விட்டன. உலகமெங்கும் பரவலாக சோஷலிஸ்டுகளிடையே மனக் குழப்பம்

வலுத்தது. நேருஜிக்கு இது பெரிய அதிர்ச்சி. யுத்த காலம் நெடுக நேருஜியின் மனம் சிரமப்பட்டது. காங்கிரசின் அயல் நாட்டுக் கொள்கை ஜப்பான் விஷயத்தில் சரிவர உருவாக வில்லை என்ற ஒரு குறை அவருக்கு இருந்தது.

காங்கிரஸை ஒரு பாசிஸ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனமாக அவர் கட்டிக் காத்து வந்தார். யுத்தத்தில் நேசநாடுகள்பால் அனுதாபம் காட்டினார். அவற்றைப் பல வீனப்படுத்தக்கூடிய எதையும் செய்ய அவர் விரும்பவில்லை. ஆனால் 1939-இல் இரண்டாவது தடவையாகக் காங்கிரஸ் அக்கிராசனரான ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் அப்படி நினைக்கவில்லை. கிடைக்கின்ற வாய்ப்புக்களை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு தேசத்தின் விடுதலையைத் துரிதப்படுத்துவதுதான் பிரதானம், இதில் சித்தாந்தக் குழப்பமே கூடாது என்பது அவரது கட்சி. அதன் விளைவாக அவர் தப்பிச் சென்று ஜெர்மனி, ஜப்பான் உதவியுடன் இந்திய தேசியப் படையை நிறுவி, பெரியதோர் புரட்சி நிலையை ஏற்படுத்தியது வரலாற்று உண்மை.

வாக்கு நிறைவேறியது

தரும நியாயம் பேசி, உதவி யளிப்பதாக வாக்களித்து, கணிசமான அதிக மாற்றத்தைக் கோரி, தன் நல்லெண்ணத்தைக் காங்கிரஸ் நிரூபித்த போதிலும் பிரிட்டன் புணிந்து கொடுக்காததால், 1942-இல் ''இறுதிப் போரை'' காந்திஜி துவக்கினார். போர் படம் என்றால் நேருஜிக்குத் தெம்பு வந்துவிடும். தவிர இந்தப் போராட்டத்தின் நோக்கத்தைக் காந்திஜி நேருஜிக்குப் பிடித்தமான வகையில் விரிவாக அமைத்து விட்டார். இந்தியா விடுதலை கோருவது அது தன் பிறப்புரிமை என்பதால் மட்டுமல்ல, விடுபட்ட இந்தியா பிற அடிமை நாடுகள் அனைத்தின் விடுதலைக்கும் உழைக்கும், கொடுமை எங்கிருந்த போதிலும் அதை அகற்றப் பாடுபடும் என்று அத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. தேசம் சுதந்திரமடைந்த பிறகு இந்த வாக்குறுதியை நேருஜி நிறைவேற்றினார். ஐ. நா. வின் மூலமாகவும் பிறவகைகளிலும் இப்பெரும் பணியை அவர் நடத்திப் பெரிய விடுதலைச் சக்தியாகத் திகழ்ந்தார். ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலையை இது பெரிதும் துரிதப்படுத்தியது என்று கூறமுடியும். ஆசியாவிலிருந்து ஏகாதிபத்திய ஆதிக்கம் வேகமாக அகல்வதற்கு இது துணைபுரிந்தது என்றும் சொல்லலாம்.

தேச விடுதலைக்குப் பிறகு நமது அயல்நாட்டுக் கொள்கையை நேருஜி உருவாக்கிய விதம் அலாதியானது. குடியரசாகிவிட்ட இந்தியா காமன்வெல்த்தில் தொடர்ந்து இருந்தாக வேண்டும் என்று அவர் செய்த முடிவு விவேகம் நிறைந்தது. பிரத்தியட்சவுணர்வுடன் கூடியது. நம்மைத் தொடர்ந்து பர்மா தவிர சுதந்திரமடைந்த பிற பழைய பிரிட்டிஷ் காலனிகளெல்லாமே காமன்வெல்த்தில் இருப்பதென முடிவு செய்தது சுலபமாயிற்று. இதனால் உறுதியாகியுள்ள நட்புறவின் அடிப்படைகள் வலிவு பெற்றன.

கெடுபிடிப்போர்

1949இல் சீனவில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் முழுமை கண்ட சூழ் நிலையில் அந்நாடு அவரைப் பெரிதும் ஈர்த்தது. அதனுடன் நட்புறவு பலமடைந்து, நம்மிரு சமுதாயங்களும் ஒத்துழைப்பது சாத்தியமாகுமென அவர் நினைத்தார். எல்லாத் தேசங்களின் விடுதலையைத் துரிதப்படுத்தி அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட்டு உழைப்பதற்கு இந்த நட்புப் பயன்படும் என்றும் அவர் கருதினர். அத் தருணத்தில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பதட்டமான பல காரியங்கள் நிகழ்ந்து ஒரு பெரிய நெருக்கடி தோன்றி விட்டது. ஐரோப்பாவுக்கு மீண்டும் அமெரிக்கா தன் புடைகளை அனுப்பி, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அபயமளித்து, அவற்றுடன் கூட நெருங்கியதோர் இராணுவ ஐக்கியத்தை (நாட்டோ) உருவாக்கியது. இதன் நேர் விளைவாகக் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள தன் சார்பு நாடுகளை ரஷ்யா தன்னுடன் நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டு எந்தச் சவாலையும் ஏற்கத் தயார் என்று கூறியது. இரண்டு தொகுதிகளுக்கிடையே கெடுபிடிப் போர் வலுக்கலாயிற்று. இது உண்மையில் பெரும் போராக வெடித்து விடுமோ என்ற அச்சம் நேருஜிக்கு ஏற்பட்டது.

கோஷ்டி சேராமை

புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள் தம் தேசங்களில் ஸ்திரமான ஆட்சி முறையை உறுதி செய்து, இணக்கமான பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டிய நிலைமையில் இருந்தன. இவை அமெரிக்கக் கட்சியிலோ ரஷ்யக் கட்சியிலோ சேராமல், சுதந்திரமாக எல்லா உலகப்



நேரு பரம்பிக்குளம் அணைக்கட்டு உருவாவதைப் பார்வையிடுகிறார்

பிரச்னைகளையும் மதிப்பிட்டு, நிலைமையின் தேவைக்கேற்பச் செயல்படுவனவாக இருப்பது தான் நல்லது என்று அவர் நம்பினார். இந்தியா போன்ற பெரிய தோர் நாடு எந்தக் கோஷ்டியில் சேருகிறதோ, அந்தக் கோஷ்டியின் பலம் உடனடியாகக் கூடுதலாகி விடும். ஏதாவது ஒரு கட்சி போரைத் துவக்குவது அவசியமென நினைத்துச் செயல்படுகின்ற நிலவரத்தில் அது கொண்டு போய்விடும். கோஷ்டி சேராமலிருந்தால் யுத்தத்தில் இறங்குவதைப்பற்றிப் போட்டி வல்லரசுகள் பன்முறை சிந்திக்க வேண்டியிருக்கும். எனவே கோஷ்டி - சேராமை என்பதை உண்மையில் உலக சமாதானத்துக்கு உதவும்படியான கொள்கையே என்று அவர் எண்ணமிட்டார்.

லாப நஷ்டங்கள்

கோஷ்டி-சேராமை என்பது வேறு, ஆக்கிரமிப்பு விஷயமாகக் கொள்ள வேண்டிய மனப்பான்மை வேறு. இரண்டையும் சேர்த்துக் குழப்பலாகாது என்பதை அவர் முதலிலேயே தெளிவு படுத்தி விட்டார். கோஷ்டி-சேராமை என்பது நடுநிலைமையல்ல. ஆக்கிரமிப்பு வந்தகாலையில் நடுநிலைமை வகிப்பது சாத்தியமல்ல என்பதை முழக்கினார்.

நேருஜியின் கோஷ்டி-சேராக் கொள்கைக்கு முதல் சோதனையாக வாய்த்தது கொரியா யுத்தம். கம்யூனிஸ்ட் சீனாவின் பின்பலத்துடன் வட கொரியர் தென் கொரியாவைத் தாக்கியது ஆக்கிரமிப்புத்தான் என்பதை இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால் ஐ. நா. சார்பில் உருவான எதிர் நடவடிக்கையில் நமது நாட்டை ஈடுபடுத்த நேருஜி மறுத்துவிட்டார். பிறகு கம்யூனிஸ்ட் சீனா நேரடியாகக் குறுக்கிட்ட காலத்தில், அதை



'ஆக்கிரமிப்பாளன்' என்று பிரகடனப்படுத்துவதற்கு அவர் இசைவு கூறவில்லை. இதன் காரணமாக மேலை நாடுகள் வருத்தப்பட்டன. இந்திய வைத்தியப் படை சென்றது. போரில் இந்தியா ஈடுபட மறுத்தது பிறகு ஒரு வகையில் பயன்பட்டது. கொரியா யுத்தம் நிற்கவும் இந்தோ-சீனுவில் பிரெஞ்சுக்காரர் நடத்திவந்த ஆதிக்கப் போர் முடிவுற்று சுதந்திரம் கிடைப்பதற்கும் இந்தியாவால் பிறகு துணைபுரிய முடிந்தது. கோஷ்டி சேராக் கொள்கை சமாதானத்துக்குத் துணைபுரிய வல்லது" என்பது எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தது.

கோஷ்டி சேராமை

கம்யூனிஸ்ட் சீனுவானது ராணுவ வகையில் ரஷ்யாவுடன் பிணைபட்ட நாடாக இருந்த போதிலும், அபிவிருத்திப் பிரச்னைகள்தாம் அதற்குப் பிரதானம். எனவே அது யுத்த மார்க்கத்தை விரும்பாது என்று நேருஜிக்குப் புலப்பட்டது. ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே அதற்கு மரியாதையுடன் கூடிய இடம் கிடைத்து, அவை ஒன்று சேர்ந்து உழைப்பது சாத்தியமாக வேண்டும் என்று நேருஜியும் இந்தோனேசிய அதிபர் சுகர்ணுேவும் நினைத்தனர். அதன் பேரில் சீனுவும் சேர்ந்த ஆசிய-ஆப்பிரிக்க மகாநாடு பாண்டுங்கில் 1956-இல் கூடியது. அதில் சீனப் பிரதமர் சூ-யென்-லாயை அறிமுகம் செய்து வைத்து, சமாதானத்துடன் கூடிய சகவாழ்வுக்கு நேருஜி அவரது இணக்கத்தைப் பெற்றுர். பஞ்சசீலக் கோட்பாடு உருவாயிற்று.

ஆக்கிரமிப்பு

பாண்டுங் மகாநாட்டை அடுத்து சீனு தனது ஆக்கிரமிப்பு அத்தியாயத்தில் இறங்கிவிட்டது. அப்பொழுது முதலே லடாக்கில் சிறுகச் சிறுக அவர்கள் இடம் பிடிக்கலாயினர். இந்த அக்கிரமம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் திபேத்தின் சுயேச்சை அந்தஸ்தை மதியாமல், அதன்மீது படையெடுத்து அதைச் சீனு பூராவாகத் தன் வசமாக்கிக் கொண்டது. முன்னரே திபேத்தின் அடிப்படையை பலவீனப்படுத்தி அது சீன உடமை என்று நேருஜி உடன்படிக்கைப்படி ஒப்புக்கொண்டதுண்டு. அதுதான் இந்த ஆக்கிரமிப்பைச் சாத்தியமாக்கியது என்று கருதுவோர் உண்டு. வேறு ஒரு மக்கள் அடிமைப்படுவதற்கு மறைமுகமாக இந்தியா துணை புரிந்தது என்ற பழி இதன் விளைவாகச் நேர்ந்தது.

திபேத் பூராவாகச் சீனக் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வந்தவுடன், அடுத்தபடி ஆபத்து நமக்குத்தான் என்பது தெளிவாயிற்று. ஏற்கனவே லடாக்கில் சீனப் படைகள் படர்ந்து வுண்ணமிருந்தன. இந்தத் தகவலை நெடுநாள் வரை நேரு சர்க்கார் மக்களுக்குத் தரவில்லை. பார்லிமெண்டில் விஷயம் வந்தபோது, அப்பகுதி வெறும் பனிப்பாலை என்று சொல்லி ஆக்கிரமிப்பின் தன்மையைக் குறைத்து மதிப்பிட்டார். வேறு பகுதிகளிலும் சீனு உரிமை கொண்டாடியது. எல்லாவற்றையும் பற்றிப் பேச்சு நடைபெற்று வந்தது. உண்மையுணர்வுடன் பேசினுல் உடன்பாடு காண முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு

இருந்தது. ஆனால் பேச்சை அவகாசம் பெறுவதற்கான சாதனமாக வைத்துக் கொண்டு, படைகளைத் திரட்டி நமது எல்லையில் குவிக்கலாயினர் சீனர். நேருஜியின் ஆலோசகரும் பாதுகாப்பு மந்திரியுமான ஸ்ரீ கிருஷ்ண மேனன் முற்றிலும் மோசமான விதத்தில் நடந்து கொண்டு, எல்லைகளை நிராதரவான நிலையில் வைத்து, 1962 அக்டோபர் 20 படையெடுப்பு வரும்படியான நிலைமையைத் தோற்றுவித்து விட்டார் என்பது வரலாற்று உண்மை. அந்த ஆக்கிரமிப்பு நிலை இன்னும் நீடிக்கிறது. புதிய, பெரிய அச்சுறுத்தல்கள் உருவாகி வருகின்றன. போதாக் குறைக்கு நம்மிடம் நீங்காத பகையுணர்வு கொண்டுள்ள பாகிஸ்தானுடன் சீனு கூடிக் குலாவுகிறது.

காஷ்மீர்

காஷ்மீர் விவகாரம் விரைவில் தீராமல் பதினேழு வருஷ காலமாக இழுபறியாக இருந்து வந்திருப்பது நேருஜியின் தோல்விகளில் ஒன்று. அந் நாட்டைத் தமது இராணுவக் கூட்டாளியாக்கிக் கொண்டு, மேலைநாடுகள் அதற்குக் கொடுத்து வந்த ராஜீய ஆதரவும், அங்கு இராணுவ சர்வாதிகாரம் ஏற்பட்டதும் பிரச்னையை மிகச் சிக்கலாக்கி விட்டன. எந்தப் பிரச்னையையும் 'காலம்' தீர்த்துவிடும் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது என்பதற்கு இது மற்றொரு சான்று.

காஷ்மீர் விஷயமாக மேலை நாடுகளின் எதிர்நிலையை முன்னிட்டு ஐ.நாவில் ரஷ்ய ஆதரவை நாடி, அதனுடன் நெருங்கிய உறவு முறையை வைத்துக் கொண்டது சரியான கொள்கைதான். குருஷ்சேவின் இந்திய விஜயத்தின் காரணமாக நம்மைப் பற்றிய தப்பபிப்பிராயங்கள் நீங்கின. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் ரஷ்யாவும் அதன் சார்பு நாடுகளும் துணைபுரிந்தது இலாபத்தில் சேர்க்க வேண்டும். ஏற்கெனவே நமக்கு உணவு தானியங்களையும் கடனுதவிகளையும் அளித்து வந்த அமெரிக்கா, ரஷ்யாவுடன் போட்டி போட்டுக் கொண்டு உதவியை விரிவாக்கியதும் அனுகூலத்தையே அளித்தது. நமது கோஷ்டி சேராக் கொள்கையில் நியாயமிருக்கிறது என்பதை ரஷ்யர் மட்டுமின்றி அமெரிக்கரும் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளலாயினர்.

சமாதானப் பணி

அணுச் சோதனைத் தடைக்கு நாம் துணை புரிந்ததன் மூலம் அமெரிக்காவும் ரஷ்யாவும் தாபம் தணிந்து நெருங்கி வருவதற்கு ஓர் அளவு நேருஜி உதவும்படியாக இருந்தார் என்பது உண்மையே. இதன் விளைவாக இரு வல்லரசுகளுடனும் நமது நட்பு வளர்ந்து, ஆப்பிரிக்க நாடுகளின் வேகமான விடுதலைக்குத் துணை புரிந்தது என்றும் சொல்ல முடியும். 1956-இல் எகிப்து மீது பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய மூன்றும் படையெடுத்த காலையில் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் சேர்ந்து கொண்டு இந்தியா எழுப்பிய உறுதியான கண்டனக் குரல் பயனளித்தது நேருஜியின் கொள்கைக்கு மற்றொரு வெற்றி.

நட்புறவும் உதவியும்

நமது இமாலய எல்லையில் பல பகுதிகள் மீது கம்யூனிஸ்ட் சீனு உரிமை கொண்டாடுவது போலவே ரஷ்யா விஷயமாகவும் பிரதேசவுரிமைகளை வற்புறுத்துகிறது. தவிர கம்யூனிஸ்ட் சீனு சண்டைக்கிடாவாகி, உலக யுத்தம் வந்தாலும் வரட்டும் என்ற துணிச்சலில் கெடுபிடி செய்யவே அதற்குத் தந்த உதவிகளை நிறுத்திவிட்டு, தன் நேசவுறவுகளை பலப்படுத்திக் கொள்ள ரஷ்யா முற்பட்டது. 1962-இல் சீனு ஆக்கிரமிப்புத் தொடங்கியவுடன் ரஷ்யாவின் நிலையில் சிறிது தடுமாற்றம் இருந்தது. பிறகு விரைவில் அதை மாற்றிக் கொண்டு இந்தியாவுக்குக் குருஷ்சேவ் முழு ஆதரவு தரலானுர்.

ஆக்கிரமிப்பு வந்தவுடன் அவசர அவசரமாகப் போர்ச் சாதனங்களை அமெரிக்காவும் பிரிட்டனும் கொடுத்து உதவின. சமீபத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, 'மிக்' ஜெட் விமானங்களை இந்தியாவில் தயாரிப்பதற்கு உதவுவதாக ரஷ்யா ஏற்றுக் கொண்டது. ஆனுல் குருஷ்சேவின் சீட்டுக் கிழிந்து விட்டதன் விளைவாகச் சோவியத்தின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சோவியத் கொள்கை சீனுவுக்குச் சாதகமாகத் திரும்பினுல் என்னவாகும்? திமிர் அதிகமாகி புது ஆக்கிரமிப்பில் இறங்கினுல் நம்மைப் பூராவாக ஆதரிக்கக் கூடிய நட்புறவு இல்லையே? தோஷ்டி - சேராக் கொள்கையினுல் இலாபமிருந்திருக்கலாம். ஆனுல் தேச பந்தோபஸ்தை அதனுல் உறுதி செய்ய முடியுமா? இது லால்பகதூர் சர்க்கார் கவனித்து முடிவு செய்தாக வேண்டிய பிரதானப் பொறுப்புக்களில் ஒன்று.

கடல் கடந்த இந்தியர்

நேருஜியின் கொள்கை பயனளிக்கத் தவறிய மற்ருெரு துறை, கடல் கடந்து வாழும் இந்தியர்களின் நலவுரிமை விஷயம். முக்கியமாக ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அண்மையில் சுதந்திரமடைந்த நாடுகளில்தான் இது பெரிய பிரச்னையாக உள்ளது. சுதேசிகளுடன்கூடச் சம அடிப்படையில், முழு பிரஜாவுரிமையுடன் அவர்கள் நடத்தப்படுவதற்கு வழி செய்யாதது ஒரு அடிப்படையான குறை. பிரிட்டிஷ் சர்க்கார் தமது இனத்தவரைக் கவனித்துக் கொண்டார்கள். அதே மாதிரி நேருஜி இந்நாட்டின் செல்வாக்கை உபயோகித்து, அங்கெல்லாம் வசிக்கின்றவர்களின் நியாயமான உரிமைகளைக் காப்பாற்றத் தவறிவிட்டார். இந்தத் தேசங்களின் விடுதலைக்கு அவர் பெரிதும் துணை புரிந்தவர், எனவே நேசப் பான்மையில் அணுகி, காலா காலத்தில் தமது ராஜ தந்திரத்தை உபயோகித்துப் பாடுபட்டிருந்தால் நிச்சயமாக வெற்றி கிடைத்திருக்கும். அவரது முயற்சியில்லாமல் நியாய வுணர்வுடன், ஒழுங்காக இந்தியரை நடத்துகின்ற ஒரே புதுச் சுதந்திர நாடு மலாசியா. அங்குள்ளது போன்ற சூழ்நிலையைப் பிறவிடங்களிலும் தோற்றுவிக்க அவர் தவறிவிட்டார்.

நேருஜி இந் நாட்டின் அந்தஸ்தை உலகில் உயர்த்திய சரித்திர புருஷன். விடுதலைவீரர். சமாதானத்தின் காவலன். உலகெங்கும் சுதந்திரம் விரிவு காணத் துணை புரிந்தார். நமது பொருளாதார வளர்ச்சிக்குப் பரவலாக சர்வதேச உதவி கிடைக்கச் செய்தார். சமாதானத்துக்காக இடையருது உழைத்தார். அதை உருவாக்குவதில் ஓரளவு வெற்றியும் கண்டார். அவரது மனிதாபிமானம் இணையற்றது. ஆனல் வளர்த்த கிடா மார்பில் பாய்வது போல கம்யூனிஸ்ட் சீனு தாக்கிய துரோகம் பேரதிர்ச்சியைக் கொடுத்து, அவரது முடிவு நெருங்கி வரும்படி செய்துவிட்டது.

'கலைக்கதிர்'

சந்தா விவரம்.

	உள்நாடு (இலங்கை உட்பட)	வெளிநாடு
ஆண்டுச் சந்தா மலருட்பட	ரூ. 10—00	ரூ. 14—50
ஆண்டுச் சந்தா மலர் நீங்கலாக	ரூ. 7—00	ரூ. 10—00
இரண்டாண்டுச் சந்தா மலருட்பட	ரூ. 19—00	ரூ. 28—00
இரண்டாண்டுச் சந்தா மலர் நீங்கலாக	ரூ. 13—00	ரூ. 19—00
அரையாண்டுச் சந்தா மலருட்பட	ரூ. 6—75	
அரையாண்டுச் சந்தா மலர் நீங்கலாக	ரூ. 3—75	
தனி இதழ்	ரூ. 0—66	ரூ. 1—00
பொங்கல் மலர்	ரூ. 3—00	ரூ. 4—50

இது செய்தி

கெய்ரோ, — அக்டோபர் —12.

கெய்ரோவில் கூடிய நடுநிலை நாடுகள் மாநாட்டின் முக்கிய விளைவாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படவும், குடியேற்ற ஆதிக்கத்திலுள்ள பகுதிகளை விடுவிக்கப் படைவலிமையைப் பயன்படுத்தவும் இம்மாநாடு திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு முடிவாகும்.

மாசுகோ — அக்டோபர் —13.

மூவருடன் வானவெளியில் பயணம் செய்த ருசியக் கப்பல் வாஸ்காட் இன்று குறிப்பிட்ட இடத்தில் வெற்றிகரமாக இறங்கியது.

மாசுகோ — அக்டோபர் —16.

சோவியத் பிரதமர் நிகிதா குருஷேவ் தமது பிரதம மந்திரி பதவியையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது காரியதரிசிப் பதவியையும் இராஜினமா செய்துவிட்டார்.

அவருக்குப் பதிலாக பிரதம மந்திரி பதவியை கோஸிஜின்னும், கட்சிக் காரியதரிசிப் பதவியை பிரஸ்நேவும் பதவியேற்றனர்.

புது டில்லி — அக்டோபர் —24.

இலங்கை இந்தியர் சிக்கல் பற்றிப் பேச்சு இன்று காலை இங்குத் தொடங்கியது.

இந்தியத் தலைமை அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும், இலங்கைத் தலைமையமைச்சர் திருமதி பண்டாரநாயகாவும் இப்பேச்சில் முறையே இந்திய, இலங்கைக் குழுவிற்குத் தலைமை தாங்கினர்.

சைகோன் — அக்டோபர் —25.

தென் வியட்நாமில் முதன்முதலாக இராணுவ சார்பற்ற ஆட்சி ஏற்பட்டுள்ளது. புதிய தலைவர் ஒருவரும் புதிய தலைமை அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்கத்தா — அக்டோபர் — 25.

நிலவரியையும் விவசாயக் கடன்களையும் விவசாய உற்பத்திப் பொருள்களாக வசூலிப்பது பற்றி ராஜ்ய சர்க்கார்கள் பரிசீலிக்க வேண்டுமென்று பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி இன்று யோசனை தெரிவித்தார்.

ஆமதாபாத் — அக்டோபர் — 26.

இந்தியாவில் செய்யப்பட விருக்கும் டாங்கின் மாதிரி ஒன்று நேற்று இங்குப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஒய். பி. சவான், மற்றும் ராணுவ அதிகாரிகளின் முன்பு ஓட்டிக் காட்டப்பட்டது. இந்த மாதிரியான மத்திய ரக டாங்குகள் சென்னைக்கு அருகிலுள்ள ஆவடியில் தயாரிக்கப்படும். இவைகளுக்கு 'வைஜயந்த்' (இறுதி வெற்றி) என்று பெயரிடப்படும்.

THE PIONEER TEXTILES,

RANGASWAMY NAGAR, VEDAPATTI.

WORKS:
VEDAPATTI
Phone: 4155

OFFICE:
PEELAMEDU
Phone: 4144

*

SPINDLES: 12,216

*

Manufacturers of:

Nf. 52 & Nf. 68 Cotton Yarn.

A LEADING HOUSE IN THE LINE
IN SOUTH INDIA

Telegrams: "RANGAVILAS" Telephones: { 2536 2537

Sri Ranga Vilas
Ginning, Spinning & Weaving Mills Limited

(Established in 1922)

PEELAMEDU P. O., :: COIMBATORE-4.

*

Spinners of Superior kinds of

CARDED YARNS from Nf. 2 to Nf. 48 Counts

and

CONE YARNS from Nf. 17 to Nf. 68 Counts..

*

Managing Agents:

P. S. G. & SONS.

தரத்திலும், உறுதியிலும்
நீடித்து நிற்கக் கூடியவை!

PSG

தயாரிப்புகள்



டீசல் என்ஜின்

இதர தயாரிபபுகள்

மோட்டார்கள்

லேததுகள்

பேலிங் பிரஸ்

லெபாரேடரி கருவிகள்



பம்பு செட்டு

P.S.G. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்

பீளமேடு, கோயமுத்தூர்-4

Regd. No. M. 5306 KALAIKATHIR November 1964
(Registered as a Newspaper in Ceylon)

Printed at Kalaikathir Achchagam, Avanashi Road, Coimbatore-1.